
கல்கி



KALKI ஜூலை 5, 1953

4 அணா



வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பில் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT
SOAP
SUNLIGHT SOAP

S. 205-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 12 இதழ் 49	1953 ஜூலை 5	விஜய ஆ ஆனி 21உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 12 | இதழ் 49

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

வேண்டாம் என்றால், வேண்டாம்!

திருவாங்கூர்-கொச்சியைச் சென்னை இராஜ்யத்துடன் இணைத்து விடலாம் என்று மலையாள ஜில்லா மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது. இந்த யோசனையைக் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கும்படி நாஞ்சில் நாட்டுத் தமிழர்களைக் கேட்டிருந்தோம். சில கடிதங்களை வேறிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். மிகப் பெரும்பாலான கடிதங்கள் இணைப்புக்கு எதிராகவே வந்திருக்கின்றன.

அத்துடன், திருவாங்கூர்-கொச்சியில் உள்ள மலையாளிகள் பலரும் மேற்படி யோசனையை எதிர்ப்பதாக அன்பர்களின் கடிதங்களிலிருந்து வெளியாகிறது.

"மலையாளிகள் ஒருமுகமாக விரும்பினால் தமிழர்களுக்கு அதனால் பிரதிகூலமிருந்தாலும் இணைப்பை ஒப்புக் கொள்ளலாம்" என்று நமது கருத்தைப் "பலே மலையாளிகள்!" என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தோம்.

திருவாங்கூர் - கொச்சி மலையாளி சகோதரர்கள் ஒருமுகமாக அவ்வாறு விரும்பவில்லை யென்பது இப்போது நன்கு தெரிகிறது. "துணி உடுத்தவுந் தெரியாத தமிழர்களுடன் நாகரிகத்தில் சிறந்த மலையாளிகள் சேருவதா?" என்றும் சிலர் கேட்கிறார்களாம். ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. இணைப்பு மலையாளிகளுக்கு வேண்டாம் என்றால், நமக்கும் வேண்டாம்; வேண்டவே வேண்டாம்!

தமிழர்களுக்குப் பல பிரதிகூலங்கள் இருந்த போதிலும் திருவாங்கூர் - கொச்சியை நம்முடன் இணைத்துக் கொள்ள இணங்கலாம் என்ற கருத்தை நாம் வெளியிட்டதின் காரணம், முக்கியமாக நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் நலனை முன்னிட்டுத்தான்.

சென்ற பல வருடங்களாக நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் திருவாங்கூர்-கொச்சியில் பட்டு வரும் அவதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றைக் குறித்துக் "கல்கி" இதழ்களில் பல முறை எழுதப்பட்டிருக்கிறது.

திருவாங்கூர் - கொச்சியைச் சென்னை ராஜ்யத்துடன் இணைத்து விட்டால் நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் கவலைகளும் தொல்லைகளும் உடனடியாக நிவர்த்தியாகி விடும். அத்தகைய இணைப்பு இல்லை யென்றால், நீடித்த போராட்டம் அவர்கள் நடத்தியே தீரவேண்டி யிருக்கும்.

சென்ற பொதுத் தேர்தலில் திருவாங்கூர்-கொச்சியில் இடதுசாரிக் கட்சிகள் கணிசமான வெற்றியடைந்தன. இதன் காரணமாக, அந்த இரட்டை இராஜ்யத்து மலையாளி காங்கிரஸ் வாதிகளுக்குத் தமிழ்க் காங்கிரஸ்வாதிகளின் ஒத்துழைப்பு இன்றியமையாததா யிருந்தது. ஆகையினாலேயே தமிழர்களின் ஒத்துழைப்பைக் கோரி மந்திரி சபையிலும் ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். இதனால் நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் நிலைமை முன்போல் அவ்வளவு மோசமாக இராமல், தற்போது சிறிது அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆயினும் ஒரு பக்கத்தில் தமிழருக்கு விரோதமான இயக்கங்களும் துவேஷப் பிரசாரங்களும் நடந்து வருகின்றன.

இடது சாரிகளின் பலம் குறைந்து விட்டால், உடனே திருவாங்கூர்-கொச்சியிலுள்ள மலையாள அரசியல்வாதிகள் பழையபடி தங்கள் உண்மை சொரூபத்தைக் காட்டத் தொடங்கி விடக்கூடும் என்பது நிச்சயம். இதற்கு நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் எப்போதும் தயாரா யிருக்க வேண்டும்.

நாஞ்சில் நாடு முதலிய தமிழ்ப் பகுதிகள் மட்டும் திருவாங்கூர்-கொச்சியிலிருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்பதுதான் அப்பிரதேசங்களில் வாழும் நம் தமிழ் சகோதரர்களின் கோரிக்கை. ஆனால் இது அவ்வளவு சுலபமாக நடந்து விடக்கூடியதல்ல வென்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

"ஐக்கிய கேரளம்" ஏற்படுத்தும் விஷயத்தில் மலையாளிகள் தங்களுக்குள் பிரிவுபட்டிருக்கிறார்கள். ஆகையால் ஐக்கிய கேரளம் சமீப காலத்தில் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. "தனிப்பட்ட மலையாள இராஜ்யம் வேண்டாம்" என்று சொல்லுகிறவர்கள் மீது, எப்படி மலையாள ராஜ்யத்தைச் சுமத்த முடியும்? திருவாங்கூர்-கொச்சிக்காரர்கள் "நாங்கள் தனித்து நிற்போம்" என்று பிடிவாதம் பிடித்தால்

அவர்களைத்தான் பொது மலையாள ராஜ்யத்துடன் சேரும்படி எப்படிக் கட்டாயப் படுத்த முடியும்!

திருவாங்கூர் – கொச்சி தனியா யிருக்கும் வரையில், நாஞ்சில் நாடு தமிழ் நாட்டுடன் இணைவதற்கு மலையாளிகளின் எதிர்ப்புத் தீவிரமாக இருந்து வரும். ஐக்கிய கேரளம் ஏற்படும்போது கூட, நாஞ்சில் நாட்டை விட்டுவிட இலேசில் சம்மதிக்க மாட்டார்கள். "மலையாளத்தில் நெல் விளையும் பகுதி அது ஒன்றுதான்; அதை எப்படி நாங்கள் விடமுடியும்!" என்று கேட்பார்கள்.

ஆந்திர சகோதரர்கள் செய்து வந்திருக்கும் சண்டித்தனமெல்லாம், மலையாளிகளுக்கு, முன் மாதிரியாக இருந்து உதவக் கூடும்.

தமிழ்நாட்டுத் தலைவர்களிட மிருந்து பிரமாதமான உதவி எதுவும் எதிர்பார்த்து ஏமாற்றமடைய வேண்டாம் என்பதையும் நாஞ்சில் நாட்டுத் தமிழர்களுக்கு இச்சமயத்தில் நாம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திருத்தணிப் பகுதியில் உள்ள தமிழர்கள் எவ்வித உதவியைத் தமிழ் நாட்டுத் தலைவர்களிடம் பெற்று வருகிறார்கள் என்பது நம் கண் முன்னால் உதாரணமளித்து வருகிறது.

சென்னை நகரமே பறிபோய் விடுவதற்கிருந்தது. ஏதோ தமிழர் செய்த அதிர்ஷ்ட வசத்தினால் தப்பிப் பிழைத்தது. மற்றபடி, தமிழர் வாழும் சிறு பகுதிகளைப் பற்றிக் கேட்பானேன்!

வடநாட்டிலுள்ள தலைவர்களுக்கும் சரி, சாதாரண ஜனங்களுக்கும் சரி, நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் கோரிக்கை மனதில் ஏறுவதே கடினம்.

"மலையாளம் ஒரு சிறிய இராஜ்யம்; அதிலும் ஒரு பகுதியை இந்தத் தமிழர்கள் அடித்துக் கொள்ளப் பார்க்கிறார்களே!" என்றுதான் வடநாட்டவருக்குத் தோன்றும்.

இந்த அவசர ஜனநாயக யுகத்தில் நியாய அநியாயத்தை நிதானமாக யோசித்து முடிவு செய்யக் கூடியவர்கள் மிக அபூர்வம்.

"மலையாளம் சின்ன ராஜ்யம்; உணவுப் பற்றாக் குறை ராஜ்யம். அதில் நெல் விளையும் ஒரே ஒரு பகுதியையும் தமிழ்நாடு அபகரிக்கப் பார்க்கிறது" என்று மலையாளிகள் புதுடில்லியில் கூச்சல் போட்டால், அதுதான் அங்கேயுள்ள அரசியல் தலைவர்களின் காதில் விழும். மனதிலும் குடிகொள்ளும்.

"நீங்கள்தான் கொஞ்சம் விட்டுக் கொடுங்களேன்!" என்று தமிழர்களுக்குத் தர்மோபதேசம் செய்யத்தான் வடநாட்டார் எல்லோரும் முன் வருவார்கள்.

இதையெல்லாம் நாஞ்சில் நாட்டிலுள்ள தமிழர்கள் எண்ணிப் பார்த்து, நீண்டகால இடைவிடாப் போராட்டத்துக்கும், அதில் பல கஷ்ட நஷ்டங்களை அநுபவிப்பதற்கும் தங்களைத் தயார் செய்து கொள்ளுவார்களாக.

ஆசிரியர் பிரதிநிதி பேசுகிறார்!

சென்னை இராஜ்ய மேல் சட்டசபையில் நாலு ஸ்தானங்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்விதம் ஆசிரியர்களால் வோட்டுக் கொடுத்துத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஸி. ஒருவர். இவர் சமூகத்தில் வேறுவித செல்வாக்கு உள்ளவர் அல்ல; பெரிய உத்தியோகத்தில் இருந்து விலகியவர் அல்ல; கலாசாலைப் பேராசிரியர்கூட அல்ல. ஸெகண்டரி ஸ்கூல் ஆசிரியராக இருந்தவர். ஆசிரியர் சமூகத்தின் நன்மைக்காகப் பாடுபட்ட திறமைசாலி என்ற ஒரே காரணத்துக்காகவே இவரை ஆசிரியர் சமூகத்தார் ஆதரித்து வோட்டுக் கொடுத்து மேல் சட்டசபைக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி சென்ற 1952-ம் வருஷத்திலேயே சென்னை மேல் சபையில் பேசுகையில், "ஆரம்பக் கல்வியைச் சுதந்திர இந்தியாவுக்குத் தகுந்த முறையில் மாற்றி அமைக்க வேண்டும். பள்ளிக்கூடம் ஒரு வேளை வைத்து மற்றொரு வேளை பிள்ளைகள் கைத்தொழில் பயில வசதி அளிக்க வேண்டும்" என்ற கருத்தை வெளியிட்டார். ஆரம்பக் கல்வி முறையை மாற்றி அமைக்கச் சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்யவில்லை என்று புகாரும் கூறினார்.

இதன்பேரில் கல்வி மந்திரி டாக்டர் எம். வி. கிருஷ்ணராவ் அத்தகைய திட்டம் ஒன்று தயாராகி வருகிறது என்று சொல்லிச் சில விவரங்களையும் வெளியிட்டார். ("கல்கி" 27—7—52 இதழில் கல்வி மந்திரியின் பேச்சை வரவேற்றுத் தலையங்கமும் எழுதப்பட்டது. இதிலிருந்து புதிய கல்வித் திட்டம் முன்னறிவிப்பு இன்றித் திடீரென்று கொண்டுவரப்பட்டது என்று சொல்வது வெறும் பொய் என்பதை அறியலாம்.)

முன்னர் அவ்வாறு பேசிய ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஸி.யின் குரல் புதிய கல்வித் திட்டம் வெளியாகி யிருக்கும் இச் சமயம் கேட்க முடியவில்லையே!—ஒருவேளை அவர் எவரெஸ்ட் சிகரத்தைப் பிடிக்கப் போயிருக்கிறாரா!—அல்லது பலர் சேர்ந்து எதிர்ப்புக் கூக்குரல் போடுவதைக் கேட்டுத் தாமும் பின் வாங்கி விட்டாரா!—இவ்விதம் நாம் யோசனை செய்யும்படி நேர்ந்தது.

கடைசியாக, ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஸி.யின் குரல் குடந்தையிலிருந்து கணீர் என்று ஒலித்திருக்கிறது. ஜூன் மீ 20௳ அந்நகரில் நடந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சங்க ஆண்டு விழாவில் ஆசிரியர்களின் பிரதிநிதியாக ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி புதிய கல்வித் திட்டத்தைக் குறித்துத் தம் கருத்தைத் தெள்ளத் தெளிய வெளியிட்டிருக்கிறார். ஒரு முக்கியமான செய்தியையும் அவர் வெளிப்படுத்தி யிருக்கிறார். சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வருவதுதான் இப்போது புதியதே தவிர, அது 1943ம் வருஷத்தில் ஆசிரியர்களே சேர்ந்து தீர்க்காலோசனை செய்து ஒப்புக்கொண்டு வெளியிட்ட திட்டந்தான் என்று தெரியப்படுத்தி யிருக்கிறார். அதைக் கல்வித் துறையில் புகழ்பெற்ற நிபுணரான ஸ்ரீ ஸ்டாதம் துரை ஆதரித்தார் என்பதையும் சொல்லியிருக்கிறார். அவருடைய வார்த்தைகளிலேயே இன்னொரு தடவையும் படியுங்கள்:—

"ராஜாஜியின் கல்வித் திட்டம் ஆசிரியர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, தேச க்ஷேமத்துக்கும் சரி, இன்றியமையாத திட்டமாகும். இந்தத் திட்டம் ஆசிரியர் சமூகத்துக்குப் புதியதல்ல. 1943-ம் ஆண்டில் திருச்சி ஆசிரியர் மகாநாட்டில் வற்புறுத்தப்பட்ட திட்டமாகும். அதில் இரண்டரை மணி நேரந்தான் பள்ளிப் படிப்புக் கேட்டிருந்தோம். இப்போது மூன்று மணி நேரம் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் முன்னமே ஆசிரியர்களால் விரும்பப்பட்ட திட்டந்தான். கல்வி இலாகா டைரக்டராயிருந்த மிஸ்டர் ஸ்டாதம் இதை ஆதரித்தார். ஆசிரியர்களின்

கடவுள் காப்பாற்றினர்!



கடலிலிருந்து காப்பாற்றப்பட்ட பரதவர்கள் அகில இந்திய ரேடியோவில் அளித்தபேட்டியில் அவர்களைத் 'தெய்வாதீன'த்தினால் கப்பல் வந்து காப்பாற்றியதாகப் பல தடவை வற்புறுத்திச் சொன்னார்கள். ஆகவே, ஐ. என். எஸ். ராணா என்ற கப்பலின் பெயர் ஐ. என். எஸ். தெய்வாதீனம் என்று மாற்றப்படலாமல்லவா?

அந்தஸ்தும் சேவா உணர்ச்சியும் இந்தத் திட்டத்தினால் பெரிதும் வளர்ந்து, சமூகத்தில் நன்கு கௌரவிக்கப்படும் முற்போக்குப் பகுதியினராக மதிக்கப்படுவார்கள். இத்தகைய திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்தவேண்டியது உங்கள் பொறுப்பு......"

ஆசிரியர்களின் பொறுப்பைக் குறித்து இவ்விதம் கூறியுள்ள ஆசிரியரின் பிரதிநிதி, சமூகத்துக்குப் புதுத் திட்டத்தினால் விளையக் கூடிய நன்மையைப் பற்றிச் சொல்லியிருப்பதையும் கேளுங்கள் :—"இந்தத் திட்டத்தினால் ஏழைகள்தான் பெரிதும் பயன் அடைவார்கள். இதுவரையில் இவர்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தார்கள். வசதியுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஏழைகள், பின் தங்கிய வகுப்பினர், ஹரி ஜனங்கள், இவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க வழியில்லாமலிருந்தது. காரணம், இந்தக் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு உதவி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்து வருவதுதான். இப்போது அக்குழந்தைகள் பெற்றோர்களுக்கும் உதவி செய்து கொண்டு, படிக்கவும் படிக்கலாம். இப்படியிருக்க, பின் தங்கிய வகுப்புகளுக்குப் பாடுபடுகிறோம் என்று பறை சாற்றுகிறவர்கள் இத்திட்டத்தை எதிர்ப்பது விபரீதச் செய்கையாகும். வேறு காரணங்களை மனதில் கொள்ளாமல் குழந்தைகளின் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு பார்க்கும் எவரும் இதற்கு ஆட்சேபணை செய்ய முடியாது."

இவ்வாறு, ஆசிரியர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தமது கருத்தை ஐயந்திரிபுக்கிடமின்றி வெளியிட்டுப் புதிய கல்வித் திட்டத்தை வரவேற்பது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இதிலிருந்து, மங்களூரில் மகாநாடு கூடி அவசரக் குடுக்கைத் தீர்மானம் செய்தவர்கள் ஆசிரியர்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்ல என்பது ஊர்ஜிதமாவதால், அதைக் குறித்து இரட்டிப்பு மகிழ்ச்சி எய்துகிறோம்.

"படித்த முட்டாள்" யார்?

சில தினங்களுக்கு முன்னால், தினப் பத்திரிகையில், ஒரு துயரமான செய்தி வெளியாகியிருந்தது. விருதுநகரில் திரு ஆத்தியப்ப நாடார் மகன் பதினெட்டு வயதுள்ள மாரியப்பன் என்னும் இளைஞன் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தானாம்.

"கணக்கு எனக்குத் தெரியாததால் நான் படித்தும் முட்டாளாயிருக்கப் பிரியமில்லாமல் தற்கொலை செய்து கொள்ளுகிறேன்" என்று எழுதிய சீட்டு அந்தப் பரிதாப மரணமடைந்த இளைஞனின் சட்டைப் பையில் இருந்ததாம்.

"அரசாங்க வைத்திய சாலை டாக்டர் கணபதி பிரேத விசாரணை நடத்தினார். தற்கொலை என்று தீர்மானிக்கப்பட்டது" என்று அந்தத் துயரகரமான செய்தி முடிவடைகிறது.

மாரியப்பன் உண்மையில் படித்த முட்டாள் தானே! அவனைச் சுற்றியிருந்து "உனக்குக் கணக்குப் போட வரவில்லை; ஆகையால் நீ படித்த முட்டாள்!" என்று சொல்லிக் கொண்டிருந்த பாதகர்களைப் "படித்த முட்டாள்கள்" என்று சொல்வது அதிகப் பொருத்தமாயிராதா! இந்தப் படித்த முட்டாள்களே மாரியப்பனுடைய தற்கொலைக்கு உண்மையில் ஜவாப்தாரிகள் என்று சொல்லலாம் அல்லவா!—

சிறு பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு விஷயத்தில் திறமை இல்லை என்பதற்காக அவர்களைக் குத்திக் காட்டுவதும் மனம் புண்படும்படி பேசுவதும் பெரும் பாதகம் ஆகும்.

மனிதனுடைய மூளை அமைப்பு வெவ்வேறு வகைப்பட்டது. ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு காரியத்தில் மூளை திறமையாக வேலை செய்யும்.

சில பிள்ளைகளுக்குக் கணக்கில் இயற்கையான மூளைத் திறமை இருக்கும். இவர்கள் பரீட்சைகளில் எல்லாக் கணக்குகளும் சரியாகப் போட்டு நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குவார்கள்.

வேறு சில பிள்ளைகள் மற்றப் பாடங்களில் கெட்டிக்காரர்களா யிருப்பார்கள்; கணக்குப் பரீட்சையில் 'கோழிமுட்டை' வாங்குவார்கள்.

கணக்கு வரவில்லை யென்பதனாலேயே சிறுவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டுவது அறிவீனமும் பாதகமுமாகும்.

எவரெஸ்ட் சிகரத்தை முதல் முதலாக எட்டிப் பிடித்த டென்ஸிங்குக்குக் கணக்கு வராது. அவன் எந்தக் கணக்குப் பரீட்சையிலும் 100-க்கு 100 மார்க் வாங்கியதில்லை. அவனுடைய படிப்பே மிகச் சொற்பந்தான். ஆயினும் அவனுடைய பெயர் இன்று உலகப் பிரசித்தி அடைந்து விடவில்லையா! அவனுக்கு மரியாதை செய்து பெருமைப் படுத்துவதற்காகப் பெருந்திரளான மக்களும் மந்திரிகளும் கவர்னர்களும் ஜனாதிபதியும் போட்டியிட்டுக் கொண்டு முன்வரவில்லையா!

தனக்குக் கணக்குப் போட வரவில்லை என்பதற்காக டென்ஸிங் சிறு வயதில் தற்கொலை செய்து கொண்டிருந்தால், உலகம் எப்பேர்ப்பட்ட விபரீத நஷ்டத்தை அடைந்திருக்கும்!

இளம் பிராயத்தில் கணக்கு வராதவர்கள் பலர் பிற்காலத்தில் பெரிய இராஜ தந்திரிகளாகவும், போர் வீரர்களாகவும், நடிகர்களாகவும், கவிஞர்களாகவும் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

சிறுபிராயத்தில் கணக்கு வராதவர்கள் எத்தனையோ பேர் பெரும் தொழிலதிபர்களாகி லட்சக் கணக்கில் பணமும் சேர்த்திருக்கிறார்கள். அவர்களில் சிலருக்குத் தங்களுடைய சொத்து எவ்வளவு என்பதைக் கணக்கு போடத் தெரியாது! அதற்காகக் குமாஸ்தாக்களை வைத்துக் கொண்டு தெரிந்து கொள்கிறார்கள்!

* * *

"எனக்குக் கணக்கு வரவில்லை" என்று ஒரு பிள்ளை தூக்குப் போட்டுக் கொண்டான் என்றால், எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் கணக்கு வரவில்லை என்பதற்காகவோ, வேறு பாடம் வரவில்லை என்பதற்காகவோ மனச்சோர்வு அடைந்து தோல்வி மனப்பான்மை கொள்கிறார்கள்.

இதனால் சுதந்திர இந்தியா தேசம் அடைந்து வரும் நஷ்டத்தை அவரவர்களும் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.


இந்தப் பெருங்குறையை நீக்கக் கூடியது சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டம். கையினால் வேலை செய்து ஒரு பொருளை உற்பத்தி செய்யும் சக்தி படைத்த எந்த இளைஞனும் மனச்சோர்வு கொள்ள மாட்டான். வாழ்க்கையில் ஊக்கம் கொண்டிருப்பான். வாழ்க்கையின் பலதுறைப்பட்ட துறைகளில் ஏதேனும் ஒன்றில் வெற்றி அடையலாம் என்றும் நம்பிக்கை கொண்டிருப்பான். வெற்றியும் அடைவான். டென்ஸிங்கைப் போல் உலகமே போற்றக்கூடிய வெற்றியையும் சிலர் அடையக் கூடும்.

புதிய கல்வித் திட்டத்தின் கீழ் பயிலும் பிள்ளைகளில் யாரும் "படித்த முட்டாள்"களா யிருக்க மாட்டார்கள். ஒருவரை யொருவர் "படித்த முட்டாள்" என்று சொல்லிக் கொள்ளவும் மாட்டார்கள். "கற்றறி மூடர்கள்" என்ற பழைய கதைக்கு உதாரணமே இல்லாமற் போய்விடும். அந்த நாள் விரைவில் வருவதாக.

சர்க்கார் எதற்காக இருக்கிறது?

கற்பனா சக்தியைச் செலுத்தி ஒரு விஷயத்தைச் சிந்தித்துப் பாருங்கள். ஜப்பான் தேசத்திலே குடிசைத் தொழில்கள் அமோகமாக வளர்ந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள் அல்லவா! இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இங்கிருந்து சில நிபுணர்கள் ஜப்பானுக்குப் போய் அங்கே நடைபெறும் குடிசைத் தொழில்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருவதாக வைத்துக் கொள்ளலாம். அந்த நிபுணர்கள் வந்து புதிய குடிசைத் தொழில்களைப் பெருக்கும் ஐந்து வருஷத் திட்டம் ஒன்று வகுக்கிறார்கள். அதன்படி இருபது லட்சம் குடும்பங்களும் இரண்டு கோடி ஜனங்களும் ஈடுபட்டு ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளக் கூடிய புதிய குடிசைத் தொழில்கள் நம் நாட்டில் ஏற்படுகின்றன.—இப்படிக் கற்பனை செய்து கொண்டு பார்த்தால், அதை எவ்வளவு மகத்தான சாதனை என்று நாம் கொண்டாடுவோம்! உலக சரித்திரத்திலேயே இத்தகைய சாதனையைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்று குதூகலப்பட மாட்டோமா! இந்திய சுதந்திர சர்க்காரின் இந்த அற்புத சாதனையை உலகமே வியந்து பாராட்டிப் புகழ்மாலை சூட்டாதா!

ஆனால், இப்போது நம் நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று பாருங்கள். நம் கண் முன்னால் நடைபெற்று வரும் பிரத்யட்ச நிகழ்ச்சிகளைக் கவனித்துப் பாருங்கள். இருபது லட்சம் குடும்பங்களுக்குப் பிழைப்புத் தரும் அற்புதமான குடிசைத் தொழில் ஒன்று, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் வளர்ந்து வேரூன்றிய குடிசைத் தொழில் ஒன்று, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறது. நூற்றைம்பது வருடத்துப் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் தப்பிப் பிழைத்து விட்ட கைத்தறித் தொழில், இன்று சுதந்திர இந்தியாவில், குற்றுயிரும் குலை உயிருமா யிருக்கிறது. அந்த அற்புதமான குடிசைத் தொழிலுக்குப் பெரிய மூலதனம் திரட்ட வேண்டியதில்லை. சர்க்கார் கடன் வசூலிக்க வேண்டியதில்லை. அமெரிக்கா தேசத்திடமிருந்து உதவி கேட்க வேண்டியதில்லை. அதனால் விளையக்கூடிய சர்வ



உன்னத சிகரத்தின் மீது ஏற யாரும் பிரயத்தனப்பட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.
("நேருஜிதான் தென்கிழக்கு ஆசியாவின் ஈடு இணையற்ற தலைவர்!"
என்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை போற்றி யிருக்கிறது.)

தேசியச் சிக்கல்கள் இல்லை. புதிதாகத் தொழிலாளிகளுக்குப் பயிற்சி தர வேண்டியதில்லை. வெளி நாடுகளிலிருந்து கருவிகளை இறக்குமதி செய்ய வேண்டியதில்லை. இருபது லட்சம் குடிசைகளில் இருபது லட்சம் கைத்தறிகள் வேலை செய்யத் தயாரா யிருக்கின்றன. அவற்றில் வேலை செய்வதற்கு அதிசயமான கைத்திறன் வாய்ந்த தொழிலாளிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு கைத்தறிக்கும் வேண்டிய சொற்ப மூலதனமும் அவரவர்களிடம் இருக்கிறது. உற்பத்தியாகும் துணியை வாங்கி உடுத்துவதற்கோ, தேசத்தில் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள்.

ஆயினும் அப்பேர்ப்பட்ட அதிசயமான கைத்தறித் தொழில், எதைக் காப்பாற்றுவதற்காகச் சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்டோமோ

இரண்டு ரகத் துணிகளைக் கைத்தறிக்கு என்று ஒதுக்கி வையுங்கள் என்று கேட்கிறோம்.

"கரை போட்ட வேஷ்டிகளும் சாயச் சேலைகளும் மட்டும் கைத்தறிக்கு என்று இருக்கட்டும்; கரை யில்லாத பீஸ்கள், வெள்ளைச் சேலைகள், கோட், ஷர்ட், பனியன், கால் சட்டை முதலியவற்றுக்குத் தேவையான மற்ற சகலமான ரகங்களையும் ஆலைகள் நெய்து போட்டி யிட்டும்" என்று கோருகிறோம்.

இந்தக் கோரிக்கையைச் சென்னை மக்களின் சார்பாகச் சென்னைச் சட்டசபை—பரஸ்பர எதிரிகளான பல கட்சி அங்கத்தினர் அடங்கிய சட்டசபை—ஒரு முகமாக நிறைவேற்றியது. சென்னை சர்க்காரும் வற்புறுத்தினார்கள். ஆனால் இந்திய சர்க்கார்

மையைக் கலந்து எழுதி அச்சிட்டிருக்கிறார். இன்னும் விமோசனம் பிறக்கவில்லை.

இந்திய சர்க்கார் இப்படித் தங்கள் கடமையைச் செய்யாமலிருக்கிறார்களே என்பதற்காகக் கோபித்துக் கொண்டு வருத்தப்பட்டுப் புகார் சொல்வதுடன் நாம் நின்று விடலாமா!

நம்முடைய ஏழைத் தொழிலாளிச் சகோதரர்களுக்கு நம்முடைய கடமையை நாம் செய்தேயாக வேண்டும். இந்திய சர்க்காரின் இரும்பு மனம் இளகும் வரையில் கைத்தறிக்காரர்கள் உயிரோடிருந்து வருவதற்காவது உதவி புரிய வேண்டும்.

கைத்தறித் தொழிலின் தற்போதைய நிலையைப் பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகக் கைத்தறிக் குடிசைத் தொழில்களின் கண்காட்சி சென்னை ஐலண்டு மைதானத்தில் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலாளரின் மாகாணக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் இக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

டாக்டர் அளகப்ப செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஸ்ரீ பெருமாள்சாமி ரெட்டியார், டாக்டர் கோபாலசாமி முதலியவர்கள் பிரம்மப் பிரயத்தனங்கள் செய்து இக் கண்காட்சியை அமைத்திருக்கிறார்கள். இதற்காக அவர்கள் பட்டிருக்கும் பிரயாசை ஒரு ஜன்மத்துக்குப் போதும் என்று சொல்லலாம். அவ்வளவு இடையூறுகளைத் தாண்டிக் கண்காட்சியை ஜூன் மாதம் 26-உ ஆரம்பித்து விட்டார்கள்.

இத்தகைய உத்தமமான கைங்கர்யத்துக்காக நடத்தப்படும் கண்காட்சியைச் சென்னை நகர மக்கள் பரிபூரணமாக ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

கண்காட்சிகளில் சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் கலைப் பொருள் காட்சி, ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் உண்டு. சிறப்பாக, நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் அவர்களுடைய நாடகங்களுக்குள் மிகப் பிரசித்தி பெற்ற ஏகநாதர் நாடகத்தைப் பத்து தினங்கள் நடத்துகிறார்கள். இது மிகவும் பொருத்தமானது. ஏனெனில், நம் நாட்டுப் பரிசுத்தமான கைத்தறித் தொழிலும் இன்று சிலுவையில் அறையப்படும் நிலையிலே தான் இருந்து வருகிறது!

ஒருவேளை சீக்கிரத்தில் விமோசனம் ஏற்படலாம் என்பதற்கு அறிகுறியாக, அடுத்தபடி "இன்ப சாகரன்" என்னும் நாடகத்தைப் பத்து தினங்கள் நடத்துகிறார்கள்.

கண்காட்சியின் கடைசி பத்து நாடகங்களில் ஸ்ரீ டி.கே. சண்முகம் சகோதரர்கள் தங்களுடைய புகழ் பெற்ற நாடகங்களை யெல்லாம் நடிக்கப் போகிறார்கள். இடையிடையே பிற நாடகங்களும், சங்கீதக் கச்சேரிகளும், நடனக் கச்சேரிகளும் நடைபெறுமென்று தெரிகிறது.

சென்னை நகரத்துக்கே நடுநாயகமாக அமைந்துள்ள இடத்தில் நடைபெறும் இந்தக் கைத்தறிக் குடிசைத் தொழில் கண்காட்சியைச் சென்னை நகர மக்கள் பெருந்திரளாக வந்து ஆதரித்து, அந்த அருமையான குடிசைத் தொழிலினிடத்தும் அதை நம்பியுள்ள தொழிலாளி சகோதரர்களிடத்தும் தங்களுக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் ஐயமறத் தெரிவிப்பார்களாக.

சிறு கதை எழுத்தாளருக்கு

தமிழில் சிறு கதை எழுத்தாளரின் அநுபவங்கள் பலவிதமாக இருக்கும். மிகப் பிரயத்தனப்பட்டுக் கதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்புவார்கள். பத்திரிகைகளின் உதவி ஆசிரியர்கள் படித்துப் பார்ப்பார்கள். பரீட்சகர்களின் மனோநிலையை யொட்டிப் பிள்ளைகளுக்கு மார்க் விழுவது போல், சிறு கதைகளுக்கும் மார்க் கிடைக்கும். சில கதைகள் வெளியிடத் தகுதியற்றவையாகத் தோன்றும். சில கதைகளைப்போல் வேறு கதைகள் ஏற்கெனவே படித்தது போலிருக்கும். வேறு சில மற்றப் பத்திரிகைகளில் வெளியான கதைகளைப் போல் காணப்படும். பத்திரிகைகளில் கதைகள் வெளியிடுவதற்குப் பக்கங்களும் குறைவு. ஆகையால் சில கதைகளைத்தான் உதவி ஆசிரியர்கள் பொறுக்கி எடுப்பார்கள். அவற்றைத் திருத்தியும் கூட்டியும் சேர்த்தும் அந்தந்தப் பத்திரிகையின் போக்குக்குத் தகுந்தபடி வெளியிடுவார்கள். சன்மானமும் சுமாராகத்தான் கிடைக்கும். "இந்த மட்டும் கதை வெளியாயிற்றே!" என்று சிலர் மகிழ்ச்சியடையலாம். அநேகர் திருப்தி கொள்ள மாட்டார்கள்.

இத்தகைய அதிருப்திகள் ஏற்படுவதற்கு இடமில்லாமல் சிறு கதைகள் எழுதிப் பெயரும் புகழும் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது. அகில உலகச் சிறுகதைப் போட்டியைத்தான் குறிப்பிடுகிறோம். சாதாரணமாக, பிரசுரத்துக்கென்று சிறுகதை பொறுக்குவதையே வேலையாகக் கொள்ளாத பிரமுகர்கள் இந்தப் போட்டியில் நீதிபதிகளாக அமர்வார்கள். முதலில் அகில இந்தியப் போட்டிக்கும் பிறகு அகில உலகப் போட்டிக்கும் போகிற கதைகளாதலால் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்வார்கள். கதைகள் ஆசிரியர் எழுதியபடியே வெளியாகும். திருத்தல், மாற்றல் ஒன்றுமிராது.

சன்மானமும் அலட்சியம் செய்யக் கூடியதல்ல. அகில உலகப் போட்டியிலும் சரி, அகில இந்தியப் போட்டியிலும் சரி, சன்மானம் ஆயிரக் கணக்கில் கிடைக்கும். கிடைக்கக்கூடிய பெயர், புகழைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

தமிழ் நாட்டுக் கதைகளிலிருந்து எப்படியும் நாலு கதைகள் அகில இந்தியப் போட்டிக்குப் போய்ச் சேரும். அவற்றிற்குக் கதைக்கு ரூ. 125 வீதம் சன்மானம் உடனே கிடைத்து விடும். இந்த நாலு கதைகளும் மேலே பரிசு பெற்றுவிட்டாலும் பெறாவிட்டாலும், பரிசுக் கதைகளைச் சேர்த்து வெளியிடும் ஆங்கிலப் புத்தகத்தில் சேர்க்கப்படும். ஆகையால், ஆங்கிலம் அறிந்த உலகம் முழுவதும் அக் கதைகள் பிரபலம் அடைய இடம் உண்டு.

சென்ற வருஷத்தில் தெலுங்கு மொழிக்கதை ஒன்றுக்கு அகில உலக இரண்டாவது பரிசு கிடைத்தது. இந்த வருஷத்தில் தமிழுக்குக் கிடைக்கலாம். யார் சொல்ல முடியும்! அகில உலக முதற் பரிசுகூடக் கிடைக்கலாம்.

சிறு கதைப் போட்டியில் அகில உலகப் பரிசு பெறுவது என்றால், அது சாதாரண காரியம் அல்ல. அதற்காக, ஒரு வருஷம், இரண்டு வருஷமா! பத்து வருஷ காலம் தமிழ் நாட்டிலுள்ள சிறு கதை எழுத்தாளர்கள் எல்லாரும் பிரயத்தனம் செய்யலாம்.

டாக்டர் டாகூர் எழுத ஆரம்பித்தவுடனே அவருக்கு நோபெல் பரிசு கிடைத்து விட்டதா! இல்லை! எவ்வளவோ காலம் எழுத்துத் துறையில் பலனை எதிர்பாராமல் முயன்ற பிறகுதான்

உலகம் அவருடைய மேதையை ஒப்புக் கொண்டது! வேறு எந்த ஆசிரியர்கள்தான் எழுத ஆரம்பித்தவுடனே வெற்றி யடைந்து உலகப் பிரசித்தி பெற்று விட்டார்கள்!

ஆகையால், சென்ற வருஷம் தமிழ் நாட்டுச் சிறு கதைக்குப் பரிசுபெற வில்லையே என்று எண்ண வேண்டியதில்லை. கொஞ்சம் காலப் பிற்பாடாகக் கிடைத்தால், பெரிய கௌரவமாகக் கிடைக்கலாம். யார் கண்டது!—இந்த வருஷத்திலோ அல்லது அடுத்த சில வருஷங்களிலோ தான் கிடைக்கட்டுமே! கிடைத்த கௌரவம் பின்னர் எத்தனையோ காலம் நீடித்து நின்று புகழ் வீசிப் பலன் தரும் அல்லவா! அகில இந்தியாவிலும் அகில உலகத்திலும் புகழ் பெறுவது என்பது இலேசான காரியமா!

ஆகையால் தமிழ் நாட்டில் உள்ள சிறு கதை எழுத்தாளர்கள் எல்லாரும் அகில உலகச் சிறு கதைப் போட்டியில் முனைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். தமிழ் மொழியின் புகழ் உலகமெங்கும் 'பரவச் செய்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. இதை ஏன் கைவிட வேண்டும்!

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்''

என்று அருளிய திருவள்ளுவரின் வழி வந்த தமிழ் எழுத்தாளர்கள் சோர்வுக்குச் சிறிதும் இடங் கொடாமல் அகில உலகப் போட்டியில் ஈடுபடுவார்களாக. பிரபல எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம். பரிசு பெறாதவர்களின் பெயர்களை யாரும் வெளியிடப் போவதில்லை. அப்படித் தெரிந்தாலும் அதில் குறைவு ஒன்றுமில்லை. மகா கவிகளின் கவிதைகள் கூட எல்லாம் ஒரே தரமாக அமைந்திருக்கின்றன என்று சொல்ல முடியுமா

சிறு கதை எழுதும் துறையில் சமீப காலத்தில் பிரவேசித்திருப்பவர்களும், அத்துறையில் புதிதாகப் பிரவேசித்து வெற்றிகாண ஆர்வம் உள்ளவர்களும், தங்கள் திறனை இந்தப் போட்டியில் காட்டுவார்களாக. தற்சமயம் தமிழ் நாட்டில் பிரபல சிறு கதை எழுத்தாளராக விளங்குவோரெல்லாரும், இத்தகைய சிறுகதைப் போட்டிகளின் மூலமாக முதன் முதல் எழுதத் தொடங்கியவர்கள்தான்.

எழுத்துத் துறையில் ஆர்வமுள்ள மாணக்கர்களும் சமீபகாலம் வரை மாணக்கர்களா யிருந்து வெளி வந்தவர்களும் இந்தப் போட்டியில் விசேஷ கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தமிழ் எழுதிப் பழக்கமில்லையே என்று தயங்க வேண்டாம். உள்ளத்தில் ஒளி இருந்தால் வாக்கினிலும் ஒளி உண்டாகும். உள்ளத்தில் கதையின் வடிவம் இருந்தாலும் பேனாவை எடுத்ததும் வார்த்தைகள் தாமாகப் போட்டியிட்டுக் கொண்டு வரும். கதையின் நிகழ்ச்சிகள் சின்னவையாகவோ, பெரியவையாகவோ இருக்கலாம். சாதாரணமாகவோ, அசாதாரணமாகவோ இருக்கலாம். ஆனால் உணர்ச்சி வேகம் ததும்பும்படி எழுதப் பாருங்கள்.

ஜூலை மாதம் 31௳ கடைசி நாள் என்பதை நினைவு கூருங்கள். மற்ற விவரங்களை யெல்லாம் விளம்பரப் பக்கத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்.

அன்னதானமும் அரிசி விலையும்

குடந்தை நகரில் அன்னதான சிவன் விழா சிறப்பாக நடந்தேறியது பற்றிய புகைப் படங்கள் சென்ற இதழில் வெளியாகி யிருந்தன.

அன்னதான சிவன் தாம் ஓர் எளிய தனி மனிதரா யிருந்துகொண்டு அன்னதானத் துறையில் அபாரமான கைங்கரியங்களைச் செய்து புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார். அவரைப் போலவே இன்றும் அன்னதான சிவன் சங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீ டி. எஸ். ராமநாதன், தாம் ஓர் எளிய தனி மனிதரா யிருந்தும்,—அரும் பெரும் காரியங்களைச் செய்து வருகிறார். வடார்க்காடு ஜில்லாவில் பஞ்சம் கடுமையாக இருந்த மூன்று கிராமங்களில் கஞ்சி நிலையங்கள் ஏற்படுத்தினார். முதலில், சந்தேகக் கண்களுடன் நோக்கிய ஜில்லா அதிகாரிகளும் பிறகு அவருடைய சேவையைப் பாராட்டி ஒத்துழைக்க முன் வந்தார்கள்.

கும்பகோணத்தில் இம்முறை ஸ்ரீ டி. எஸ். ராமநாதன் பல பிரமுகர்கள்—மிராசுதார்களின் ஒத்துழைப்பையும், சமூகத் தொண்டில் ஆர்வங் கொண்ட பல சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பையும் பெற்று அன்னதான விழாவை அமோகமாக நடத்தினார். சொற்பொழிவு வைபவங்களைத் தவிர, இரண்டு தினங்களிலும் ஏறக்குறைய இருபதினாயிரம் ஏழைகளுக்கு அன்னம் வழங்கப்பட்டது. இந்தக் காட்சியைப் புகைப் படங்களில் நேயர்கள் பார்த்திருக்கலாம்.

அன்னதானக் காட்சிகளைக் கண்டு ஒரு பக்கம் மகிழ்ச்சி யடைந்தபோதே, மற்றொரு புறம் நமக்குப் பெருங் கவலையும் உண்டாயிற்று. நெற்களஞ்சியமாகிய சோழ வள நாட்டில் காவேரி நதிக் கரையில் ஒரு வேளை சாப்பாட்டுக்கு இவ்வளவு ஜனங்கள் வந்து காத்திருந்து உணவு வாங்கிப் போகிறார்கள் என்றால், அவர்களுடைய வறுமை நிலை எத்தகையதா யிருக்க வேண்டும்! நாட்டில் பொதுவாக உணவுக் கையிருப்பு நிலை தான் எவ்வாறு இருக்க வேண்டும்!

ஏறக்குறைய இதே சமயத்தில் தஞ்சை ஜில்லாவின் பல பகுதிகளி லிருந்தும் நெல் விலை ஏறி வருகிறது பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. மற்ற ஜில்லாக்களிலே நிலைமையும் இதைவிட மோசமாகத்தானே இருக்க வேண்டும்! ஆனி ஆடி மாதங்களில் நெல் விலை ஏறுவது இயற்கையே யென்றாலும், எட்டாத உயரத்துக்கு ஏறிவிட்டால் ஏழைகள் என்ன செய்வார்கள்!

சென்னை சர்க்காரும் இந்த நிலைமையில் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்று அறிந்து சிறிது ஆறுதல் அடைகிறோம். நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசியின் அளவைக் கொஞ்சம் அதிகமாக்குவதற்கும் விலையைச் சிறிதளவு குறைப்பதற்கும் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

இந்த உத்தரவு போதும் என்று திருப்தி அடைவதற்கில்லை. மேலும் கண்ணும் கருத்துமாயிருந்து, அடுத்த மூன்று மாதங்களில் தமிழ் நாடெங்கும் போதுமான உணவு தானியங்கள் நியாயமான விலைக்கு விற்கப்படுவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆங்காங்குள்ள ஜில்லா அதிகாரிகளும் உள்ள நிலைமையை உள்ளபடி அறிவித்து மக்களைப் பசி பட்டினியி லிருந்து பாதுகாப்பதற்கு ஊக்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

அரிசியை மிதமிஞ்சிச் சேர்த்து வைத்திருப்பவர்களிடமிருந்து அதிகப்படி அரிசியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அவசரச் சட்டம் செய்யப்பட்டுத் தயாரா யிருக்கிறது. அதை உபயோகப் படுத்துவது தற்சமயம் அவசியமா என்பதையும் சர்க்கார் ஆலோசிக்க வேண்டும்.

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 27

"நில் இங்கே!"

பாதாளச் சிறையைப் பற்றிக் கூறியதும் சின்னப் பழுவேட்டரையருக்குப் பழைய நினைவுகள் வந்தன. சம்பிரதாய மரியாதைப் பேச்சை மறந்து விட்டுக் கூறினார் :—"ஆமாம்; நீ ஒரு தடவை பாதாளச் சிறைக்குப் போயிருக்கிறாய். இளையபிராட்டியுடன் சென்றாய். உளவு அறிய வந்து தப்பி ஓடிவிட்ட ஒற்றன் ஒருவனைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ளப் போனீர்கள், இல்லையா?"

"இல்லை, ஐயா! தாங்கள் சொல்வது சரியல்ல. நாங்கள் அன்று பாதாளச் சிறைக்குப் போனது ஒற்றனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அல்ல. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் ஓலையுடன் அனுப்பியிருந்த தூதரைப் பற்றித் தெரிந்துகொள்ளப் போனோம்."

"அப்படி நீங்கள் எண்ணிக்கொண்டு போனீர்கள். அவன் ஒற்றனா, தூதனா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீ ஏதும் அறியாத சிறு பெண். உன்னோடு அதைப்பற்றி விவாதித்துப் பயனில்லை. நீங்கள் போனதுதான் போனீர்களே! அவனைப் பற்றி ஏதாவது தெரிந்து கொண்டீர்களா?"

"இல்லை. நாங்கள் எவனைப் பார்க்கப் போனோமோ, அவன் உங்களுக்குக்கூடத் தெரியாமல் விடுதலையாகிப் போய் விட்டான். பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியின் கட்டளை எங்களை முந்திக் கொண்டு விட்டது. பாவம்! நீங்கள் தான் என்ன செய்வீர்கள்?"

சின்னப் பழுவேட்டரையர் உதடுகளைக் கடித்துக் கொண்டார். தமது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தம் தமையனார் இளைய ராணிக்கு அதிக இடம் கொடுத்து வந்தது இத்தகைய இளம் பெண்களுக்குக் கூட அல்லவா ஏச்சாகப் போய் விட்டது? இவ்விதம் தமது உள்ளத்தில் தோன்றிய அவமான உணர்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "உங்கள் பங்குக்கு நீங்களும் ஓர் அரைப் பைத்தியக்காரனை விடுதலை செய்தீர்கள்!" என்றார்.

"ஐயா! அரைப் பைத்தியம் என்று புஷ்ப சேவை செய்து வரும் சேந்தன் அமுதனைத் தானே சொல்கிறீர்கள்? அவரை அன்று விடுதலை செய்ததினால் இந்தச் சோழ நாடு எவ்வளவு பெரிய நன்மை அடைந்தது என்பதை அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!"

"பெண்ணே! எனக்கு ஆச்சரியம் இனி ஒன்றிலுமே ஏற்படப் போவதில்லை. இந்தச் சோழ ராஜ்யம் யார் யாருக்கெல்லாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை நினைத்து ஆச்சரியப் பட்டுப் பட்டு எனக்கு அலுத்துப் போய் விட்டது. நீகூட இப்போது ஏதோ ஒரு முக்கியமான நன்மையைச் சோழ நாட்டுக்குச் செய்வதற்காகத்தான் வந்திருக்கிறாய் அல்லவா?"

"ஆம், ஐயா! முக்கியமான காரியம் இல்லாவிட்டால் தங்கள் தமையனார் அனுப்பியிருப்பாரா? அதிலும் ஒன்றும் அறியாத அபலைப் பெண்ணாகிய என்னை அனுப்பியிருப்பாரா?"

"என் தமையனாருக்குப் புத்திசாலித்தனம் அதிகரித்துக் கொண்டு தான் வருகிறது. உன்னை அனுப்பியதிலிருந்தே

அது தெரிகிறது. நீ கொண்டுவந்த செய்தியைச் சீக்கிரம் சொல்லி விடு!"

"பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி அலட்சியமாயிருந்தது தவறு என்று தங்களிடம் கூறும்படி சொன்னார். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் உண்மையாகவே பயங்கரச் சதி செய்து வருகிறார்கள்; சோழ குலத்தைப் பழி வாங்க இன்று கெடு வைத்திருக்கிறார்கள்; சக்கரவர்த்தியைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும் என்று எச்சரிக்கும்படி கூறினார்......"

இதைக் கேட்ட காலாந்தக கண்டர் நகைத்தார். "இந்தப் பிரமாதமான செய்தியைத்தானா சொல்லி அனுப்பினார்? ஒருவேளை உன் பெரிய தகப்பனார் படை எடுத்து வரப்போவதைப் பற்றித் தான் தகவல் தெரிந்து சொல்லி அனுப்பினாரோ என்று பார்த்தேன். அவர் வெளியிலிருந்து கொடும்பாளூர் சைன்யத்தைப் பார்த்துக் கொண்டால், நான் கோட்டைக்குள்ளே சக்கரவர்த்திக்கு ஏதும் நேராமல் பார்த்துக் கொள்கிறேன். அதைப்பற்றி அவரும், நீயும், இளைய பிராட்டியும் கூடக் கவலைப்பட வேண்டியதில்லை!" என்றார்.

"ஐயா! தாங்கள் இப்படி அலட்சியமாகக் கருதுவீர்கள் என்று தெரிந்து மேலும் ஒரு விஷயம் சொல்லி அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளைய ராணியின் அரண்மனைக்கு அடிக்கடி யாரோ மந்திரவாதி ஒருவன் வந்து போனது பற்றித் தாங்கள் எச்சரிக்கை செய்தீர்களாம். அதற்கு அவர் செவி கொடாமல், தங்களைக் கோபித்துக் கொண்டாராம். 'தம்பி! பெருங் குற்றம் செய்து விட்டேன். அந்த மந்திரவாதி ரவிதாஸன் என்பவன்தான் பாண்டியச் சதிகாரன். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகளின் தலைவன். சோழ குலத்தை வேரோடு கருவறுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவன். அவனுடைய ஆள் ஒருவன் இன்றைக்குச் சக்கரவர்த்தியின் மீது பழி வாங்க முயலுவான். அலட்சியம் வேண்டாம். சர்வ ஜாக்கிரதையுடனிருக்கவும்'— இதுவே பெரிய பழுவேட்டரையர் தங்களுக்கு அனுப்பிய செய்தி! என் கடமையை நான் செய்து விட்டேன்......"

காலாந்தக கண்டர் சிறிது திகைத்துத் தான் போய் விட்டார். இம்மாதிரி செய்தியைப் பெரியவரைத் தவிர வேறு யாரும் அனுப்பியிருக்க முடியாது.

"பெண்ணே! இது உண்மையானால் அவர் ஏன் இங்கு உடனே வரவில்லை? உன்னை எதற்காக அனுப்பினார்?......"

"என்னை அவர் அனுப்பவில்லை. அவர் இளைய பிராட்டியிடம் கூறினார். இளைய பிராட்டி என்னை அனுப்பி வைத்தார். ஆதித்த கரிகாலருக்கும் இன்றைக்கே ஆபத்து வர இருக்கிறது. ஆகையால் அவரைக் காப்பாற்ற அவர் திரும்பிப் போயிருக்கிறார்."

"எங்கேயிருந்து? அவர் உங்களை எங்கே பார்த்தார்?"

"குடந்தையில் ஜோதிடர் வீட்டில் பார்த்தார். இன்னும் தங்களுக்குச் சந்தேகம் தெளியவில்லையானால் இதையும் கேளுங்கள். தங்கள் அண்ணன் படகில் கொள்ளிடத்தைத் தாண்டி வந்தபோது புயல் அடித்துப் படகு கவிழ்ந்து விட்டது. தப்பிப் பிழைத்துக் கரையேறிப் பள்ளிப் படையில் படுத்திருந்தபோது சதிகாரர்கள் பேசியதைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஐயா! இன்னமும் இங்கேயே நின்று பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது அரண்மனைக்குப் போகலாமா?"

"பெண்ணே! நீ சொன்னதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும். எப்பேர்ப்பட்ட சதிகாரனாயிருந்தாலும் கோட்டைக் காவலைக் கடந்து வர முடியாது. நீ பெண்ணாயிருப்பதினால் தான் உள்ளே வரவிட்டேன்......"

"வெளியேயிருந்து வரவேண்டும் என்பது என்ன? சதிகாரர்கள் கோட்டைக்குள்ளேயே இருந்து விட்டால்..."

"ஒருநாளும் முடியாத காரியம்.....;"

"சரி; அது தங்கள் பொறுப்பு. என் கடமையை......"

"நிறைவேற்றி விட்டாய். இனி நீ திரும்பிப் போகலாம்."

"இல்லை, ஐயா! என் கடமையில் ஒரு பாதியைத்தான் நிறைவேற்றியிருக்கிறேன். சக்கரவர்த்தியைப் பார்த்து இளைய பிராட்டியின் செய்தியைச் சொல்லி விட்டால் முழுதும் நிறைவேறியதாகும்......"

"அந்தச் செய்தியையும் என்னிடமே சொல்லி விடலாம்."

"முடியாத காரியம். சக்கரவர்த்தியிடம் நேரில் தெரிவிக்கும்படி இளைய பிராட்டியின் ஆக்ஞை. இதோ இளைய பிராட்டியின் முத்திரை மோதிரம்!..."

"ஆ! முத்திரை மோதிரம் யார் யாரிடமோ வந்து விடுகிறது. இளைய பிராட்டிதான் கொடுத்தாள் என்பது

என்ன நிச்சயம்? உன் பெரிய தந்தை இந்தக் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறார். உன்னை எப்படி நம்புவது?.."

"ஓர் அபலைப் பெண்ணால் என்ன அபாயம் நேர்ந்துவிடும் என்று பயப்படுகிறீர்கள்?"

"பெண்ணே! பழுவூர் வம்சத்தினர் பயம் என்பது இன்னதென்று அறிய மாட்டார்கள்......"

"அப்படியானால் என்னை அரண்மனை வரையில் போக விடுங்கள். தாங்களும் கூட வாருங்கள்......"

"இன்றைக்கெல்லாம் சக்கரவர்த்தியின் மனக் கலக்கம் மிகவும் அதிகமாயிருக்கிறது......"

"அந்தக் கலக்கத்தைத் தீர்ப்பதற்குரிய செய்தியுடன் நான் வந்திருக்கிறேன். ஐயா! விஷயம் இன்னதென்று அறிந்தால் என்னைத் தடுத்துத் தாமதப்படுத்தியதற்காகத் தாங்களே பச்சாத்தாபப் படுவீர்கள்......"

சின்னப் பழுவேட்டரையர் சிறிது வியப்புக் குறி காட்டி, "பெண்ணே! ஒருவேளை சின்ன இளவரசர்—பொன்னியின் செல்வரைப் பற்றிச் செய்தி கொண்டு வந்திருக்கிறாயா?" என்றார்.

"ஆம், தளபதி!"

"ஆகா! சின்ன இளவரசர் சுகமாயிருக்கிறாரா? இப்போது எங்கே வந்து கொண்டிருக்கிறார்? அவருக்கு......சதிகாரர்களால் அவருக்கும்......"

"ஆம்; பாண்டிய நாட்டுச் சதிகாரர்களால் அவருடைய உயிருக்கும் அபாயம் நேர இருந்தது. ஆனால் கடவுள் அருளால் விபத்து ஒன்றும் ஏற்படவில்லை. சௌக்கியமாயிருக்கிறார். இது தங்களுக்குச் சந்தோஷமளிக்கும் அல்லவா?"

"நல்ல கேள்வி! சின்ன இளவரசர் சௌக்கியமாயிருப்பது பற்றிச் சந்தோஷப் படாமல் துக்கப் படுவார்களா? வா! வா! உன்னோடு வீண் பொழுது போக்க விரும்பவில்லை. அரண்மனைக்கு வந்து சக்கரவர்த்தியிடம் நேரில் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடு!"

இவ்விதம் கூறிச் சின்னப் பழுவேட்டரையர் தம் யானையை மேலே செலுத்தினார். இளவரசரைப் பற்றி அறிந்து கொள்ள அவருக்குப் பெரும் ஆவல் உண்டாயிற்று. அவருடைய மாப்பிள்ளை மதுராந்தகன் தஞ்சைச் சிம்மாசனம் ஏறுவதற்கு அருள்மொழி வர்மன் ஒரு போட்டி என்பதாக அவர் என்றும் கருதியதில்லை. சக்கரவர்த்திக்கு அந்த எண்ணமே இல்லை என்பதை அவர் அறிவார். அருள்மொழி தந்தை சொல்லைத் தட்டக் கூடியவனும் இல்லை. குந்தவை தலையிட்டு ஏதேனும் குளறல் செய்யாமலிருக்க வேண்டுமென்பதுதான் கவலை. அவள் இப்போது ஏதேனும் சூழ்ச்சி தொடங்கியிருக்கிறாளா, என்ன? அருள்மொழியைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டு ஏதேனும் தந்தைக்குத் தாறுமாறான செய்தி அனுப்பியிருப்பாளா? இளவரசனைப் பற்றி இந்தக் கொடும்பாளூர்ப் பெண் உண்மையாகவே செய்தி கொண்டு வந்திருந்து சக்கரவர்த்தியிடம் கூறினால், அதை அவர் தம்மிடம் சொல்லாமல் இருக்க மாட்டார். அருள்மொழி வர்மரின் உத்தேசம் இன்னதுதான் என்று தெரிந்து கொண்டால், அதற்கேற்பத் தாம் செய்ய வேண்டியது பற்றித் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா? அச்சமயத்தில் பூதி விக்கிரம கேசரி தஞ்சைக் கோட்டை மீது படை எடுத்து வந்திருக்கும் சதிகாரச் செயலைப் பற்றியும் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து விடலாம் அல்லவா?......

இரண்டு யானைகளும் அரண்மனை வாசலில் வந்து நின்றன.

சின்னப் பழுவேட்டரையர் இலகுவாக யானை மீதிருந்து கீழே குதித்தார்.

இன்னொரு யானை மலை அசைவது போல் அசைந்து மண்டியிட்டுப் படுத்தது. இரண்டு பெண்களும் யானைப் பாகனும் கீழே இறங்கினார்கள்.

வாசற் காவலனை அழைத்துச் சின்னப் பழுவேட்டரையர் ஏதோ கூறினார். அவன் அரண்மனையின் முன் வாசலைத் திறந்து விட்டான்.

காலாந்தக கண்டருடைய மனதில் அவருடைய தமையனார் சொல்லி அனுப்பியதாக வானதி கூறிய செய்தி உறுத்திக் கொண்டிருந்தது. அதை அவர் அலட்சியம் செய்யப் பார்த்தும் முடியவில்லை. முக்கியமாக, மந்திரவாதி ரவிதாஸனைப் பற்றி அறிந்தது அவருடைய மன அமைதியை மிகக் குலைத்தது. வீர பாண்டியரின் ஆபத்துதவிகளைப் பற்றி அவர் முன்னமே அறிந்திருந்தார். ஆனால் அவர்களுக்குத் தஞ்சாவூர்க் கோட்டைக் குள்ளேயே இடம் கிடைத்திருந்தது என்று அறியவில்லை. பழுவூர் இளைய ராணி மந்திரவாதியை அழைத்துப் பேசுவதெல்லாம் பெரிய பழுவேட்டரையரை மேலும் மேலும் தன் வசப்படுத்துவதற்காகவே என்று அவர் நம்பிக் கொண்டிருந்தார்.

அண்ணன் தம்பிகளுக்குள்ளே விரோதத்தை வளர்ப்பதும் அவனுடைய நோக்கமாயிருக்கலாம் என்று நினைத்தார். இப்போது இந்தப் பெண் சொல்வது சிறிது பீதிகரமான செய்தியாகத்தான் இருக்கிறது. ஆயினும், எந்த மந்திரவாதி அல்லது சதிகாரன் என்ன செய்துவிட முடியும்? தம்முடைய அநுமதியின்றிச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள் ஓர் ஈயும் நுழைய முடியாது. சக்கரவர்த்தி வெளியிலே வருவதும் கிடையாது. இருந்தாலும் அரண்மனையைச் சுற்றிலும் இன்னும் கொஞ்சம் பாதுகாப்பைப் பலப்படுத்திவைப்பது நல்லது. புயல்—வெள்ளம் என்று சொல்லிக் கொண்டும், முதன் மந்திரியைப் பார்ப்பதற்காக என்று சொல்லிக் கொண்டும் அதிகம் பேர் இரண்டு நாளாகக் கோட்டைக்குள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் வெளியில் போய் விட்டார்களா என்று தெரியாது. இன்று பகலில் திடீரென்று கோட்டைக் கதவைச் சாத்தியதும் நல்லதாய்ப் போயிற்று. துர்நோக்கம் கொண்டவர்கள்,—சந்தேகாஸ்பதமான மனிதர்கள்,—யாராவது இந்தக் கோட்டைக்குள் வந்திருக்கிறார்களா என்று நன்றாகப் பரிசோதனை செய்து பார்த்து விடலாம்......

இவ்விதம், யானைமேல் அரண்மனையை நோக்கி வரும்போதே எண்ணமிட்டுக் கொண்டு வந்தார். அரண்மனை வாசலில் ஒரு பக்கத்தில் எப்போதும் ஆயத்தமாயிருந்த தம் ஆட்களைச் சமிக்ஞையால் அழைத்தார். அவர்களிடம் கோட்டையின் உட் பக்கம் முழுவதும் நன்றாய்த் தேடிச் சந்தேகாஸ்பதமாக யார் தென்பட்டாலும் பிடித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

பிறகு, வேளைக்காரப் படையாரிடம் அன்றிரவு முழுதும் தூங்காமலே அரண்மனையையும் சுற்றுப் புறங்களையும் காவல் புரிய வேண்டுமென்று சொல்ல எண்ணி, அவர்களுடைய தலைவனை அனுப்பும்படி ஆக்ஞாபித்தார்.

இந்த நிலையில், யானையின்மேல் வந்த பெண்கள் என்ன ஆனார்கள் என்று திரும்பிப் பார்த்தார். அவர்கள் அப்போது அரண்மனை முன்புறத்து நிலா முற்றத்தைத் தாண்டி முதல் வாசற்படிக்கு அருகிலே போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால்.......ஆனால்......இவன் யார்? அவர்களைத் தொடர்ந்து போகும் அந்த மூன்றாவது உருவம்? தலைப்பாகையைப் பார்த்தால், யானைப்பாகன் மாதிரி தோன்றியது! ஆகா! யானைப்பாகன் ஏன் தொடர்ந்து போகிறான்? அரண்மனைக்குள் அவனுக்கு என்ன வேலை? சக்கரவர்த்தியிடந்தான் அவனுக்கு என்ன காரியம்?

மிகப் பயங்கரமான ஓர் எண்ணம் அவர் மனத்தில் மின்னலைப் போல் தோன்றிச் சொல்ல முடியாத வேதனையை உண்டாக்கியது. கோபக் கனலை எழுப்பியது. ஒரு வேளை இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோ? இவன்தான் சதிகாரனோ? இந்தப் பெண்களை ஏமாற்றிவிட்டு, யானைப்பாகனைப் போல் வந்திருக்கிறானோ? தாமும் ஏமாந்து விட்டோமோ? தம் கண்முன்னால் சக்கரவர்த்தியைக் கொல்ல வந்த வீர பாண்டியனின் ஆபத்து உதவி அரண்மனைக்குள்ளே போகிறதா? காலாந்தக கண்டனுக்கு அவ்வளவு பெரிய அசட்டுப் பட்டமா? அல்லது பூதிவிக்கிரமகேசரியின் சூழ்ச்சியில் சேர்ந்ததா?—எதுவாயிருந்தாலும் சரி, இதோ மறு கணத்தில் எல்லாம் தெரிந்து போய் விடுகிறது!

நாலே எட்டில் நிலா முற்றத்தைக் காலாந்தக கண்டர் கடந்து சென்று யானைப் பாகன் சமீபம் அடைந்தார். "அடே! நில் இங்கே!" என்று ஒரு கர்ஜனை செய்தார். "நீ ஏன் உள்ளே போகிறாய்? யானைப்பாகனுக்கு அரண்மனைக்குள் என்ன வேலை?" என்று கூறிக் கொண்டே, அவனுடைய ஒரு கரத்தைத் தமது வஜ்ராயுதம் போன்ற கை முஷ்டியினால் பிடித்துக் கொண்டார்.

அவருடைய கோப கர்ஜனைக் குரலைக் கேட்டு விட்டு முன்னால் சென்ற இரு பெண்களும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுடைய முகங்கள் சிறிது பயம், வியப்பு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன; அதே சமயத்தில் புன்னகை மலர்ந்தன. வானதி "ஐயா!... அவர்...அவர்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துச் சிறிது தயங்கினாள்.

குரோதத்தின் சிகரத்தை அடைந்திருந்த சின்னப் பழுவேட்டரையர் அவளைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை; அவள் வார்த்தையைப் பொருட்படுத்திக் கேட்கவும் விரும்பவில்லை.

யானைப் பாகனுடைய தடுமாற்றத்திலிருந்து அவருடைய சந்தேகம் மேலும் மேலும் உறுதிப்பட்டது.

முன்னொரு தடவை தம்மை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடிப் போன வாணர்

குலத்து வாலிபனோ என்ற விபரீத எண்ணம் அந்தக் கணத்தில் தோன்றியது. மறுபடியும் தம்மை ஏமாற்றி விட்டுப் போகலாம் என்று இவ்வளவு துணிச்சலுடன் வந்திருக்கிறானோ?......

பிடித்த பிடியை இன்னும் சிறிது கெட்டியாக்கிக் கொண்டு சின்னப் பழுவேட்டரையர் "அடா! உண்மையைச் சொல்! நீ யார்? யானைப்பாகன்தானா? அல்லது சதிகாரனா? முன்னொரு தடவை என்னிடமிருந்து தப்பிச் சென்ற ஒற்றனா? இம்முறை தப்ப முடியாது!" என்று சொல்லிக்கொண்டே, பிடித்த பிடியை விடாமல் 'யானைப்பாகன்' முகத்தைத் தம்மை நோக்கித் திருப்பினார்.

அரண்மனையின் முன் மண்டபத்தில் எரிந்த தீபங்களின் வெளிச்சம் இலேசாக அந்த 'யானைப்பாகனின்' கம்பீரமான முகத்தில் விழுந்தது.

"தளபதி! நான் யானைப்பாகன் கூடத்தான். தங்களிடமிருந்து என்றும் தப்பிச் சென்றதில்லை. தங்களிடம் என்னை ஒப்புக் கொடுக்கவே வந்திருக்கிறேன்!" என்றான் யானைப்பாகன்.

காலாந்தக கண்டர் அந்த முகத்தைப் பார்த்தார். அந்தக் குரலைக் கேட்டார். மேல் உலகம் ஏழும் இடிந்து அவர் தலைமேல் ஒருமிக்க விழுந்து விட்டது போலிருந்தது. அவ்விதமாகத் திகைத்துச் சித்திரப் பதுமைபோல் நின்று விட்டார். கைப்பிடியை விடுவதற்குக் கூட அவருக்குத் தோன்றவில்லை. கைப்பிடி அதுவாகத் தளர்ந்து இளவரசர் அருள்மொழிவர்மரை விடுதலை செய்தது.

அத்தியாயம் 28

கோஷம் எழுந்தது!

இளவரசர் அருள்மொழி வர்மரின் அந்த இளம் பொன் முகத்தில் என்ன மாய மந்திர சக்திதான் இருந்ததோ, தெரியாது. இத்தனைக்கும் இளவரசர் அச்சமயம் முகத்தைச் சுளுக்கிக்கொள்ளவும் இல்லை. கோபத்தின் அறிகுறி சிறிது கூடக் காட்டவில்லை. வெண்ணெய் திருடி அகப்பட்டுக் கொண்ட கண்ணனைப் போல் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் பாவனை முகத்தில் தோன்றும்படி நின்றார். சின்னப் பழுவேட்டரையரிடம் குற்றம் கண்டு பிடித்துக் கடிந்து கொள்ளும் அறிகுறியோ, அவரை எதிர்த்துப் போராடும் நோக்கமோ அணுவளவும் அவர் முகத்தில் காணப்படவில்லை.

ஆயினும், அஞ்சா நெஞ்சமும் அளவிலா மனோதிடமும் வாய்ந்தவரான காலாந்தக கண்டரின் கை கால்கள் அந்தக் கணத்தில் வெடவெடத்து விட்டன. முகத்தில் வியர்வை அரும்பியது. இன்னது செய்கிறோம் என்று கூட அறியாமல் இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்தியவாறு, "பொன்னியின் செல்வா! ஈழங்கொண்ட வீரா! சோழ நாட்டின் தவப் புதல்வா! இது என்ன கோலம்? இது என்ன காரியம்? இவ்விதம் தண்டிப்பதற்கு என்ன குற்றம் செய்தேன் நான்?......சற்று முன் நான் செய்த பிழையைப் பொறுத்துக் கருணை புரிய வேண்டும். 'மன்னித்தேன்' என்று அருள் வாக்குத் தரவேண்டும்......கண்ணிருந்தும் பாராத குருடனாகி விட்டேன்......" என்று நாத் தழுதழுக்கக் குரல் நடுங்கக் கூறினார்.

மேலும் இதே முறையில் பேசப் போனவரை இளவரசர் தடுத்து, "தளபதி! இது என்ன? தாங்களாவது, குற்றம் செய்யவாவது? ஒன்றும் அறியாத இந்தச் சிறுவன் தங்களை மன்னிப்பதாவது?" என்றார்.

"தங்களைப் பிடித்து நிறுத்திய இந்தக் கையை வெட்டினாலும் போதிய தண்டனை ஆகாது. 'அடா' என்று அழைத்த என் நாவை அறுத்துப் போட்டாலும் போதாது......"

"தங்கள் வார்த்தைகள் என் காதில் நாராசமாக விழுகின்றன. போதும், நிறுத்துங்கள். தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் கடமையைச் செய்தீர்கள். அதில் குற்றம் என்ன? தவறு என்னுடையது. நான் இந்த வேடத்தில் — யானைப் பாகனாக வருவேன் என்று......"

"நான் எதிர்பார்க்கவே இல்லைதான். இப்படித் தாங்கள் செய்யலாமா? எதற்காக? சோழ நாட்டின் மகா வீரரை இப்படியா நான் வரவேற்றிருக்க வேண்டும்? ஆசார உபசாரங்களுடன் முன் வாசலில் வந்து காத்திருந்து வெற்றி முரசுகள் எட்டுத் திக்கும் அதிரும்படி முழங்க வரவேற்றிருக்க மாட்டேனா?..."

"தாங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று அறிந்துதான் நான் இந்த வேஷத்

தில் வந்தேன். அதற்கெல்லாம் இது சரியான நேரமல்ல. தங்களுக்குத் தெரியாதா? சதிகாரர்களின் தீய முயற்சிகளைப் பற்றிச் சற்று முன் கொடும்பாளூர் இளவரசி கூறினள் அல்லவா? அது உண்மையாக இருக்கலாமென்றே எனக்கும் தோன்றுகிறது......"

"இளவரசே! என்னையும் அந்தப் பாண்டியச் சதிகாரர்களுடன் சேர்த்து விட்டீர்களா?......"

"கடவுளே! என் தந்தை சக்கரவர்த்தியைப் பாதுகாப்பதற்குத் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து மனத்திற்குள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறேன். முதலில் என் தந்தையைப் பார்த்துவிட்டு, பிறகு......"

"ஐயா! சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கக் கூடாதென்று நான் தடுத்து விடுவேன் என்று நினைத்தீர்களா? அத்தகைய பாவி நான் என்று யாரேனும் தங்களுக்குச் சொல்லி யிருந்தால்......"

"ஒருநாளும் நான் நம்பி யிருக்க மாட்டேன், தனபதி!"

"பின் ஏன் இந்த வேஷம்?"

"வேறு முறையில் நான் கோட்டைக்குள் வந்திருக்க முடியுமா, யோசியுங்கள்! கோட்டையைச் சுற்றித் தென்திசைச் சேனைகள் வந்து சூழ்ந்திருக்கின்றன. பெரிய வேளாரும் வந்திருக்கிறார். எதற்காக வந்திருக்கிறார் என்று தங்களுக்குத் தெரிந்திருக்கும்......"

"கோட்டைக் கதவுகளை நான் மூடச் செய்தது நியாயமே அல்லவா? அதில் ஏதேனும் குற்றம் உண்டா?"

"ரொம்ப நியாயம். பெரிய வேளாரின் புத்தி கெட்டுப் போயிருக்கிறது. அவரால் நான் கோட்டைக்குள் வருவது தடைப்படும் என்றுதான் இந்த வேடத்தில் வந்தேன். அவர் மகளையும் அழைத்துக் கொண்டு வந்தேன். நல்ல வேளையாக அவர் என்னைக் கவனிக்கவில்லை. தங்களுடைய கூர்மையான கண்கள் கண்டு பிடித்து விட்டன..."

"என் கண்கள் மூடிப் போயிருந்தன. அதனாலேதான் பார்த்தவுடன் தெரிந்து கொள்ள வில்லை. தங்களை யானைப் பாகன் என்று எண்ணிக் கூறிய வார்த்தைகளைத் தாங்கள் கருணை கூர்ந்து மன்னித்து விடுங்கள்..."

"அவ்விதம் சொல்ல வேண்டாம். தாங்கள் வேறு, என் தந்தை வேறு என்றே நான் எண்ணவில்லை. என்னைச் சிறைப்படுத்திக் கையோடு கொண்டு வருவதற்காகத் தாங்கள் ஆள்களை அனுப்பி யிருந்தீர்கள்..."

"கடவுளே! இது என்ன வார்த்தை? நானு சிறைப்படுத்த ஆள்களை அனுப்பினேன்? தங்களை உடனே பார்க்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் தந்தை—சக்கரவர்த்தி—அனுப்பினர்...!"

"அது எனக்குத் தெரியாதா தனபதி! இலங்கையில் நான் இருந்த போது அவர்கள் வந்தார்கள். 'சக்கரவர்த்தியின் கட்டளை அல்ல; பழுவேட்டரையர்களின் கட்டளை' என்று என் அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்..."

"எங்கள் விரோதிகள் அப்படிச் சொல்லி யிருப்பார்கள்..."

"நான் அவர்களுக்கு 'என் தந்தையின் கட்டளை எப்படியோ, அப்படியே பழுவேட்டரையர்களின் கட்டளையும் என் சிரமேல் கொள்ளத் தக்கது' என்று கூறினேன். கடலையும் புயலையும் மழையையும் வெள்ளத்தையும் தாண்டி வந்தேன். அரண்மனையின் முன் வாசலைத் தாண்டி உள்ளே போனதும் தங்கள் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். தங்கள் கட்டளையின்றி என் தந்தையைப் பார்க்கவும் நான் விரும்பவில்லை......"

"இளவரசே! இன்னும் என்னைச் சோதிக்கிறீர்களா? தங்கள் தந்தையைத் தாங்கள் சந்திப்பதற்கு நான் என்ன கட்டளையிடுவது? தங்களுடன் வரச் சொன்னால் வருகிறேன். இங்கேயே நிற்கச் சொன்னால் நின்று விடுகிறேன்! இளவரசரின் விருப்பமே என் சிரசின் மேல் சூடும் கட்டளை!" என்று பணிவுடன் கூறினார் பழுவேட்டரையர்.

"தளபதி! தாங்கள் இங்கேயே நிற்க வேண்டித்தான் நேரும் போலிருக்கிறது. அதிக நேரம் நாம் இங்கு நின்று பேசிக் கொண்டிருந்து விட்டோம். அதோ பாருங்கள்!" என்றார் இளவரசர்.

சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்தார். சற்று முன் தூரத்தில் நின்ற அவருடைய ஆட்கள் எல்லாம் நெருங்கி வந்திருப்பதைக் கண்டார். அவர்கள் மட்டுமல்ல; அரண்மனை வாசற் காவலர்களும் வந்து விட்டார்கள். இன்னும் தூரத்திலே நின்ற வேளைக்காரப் படையினரிலும் சிலர் பிரிந்து வந்து கொண்டிருந்தார்கள்.

அருகில் வந்து விட்டவர்கள் அனைவரும் பொன்னியின் செல்வரைக் கண் கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னப் பழுவேட்டரையர் திரும்பிப் பார்த்த நேரத்தில், இளவரசரின் திருமுகத்தில் விளக்கு வெளிச்சம் நன்றாக விழுந்து மிகப் பிரகாசமாகத் தெரிந்தது.

வீரர்களில் ஒருவன் "வாழ்க இளவரசர்!" என்றான். "வாழ்க பொன்னியின் செல்வன்!" என்றான் இன்னொருவன். "மகிந்தனைப் புறங் கண்டு ஈழம் கொண்ட வீராதி வீரன் வாழ்க!" என்றான் மற்றொருவன்.

இந்தக் குரல்களைக் கேட்டவுடன் வேளைக்காரப் படையினர் அனைவரும் அங்கு விரைந்து வரத் தொடங்கினார்கள்.

பற்பல குரல்களிலிருந்து "வாழ்க பொன்னியின் செல்வன்!" என்ற வாழ்த்தொலிகள் எழுந்தன.

அரண்மனை வாசலான படியாலும், சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த படியாலும் அந்த ஒலி மிக மெல்லியதாகத்தான் அப்போது எழுந்தது. இளந் தென்றற் காற்று புதிதாகத் தளிர்த்த அரசமரத்தின் மீது அடிக்குங்கால் ஏற்படும் 'சல சலப்பு'ச் சத்தத்தைப் போலத்தான் கேட்டது. நேரமாக ஆக, நாள் ஆக ஆக, அந்த மெல்லிய ஒலி எப்படி வளர்ந்து, வளர்ந்து, பெரிதாகி மகா சமுத்திரத்தின் ஆயிரமாயிரம் அலைகளின் ஆரவாரத்தையும் மிஞ்சிய மாபெரும் கோஷமாயிற்று என்பதைப் பின் வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

"தளபதி! நாம் இங்கே நின்று பேசியது தவறாகப் போயிற்று. அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கும் வரையில் நான் என்னைத் தெரியப் படுத்திக் கொள்ள விரும்பாததின் காரணம் இப்போது தெரிகிறது அல்லவா?" என்று இளவரசர் கேட்டார்.

"தெரிகிறது, அரசே! நான் இவர்களுக்குச் சமாதானம் சொல்லி விட்டு வருகிறேன். தாங்கள் தயவு செய்து விரைந்து உள்ளே செல்லுங்கள்!" என்றார் காலாந்தக கண்டர். (தொடரும்)

சோஷலிஸக் கட்டுரைக்கு நூறு ரூபாய் பரிசு

"சோஷலிஸம் ஏன் வேண்டும்!" என்னும் தலைப்பில் எழுதப்படும் கட்டுரைகளில் சிறந்தது என்று ஆசிரியர் கருதும் கட்டுரைக்கு ரூபாய் நூறு பரிசு வழங்கப்படும். கட்டுரை, வாசகர்கள் ரஸித்துச் சுவையுடன் படிக்குமாறு எளிய தமிழில் அமைந்திருக்க வேண்டும்.

சோஷலிஸ இயக்கத்தின் அடிப்படைத் தத்துவங்கள், சோஷலிஸத்தினால் பாரத தேசம் அடையக் கூடிய நன்மைகள், இந்திய சோஷலிஸ்ட் கட்சியின் முன்னணி வேலைத் திட்டம், அக் கட்சியின் தற்போதைய நிலை, கட்சியை வலுப் படுத்துவதற்குரிய யோசனைகள், சோஷலிஸ்ட் இலட்சியத்தையும் வேலைத் திட்டத்தையும் மக்களிடையே பரப்புவதற்குச் சிறந்த வழிகள்,—இவை யெல்லாம் போட்டிக் கட்டுரைக்கு விஷயமாக அமையலாம். இவற்றில் ஏதேனும் சில அம்சங்களைப் பற்றியும் எழுதலாம்.

கட்டுரை, "கல்கி" இதழில் நாலு பக்கங்களுக்குக் குறையாமலும் எட்டுப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

பரிசு பெறும் கட்டுரையைத் தவிர, பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நல்ல கட்டுரைகளுக்கு உசிதம் போல் சன்மானம் வழங்கப்படும்.

சகல எழுத்தாளர்களுக்கும் அதிக அவகாசம் அளிக்கவேண்டும் என்பதற்காகவே, கட்டுரைகளை அனுப்பும் முடிவு தேதியை ஜூன் 30உ லிருந்து ஜூலை 31-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.



சொஸைட்டி பிக்சர்ஸாரின் அன்பளிப்பு
அதி நூதனமான முறையில் அமைக்கப்பட்டதோர்
அபூர்வ திரைச்சித்திரம்
“உலகம்”
மகத்தானது! மனித இயற்கையைப் பிரதிபலிப்பது!
ஆயுட்கால அநுபவத்தை அளிப்பது!
ரூ. 25 லக்ஷம் செலவு!...3 வருஷங்கள் தயாரிப்புக் காலம்!...
2½ லக்ஷம் அடி நெகடிவ் பிலிம்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன!...
50க்கு மேற்பட்ட அழகிய களங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன...
140 கண்கவர் காட்சிகள்...10,000 எக்ஸ்ட்ராக்கள்...
160 பாடும் பேசும் பாத்திரங்கள்...
இனிய கானம்... இன்ப நடனம்...
காட்சிக்கு இனிய கலை...
கருத்தை அள்ளும் கதை...
சலனப்பட உலகின் மதிப்புமிக்க
ஒரு காவிய சித்திரம்
சொஸைட்டி பிக்சர்ஸாரின் ஓர் அற்புதமான அன்பளிப்பு

'உலகம்'

ஏக காலத்தில் தென்னிந்தியா பூராவிலும் 1953௵ ஜூலை 10௳ வெள்ளிக்கிழமை திரையிடப்படுகிறது



- மூன்று ஆண்டுகள் முனைந்த முயற்சியில் கண்டெடுத்த கலைக் களஞ்சியம் இந்தத் திரை "உலகம்".
- படப் பிடிப்பை நாங்கள் பூர்த்தி செய்து விட்டோம் என்று மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.
- நீங்கள் வெள்ளித் திரையில் இந்த அற்புத "உலக"த்தைக் கண்டு பேரானந்தம் அடையப் போகிறீர்கள் என்பது எங்கள் நம்பிக்கை. ஏனென்றால், உங்கள் வருகையை வரவேற்கும் மகத்தான காரணங்கள் ஒன்றிரண்டல்ல; பதின்மடங்காய் உள்ளன.
- பஞ்சேந்திரியங்களுக்கும் பரிபூரண விருந்தாகக் கலைத் திறனுடன் அமைக்கப்பட்ட இக்கதையில் கண் கவரும் காட்சிகள் பல உள்ளன. படத் தயாரிப்பில் இதற்கு முன் கண்டும் கேட்டும் இராத 140 காட்சி அங்கங்கள் இதில் அடங்கியுள்ளன.
- 160 பேசும் பாடும் கதாபாத்திரங்களும், ஆயிரக் கணக்கான ஆண்-பெண் நடிக நடிகைகளும் இதில் தோன்றி உங்களை மகிழ்விப்பார்கள்.

வசனம், பாட்டு:
M.H.M.முனஸ்

திரை உலகுக்கு ஒரு திலகம்!
சிறந்தவைகளுள் மிகச் சிறந்தவை!!

விசேஷ அம்சங்கள்

'செட்டு'கள்: நாடகத்தின் பல்வேறு ரசங்களை விளைவிக்கப் பலதரப்பட்ட 60 செட்டுகள் ஏராளமான பொருட் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

'ஷாட்டு'கள்: 1500க்கு மேற்பட்ட "ஷாட்"டுகள் உள்ளன என்பதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்!


கதை: சிறு குழப்பமோ, மாறுபாடோ இல்லாதபடி மிகவும் சுவாரஸ்யமாகத் திரைக் கதை பின்னப்பட்டிருக்கிறது. பல்வேறு வகையில் உச்ச நிலையை எட்டிப் பிடிக்கும் இக்கதையின் போக்கு சுலபமாய்ப் புரிவதாயும், சிக்கல் இல்லாமலும், அறிவின் வளர்ச்சிக்கு ஆதாரச் சின்னமாக அமைந்துள்ளது.

தத்ரூபமானது: கதை மனிதனின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில், யாதொரு இழுக்கும் இல்லாமல் காட்சிகள், சம்பவங்கள், கருத்துகள் இவைகளின் வெவ்வேறு ரூபத்துடன் விளங்குகிறது. "உண்மை, 'கட்டுக் கதை'யை விட விநோதமானது" என்ற பழமொழியை இந்த 'உலகம்' கண்ணாடிபோல் எடுத்துக் காட்டும். இப்படத்தில் அல்லாவுதீனோ, அற்புத தீபமோ இல்லை. ஆனால் உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஊடுருவித் தேடிச் செல்லும் அந்த உண்மையையே இது சித்திரிக்கிறது.

கதாசிரியர்: தற்கால ரஸிகர்கள் விமர்சன நோக்கமும் புத்திக் கூர்மையும் மிக்கவர்கள் என்பதை மறுக்க முடியாது. அவர்களே சிறந்த நீதிபதிகள் ஆவார்கள். பல படத் தயாரிப்பாளரை இந்த நீதிபதிகளின் தீர்ப்பு திகைக்க வைத்திருக்கிறது. ரஸிகர்களின் அபிப்பிராயம் எப்போதுமே சரியானதென்று அறிந்த 'உலக'த்தின் கதாசிரியர், மனிதனின் மனிதத்துவத்தை உணர்வதில் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். ஏனென்றால் மனிதன் எந்தத் துறையில் வாழ்ந்தாலும் அவனுக்கு இயற்கையாய் அமைந்துள்ள சுய சிந்தனைகளும், முன்னேற்றம் காணும் நாட்டமும் தணிவதில்லை என்பதைக் கதாசிரியர் அறிந்தே "உலகத்"தைச் சிருஷ்டி செய்துள்ளார்.

மிகக் கடினமான தோண்டு: வாழ்க்கையின் உச்ச நிலை வாழ்வே. இந்த ஒரு காரணத்தினால் தான் வாழ்க்கை குறிகரமாய் விளங்குகிறது. ஒரு படத்தின் உச்ச நிலை அப்படமே என்பதை நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்கள். குழந்தை வளர்ந்து பெரியவனாக ஆவதுபோல, படம் விறுவிறுப்பாக ஓடி உச்ச நிலையை அடைய வேண்டும்.

திரைக்கதை
மிஸஸ் C.P. முனைஸ்



உலகத்தில்





...கூடித்திரங்கள்

அப்பொழுதுதான் படத்தை அநுபவித்துப் பார்ப்பவர் மனத்தில் சோர்வின் சாயை படராதிருக்க முடியும். மனச்சோர்வைப் போக்கிக் களிப்பில் மூழ்கவே படம் பார்க்கிறார்கள். யாரும் தொகைக் கொடுத்து விலைக்கு வாங்க மாட்டார்கள். எனவே பொழுது போக்குஉன்னதமாக இருக்க வேண்டும்.

ஆனால் விறுவிறுப்பும், ஆற்றலும் கொண்டதொரு கதையில்லாமல் பொழுது போக்கு மட்டுமிருந்தால் திரைப்படம் பெருமை பெறாது.



மனத்துயர் மாற்றும் டாக்டர்

பயங்கரத்தை விளைக்கும் அபரிமிதமான சோகசம்பவங்கள் படத்தின் முழுவதுமோ, அல்லது பெரும் பாகமோ நிறைந்துள்ள கதையானால் படத்தை மீண்டும் மீண்டும் காணத் தூண்டாது. கதைகளுக்கு இயல்பான அம்சங்கள் பல. இவைகள் இன்றி, காதல் மட்டும் சித்திரிக்கப் பட்டாலும் ஒரே மாதிரியாக விறுவிறுப்பு இராது. ஹாஸ்யம் இல்லாமலும் சோபை பெறாது. ஆனால் ஹாஸ்யமோ கதையுடன் இணைந்தே ஒளி வீசுதல் வேண்டும்.

இவ்வளவையும் கவனித்து ஒரு திரைக்கதை எழுதுவது எவ்வளவு கடினமான தொண்டு என்பதை நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்கள்!

ஈடு இணை இல்லாதது: திரைப்பட உலகில் சரியான கதைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, தீர்க்கவேண்டிய முக்கியமான பிரச்னை. பார்த்துத் தீர்ந்த பழமைக் கருத்துக்கள் திரும்பவருவதை விரும்பாத இக் கதாசிரியர் நூதனமான ஒரு சாதனையாக இதை அமைத்திருக்கிறார். கருத்துக்கு மேல் கருத்தும், சம்பவங்களை தொடர்ந்து சம்பவங்களும் மிக நெருக்கமாகப் பின்னப்பட்டிருக்கும் இக் கதை ரசிகர்களின் அநுபவத்திற்கு ஈடு இணையில்லாத புதுமை விருக்காரும்.



பொறுப்பு வாய்ந்த பெற்றோர்

செல்வத்தில் மிதக்கும் உலகம்: லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் தயாரான 'உலக'த்தில் நடனம், கார்னிவல் காட்சிகளுக்கு மட்டுமே ரூ 5,00,000 விநியோகிக்கப் பட்டன. பாடல்களுக்கு ரூ. 3,50,000 செலவாயிற்று. காட்சிக்களங்கள், ஆடை அணிகள் இவைகளும் சில லட்சங்களைத் தாண்டி விட்டன. நடிக நட்சத்திரங்களுக்கு எவ்வளவு செலவானது என்பதை நாம் கூற விரும்பவில்லை. ஏனெனில் அது முறையல்ல. எனினும் திரைப்பட உலகின் தலைசிறந்த நட்சத்திரங்களில் மிகவும் மதிப்பு வாய்ந்த பல்லோரை இந்த "உலகத்தில்" காணும்போது இவர்களுக்கு எத்தகைய உயர்ந்த தொகை அளிக்கப்பட்டிருக்கும் என்பதை நீங்களே உணர்வீர்கள்.

இனிய கானம்: பிரத்தியேகமான ஏற்பாடுகளில் பிறந்த சங்கீதம் "உலக"த்தில் நீங்கள் கேட்டுப் பரவசம் அடையும் சங்கீதம். இந்த இனிய இன்பக் கலை உலகத்தில் முக்கியத்வம் பெற்றுள்ளது. காதல், ஹாஸ்யம், மற்றும் சோகம் ததும்பும் செவிக்கினிய பாடல்கள் உங்கள் ஹிருதயத்தை உலுக்கும்.

இந்தப் படத்தின் ஒவ்வொரு பாகமும் "மறுபடி பதிவு" செய்யப் பட்டது. எத்தனையோ இனிமை வாய்ந்த வசனத்துக்கு இசையின் மெருகு ஏற்றப் பட்டிருக்கிறது. இதனால் காட்சிகளில் லயம் பரவி நிற்கிறது.

முழுப் படத்தையும் "மறுபடி பதிவு" செய்தது திரையுலகில் முதல்முயற்சி என்றே சொல்ல வேண்டும். இந்தப் பெரு முயற்சியின் சாதனைக்கு இரண்டு மாத காலமும் மிகப் பெரிய தொகை பிடித்தன.

நீங்கள் படத்தைப் பார்க்கும்போது இந்த உண்மையை அறிவீர்கள்!

ரசிகர்களாகிய உங்களது பேராதரவை நாடி "உலக"த்தை உங்களுக்கு அளிக்கிறோம். நீங்கள் இந்தத் திரையுலகப் புது முயற்சியைப் பெரிதும் பாராட்டுவீர்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்.

உலகத்தில்

ஒளிவீசும் நக்ஷத்திரங்களில் சுடர் மின்னும் தாரகைகள்!

எம். வி. ராஜம்மா: பிரபலமான நக்ஷத்திரங்களின் வரிசையில் இணையற்ற நடிப்புத் திறனைப் பிறப்புரிமையாகக் கொண்ட இவர் தம்முடைய இயல்பான நடிப்பில் உலகத்தின் கதாநாயகியான "லீலா" என்னும் பாத்திரத்தை அலங்கரிக்கிறார்.

பி. கே. சரஸ்வதி: திரைக்கு இசைந்த தோற்றத்தினாலும், கலைஞர் மெச்சும் நடிப்புத் திறனாலும் ரஸிகர்களின் அபிமான நக்ஷத்திரமாக முன்னேறிய இவர் உலகத்தில் "லலிதா"வாகத் தோன்றிப் புகழ் உச்சியை அடைகிறார்.



களிப்பூட்டும் கலைஞர்

எம். எஸ். திரௌபதி: அறிமுகம் தேவையில்லாத இந்தப் பிறவி நடிகை உலகத்தில் "பிரேமா" என்னும் சிறந்த கதா பாத்திரத்தைத் தாங்கி நடிக்கிறார். பெண்மை உணர்ச்சிகளுக்குப் பிரதிபலிப்பாக விளங்கும் இவரது பாகம்.

டி. ஆர். ரஜனி: ஒளிப்பதிவாளர்களின் பாராட்டைத் தன் துருதுருப்பான பார்வையினால் கவர்ந்த இவர், பொறுப்புடன் நடிக்க வேண்டிய பல சந்தர்ப்பங்கள் நிறைந்த மீனாவாகத் தோன்றுகிறார்.

என். ஆர். சகுந்தலா: இல்லறத்தின் ரம்மியமான நாட்களை அமைதியாக நடத்தும் குடும்பப் பெண் "பத்மா"வின் பாகத்தை ஏற்று இவர் அழகாக நடிக்கையில் கடமையின் முக்கியத்வம் சிறப்பாகத் தெரியவரும்.

லக்ஷ்மிப்ரபா: கஷ்டமான ஒரு சந்தர்ப்பத்திலிருந்து கதா நாயகியைக் காப்பாற்றும் தொண்டில் சிக்கலைக்கே புரட்சி தரும்படியான புது முயற்சியை மேற்கொள்ளும் வைத்தியக் கல்லூரிப் பேராசிரியையாக வருகிறார்.

குமாரி கமலா: குழந்தைப் பருவம் முதலே சாஸ்திரீய நடனத்தின் மூலம் தேச மக்களின் உள்ளத்தில் புகுந்து விட்ட இந்தக் குமாரி,—"உலக"த்தில் மூன்று பாத்திரங்களில் தோன்றி, கலைத் தேர்ச்சியால் பிரமிக்கவைக்கிறார்.

லலிதா-பத்மினி: லளிமையான நடனத்தினால் கலா ரஸிகர்களின் ஹ்ருதயத் துடிப்பையே நிறுத்திவிடக் கூடிய சிறந்த நக்ஷத்திரங்களாகிய இவர்கள் உங்களுக்கென்று உலகத்தில் அளிக்கும் மகத்தான விருந்துதான், ஆகா! எத்தகைய சிறப்பு வாய்ந்திருக்கிறது!

மற்றுமுள்ளோர்: முக்கியமான பாத்திரங்களில் கே. அரங்கநாயகி, என். திலகம் ஜயலக்ஷ்மி அம்மாள், பி. சாரதாம்பாள், அன்னபூரணி, பார்வதி அம்மாள் முதலிய பலர் உள்ளனர். முதல் தரமான ஹாஸ்ய நடிகைகளான வி. கே. சரஸ்வதி, கே. எஸ். அங்கமுத்து, சரோஜா முதலியோர் உங்களைக் குலுங்கக் குலுங்க நகைக்க வைப்பதுடன் வழக்கம் போல் தங்கள் விஷமத்தையும் காட்டுகிறார்கள்!

நடிக மணிகள்

"உலகம்" படத்தில் ஸ்திரீ நட்சத்திரங்களைப் பற்றியே கவனித்துக் கொண்டு வரும் நாம் ஆடவர்களைப் பற்றி அநேகமாக மறந்து விட்டோம்! ஆனால்......திரையுலகிலேயே தனிப் பெரும் பாணியை வகுத்து ஸ்தாபித்தவன் அந்த இணையற்ற பாகவதரை மறக்க முடியுமா! "உலக"த்தில் அவருடைய முகபாவத்தையும் குரலிசையையும் உணர்ச்சிப் பெருக்கையும் அநுபவிக்கப் போகிறீர்கள்!



தந்தையைத் திருத்தும் தனயன்

டி. கே. பகவதி: நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிக்கப் பெரிதும் காரணமான குழுவைச் சேர்ந்த டி. கே. பகவதி,

விறுவிறுப்பான பாத்திரத்தில் தோன்றிப் புகழ் பெறுகிறார்.

டி. எஸ். வரதன் : உலகத்தில் "மோக"னாக வரும் இவர் "கதா நாயகன்" என்ற பதத்துக் கேற்ப, பல கட்டங்களில் பண்புடன் நடிக்கிறார்.

பி. எஸ். வீரப்பா : கடமை வழுவாத மகனாக ஒரு சமயமும், நெறி தவறிய தந்தையாக மற்றொரு சமயமும், ஞானோதயம் அடைந்தவராகக் கடைசியிலும் நடித்து, மனித உள்ளத்தின் உணர்ச்சி ஆழத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறார்.

எஸ். எம். குமரேசன் : "சந்தர்" என்ற முக்கியமான பாகத்தில் நடிக்கிறார். கொள்கைக்காகத் தந்தையை எதிர்த்து, வாழ்க்கையை வெறுத்த அழகியைப் பாழும் மரணத்திலிருந்து மீட்டுக் கடைசியில் தந்தைக்குப் புகழ்தேடிக் கொடுக்கிறார்.

மற்றுமுள்ளோர் : 'வில்லன்' சகாதேவன், கே. துரைசாமி, பீர்முகமது, பொன்னுசாமிப் பிள்ளை, காலம் சென்ற எம். வி. மணி, சுந்தாராம் முதலியோர் உலகத்தில் நடித்துள்ள பலருள் ஒரு சிலர்.

இவர்கள் எல்லோருக்கும்மேல், ஹாஸ்ய நடிகர்களான புளிமூட்டை ராமசாமி, எம். ஆர். சுவாமிநாதன், ஸாயிராம், ஜெயராம், டி. வி. சேதுராமன், மிகப் பெரிய மானிட பர்வதமான குஞ்சிதபாதம் பிள்ளை, ராஜு, கல்யாணம், எஸ். வி. ஷண்முகம், வி. டி. கல்யாணம், பொட்டை கிருஷ்ணமூர்த்தி, எம். எஸ். கருப்பையா முதலிய பலர் சிரிப்பை யளிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.

"உலகம்" அளிக்கும்

பரிசு ரூ. 1,00,000

அதிர்ஷ்டம் புன்னகை புரிகிறது!
பிரவேசக் கட்டணம் இல்லை.
பரிசுத் தொகை உத்திரவாதம் உண்டு.
சுலபமான கேள்விகள்-எளிய விடைகள்-கவர்ச்சிகரமான பொழுதுபோக்கு!
இந்த மின்னல் அறிவிப்பைப் படிக்கும் வாசகர்களை ரூ. 1,00,000 பரிசுத் தொகை திடுக்கிடவே செய்யும்!
இது ஏன் அளிக்கப்படுகிறது?
எப்படி அளிக்கப்படுகிறது?
யாருக்கு அளிக்கப்படுகிறது?
இவை யெல்லாவற்றிற்கும் பதில் 1953, ஜுலை 10உ வெள்ளிக்கிழமை "உலகம்" படம் ஆரம்பமாகும்போது உங்களுக்குத் தெரியவரும்.

ஆக்கியோர் :

வசனம், பாட்டு : எம். எச். எம். முனஸ்
திரைக் கதை : மிஸஸ். சி. பி. முனஸ்
சங்கீதம் : எம். எஸ். ஞானமணி
டி. பூர்ணானந்தம்
ஒலிப்பதிவு : வி. எஸ். சுப்பராமன்
எஸ். பி. கன்னியப்பன்
எஸ். ராஜகோபாலன்
காமிரா : ஆர். ஆர். சந்திரன்
கே. எம். கோவிந்தன்
(ஆப்பரேட்டிங் காமிராமேன்)
எடிட்டிங் : எல். எஸ். ராமச்சந்திரன்
ச. தர்மலிங்கம் (துணை)

நடன போதகர்கள் : கே. கே. ஸின்ஹா, கே. மாதவன், ஜயசங்கர்
மானேஜர் : எஸ். ராமசுப்ரமணியம்
ப்ரொடக்ஷன் மானேஜர் : எஸ். ராகவன்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ்-லிமிடெட், ஸ்டுடியோஸ்
பிராஸஸிங் : விஜெ ஸினி லாபரேட்டரீஸ் லிமிடெட், (R. C. A. சவுண்ட் ஸிஸ்டம்)
இசைத் தட்டுகள் : எச். எம். வி. & கொலம்பியா

பின்னணி பாடியுள்ளவர்கள் :


பி. ஏ. பெரியநாயகி, திருச்சி லோகநாதன், எம். எல். வஸந்தகுமாரி, ஏ.எம். ராஜா, என். எல். கானஸரஸ்வதி, எம். ஸத்யம், பி. லீலா, பி. ஜி. கிருஷ்ணவேணி, எம். எஸ். ராஜேஸ்வரி, வி. என். சுந்தரம், கே. வி. மஹாதேவன், ஜி. கஸ்தூரி, டி. வஸந்தா.

நிர்வாகம் : பி. ஆர். எஸ். பாபு

டைரக்ஷன் : எல். எஸ். ராமச்சந்திரன்

துணை டைரக்டர் : எம். திருவேங்கடம், உதவி டைரக்டர் : வே. லக்ஷ்மணன்

முழுப் பொறுப்பு, மேற்பார்வை : எம். எச். எம். முனஸ்





ஏகாம்பரத்துக்கு ஒரு பெரிய மின்சாரக் கம்பெனியில் வேலை. அந்தப் பெரிய ஸ்தாபனத்தின் ஸ்க்ரு ஆணிகளுள் அவன் ஒருவன். அதைத் தவிர அவன் பார்க்கும் உத்தியோகம் சிற்சில சமயம் உயர்தரமாகவும் (கம்பத்தின் மீதேறும்போது என்பதைக் காதோடு சொல்லி வைக்கிறேன்) சில சமயம் கீழ்த்தரமாகவும் (பூமிக்கடியில் கேபிள் லைனில் வேலை செய்யும்போது) இருக்கும். ஆனால் அவனைக் கேட்டால் தான் இல்லாவிட்டால் இந்தக் கம்பெனியே அரோஹரா தான் என்று சொல்வான். அவன் பிரம்மச்சாரி என்ற காரணத்தினால் தானோ என்னவோ கம்பெனியார் அவனை அபாயகரமான வேலைகளிலேயே ஈடுபடுத்தி வந்தார்கள். அதன் காரணமாகவே அவனுக்கு யாரும் பெண் தர முன் வரவில்லை. ஜாதகம் பொருந்தியிருந்தாலும் கம்பியைத் தொட்டால் ஆன்பாடு ஆபத்துத் தானே என்பது பெண்களைப் பெற்றபெற்றோர்களின் வாதம்.




ஏகாம்பரம் தினம் எட்டு மணிச் சுமாருக்குத்தன் வேலையை முடித்துக்கொண்டு கடைத் தெருப் பக்கமாகப் போவான். தினம் அந்தச் சமயம் பார்த்துத் தெருவுக்கு ஏதோ வேலையாக வரும் அவளுக்கு அவன் எலக்ட்ரிக் கம்பெனியில் வேலை செய்கிறான் என்கிற விஷயம் தெரியாது. ஆனால் அவன் கண்களிலிருந்து புறப்படும் 'எலக்ட்ரிக்' கிரணங்களை ஆகர்ஷிக்கும் 'எலக்ட்ரிக் பவர்' அவள் கண்களில் இருக்கத்தான் செய்தது!



இந்த மௌன நாடகம் நடைபெற்று வந்த காலத்தில் இயற்கை வசமாக ஒரு நாள் சாயந்திரம் மணி ஏழுக்கே எலக்ட்ரிக் கம்பெனிக்கு டெலிபோன் வந்தது. "வினைதீர்த்தான் தெரு, 33ம் நெம்பர் வீட்டில் விளக்கு எரியவில்லை" என்று தெரிவித்தார்கள். அந்தப்பகுதியில் வேலை செய்ய வேண்டிய பொறுப்பு ஏகாம்பரத்துக்கு இல்லை. என்றாலும் அவன் அந்த ராத்மா ஏவிற்றோ என்னவோ. அந்தப் பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டு அவன் கம்பெனியின் சைக்கிளில் வினைதீர்த்தான் கோயிலை நோக்கிப் பறந்தான். கோயிலை வலமாகக் கடந்து 33ம் நெம்பர் வீட்டு இருட்டு வாசலில் வந்து இறங்கினான்.

உள்ளிருந்து அரிக்கன் விளக்குடன் வந்த அவள் இவனைக் கண்டு ஒரு கணம்



"தாத்தா எனக்குத் தம்பட்டம் வாங்கித்தா!"
"பேஷா உனக்கு மாத்திரம் வாங்கித்தரேன். ஆனால் ஒன்னு. எல்லாக் குழந்தைகளிடமும் போய் நான் வாங்கித் தந்தேன்னு தம்பட்டம் அடிக்கப்படாது!"

திடுக்கிட்டான். நடு வீதியில் சந்திக்கும்படி வெளிச்சம்கூட இல்லாத இந்த வேளையில் இங்கே ஏன் வந்தான் என்ற கேள்வி அவள் முகக்குறியில் எழுந்தது. "நீங்கள்தானே ஆபீசுக்குப் போன் செய்தது!......லைன்மேன் எங்கேயோ போயிருக்கிறான்; நானே கவனிக்கலாமென்று வந்தேன்" என்று ஏகாம்பரம் சாமர்த்தியமாகப் பதில் கூறினான்.

ஏகாம்பரத்தைக் கண்டதும் அவளுக்கு ஒருபுறம் பயமும் மற்றொருபுறம் துணிவும் பிறந்தது. அவன் பரபரவென்று கையில் ரப்பர் உறையை மாட்டிக் கொள்ளாமல் வீதியிலுள்ள கம்பத்தின் மேல் ஏற முற்பட்ட போது அவளையுமறியாமல் அவள் 'கிறீச்'சிட்டாள். "ஐயோ! ... நீங்கள் ஏறுகிறீர்கள்! ... எல்லாம் உங்கள் ஆபீஸ் வேலைக்காரன் வந்து பார்க்கட்டும். இல்லை; ஒரு நாள் வெளிச்சமில்லா விட்டால்தான் என்ன?" என்றாள் அந்த அபலை.

ஆனால் ஏகாம்பரம் இரும்புக் கம்பத்தை விட்டு இறங்கவில்லை. பாதி மரத்திலிருந்தபடியே "அதெல்லாம் பயப்பட வேண்டாம்! எனக்கு இதிலெல்லாம் பழக்க முண்டு" என்று அதை நிரூபிக்கிறவன்போல் ஒரு கையை விட்டுவிட்டு ஒய்யாரமாக வளைந்து குரலில் குழைவுடன் பேசினான்.

"எதற்கும் இந்த ரப்பர் கவரைப் போட்டுக்கொள்ளுங்கள்!" என்று அந்த அசட்டுப் பெண் ரப்பர் உறையை எடுத்து மேலே வீசினாள். ஏகாம்பரம் லாகவமாக வாயைத் திறந்து பற்களிடையே அதை 'லபக்' என்று கவ்விக் கொண்டான்.

இந்த நிலையில் உள்ளிருந்தபடியே "அடி, ஹேமு! அங்கே என்னடி பண்ணறே?" என்ற குரல் கேட்டது.

பாதி மரத்திலிருந்த ஏகாம்பரம் "ஹேமு" என்ற பெயரின் சுவையில் தன்னை மறந்து தானும் ஒரு தடவை மனத்துக்குள் அதைத் திருப்பிச் சொன்னான்.

"ஏன்? இன்னும் ஏதாவது வேண்டுமா?" என்று கீழிருந்து ஹேமா கேட்டபோதுதான் அவன் சுய நினைவுக்கு வந்தான்.

"ஒன்றுமில்லை! உங்களை உள்ளிருந்து அம்மா கூப்பிடுகிறாப் போலிருக்கிறதே!" என்றான் ஏகாம்பரம்.

"அம்மாவாவது! அவள் என் அத்தை!" என்றாள் ஹேமு.

"அப்படியானால் அம்மா?"

"எனக்கு அம்மா கிடையாது! அத்தைதான் எனக்கு அம்மா, அப்பா, பாட்டி, எல்லாம்!" என்றாள் ஹேமா.

பாதி மரத்திலிருந்த ஏகாம்பரத்தின் தலையில் யாரோ ஐஸ் கட்டியை வைத்தாற்போல் இருந்தது.

அவன் ஒரே தாவில் மேலே தாவிச் சட்டைப் பையிலிருந்து புது "ப்யூஸ்" ஒன்றை எடுத்து மாட்டினான்.

"ஹேமு! உள்ளே போய் 'ஸ்விச்'சைப் போட்டுப் பாருங்கள்!" என்று சொன்ன ஏகாம்பரத்தை அவள் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்.

ஹேமு உள்ளே சென்று 'ஸ்விச்'சைப் போட்டதும் அங்கே ஆட்சி செலுத்தி வந்த இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டது.

வீடு முழுதும் ஒரே பிரகாசமானதில் அத்தைக்கு ஏற்பட்ட சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. இப்படி வெளிச்சத்தைக் கொடுத்த மகானுபவன்மீது அத்தைக்கு நன்றி யுணர்ச்சி பொங்கியது. உடனே, உள்ளிருந்த அத்தை வெளியே வந்து கொண்டே, "நீ மகாராஜனா யிருக்கணும்! அந்த நாளிலே கிழக் கோபுரத்திலே கல்யாண தீபம் ஏத்தறதுன்னா அவரைத்தான் கூப்பிடுவா! ஒரு வீட்டிலே விளக்கேத்தி வைக்கிறதைப்போல புண்ணியம் இந்த உலகத்திலே வேறு எதுவுமே யில்லை!" என்று மனமார ஆசீர்வாதம் செய்தாள்.

ஏகாம்பரம் தலை நிமிர்ந்து ஹேமுவின் முகத்தைப் பார்த்தான். அவள் கண்கள் மெர்குரி பல்புகளைப்போல் குளிர்ந்த ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருந்தன.

அத்தைப் பாட்டி தொடர்ந்து கேட்டாள்—"ஏண்டாப்பா! இப்படி இந்த ஆபத்தான வேலை யெல்லாம் செய்ய வேண்டி யிருக்கே! வீட்டிலே சம்சாரம், குழந்தைகள் யாரும் கவலைப்பட மாட்டார்களோ?"

"இல்லே, அத்தை! அந்த மாதிரி எனக்காக யாரும் கவலைப் படுபவர்கள் இல்லே! முதன் முதலாக உங்கள் ஹேமுதான்......"

ஏகாம்பரம் தொடர்ந்து சொல்லாமல் நிறுத்திவிட்டான். பின்புறமிருந்து ஹேமா பார்த்த பார்வை 'ஷாக்' அடித்தாற்போல அவனை அப்படியே நிறுத்தி விட்டது!

வட்ட மேஜை

வரவேற்கிறேன்; ஆனால் ......

மதிப்புக்குரிய நம் ராஜாஜி ஓர் இடத்தில், 'இத் திட்டத்தை ஆதரிக்கும் பலரும் சும்மா இருப்பதால் எதிர்க்கும் சிலரின் குரல்கள் பலமாய்க் கேட்கின்றன' என்று கூறியிருக்கிறார். இது முற்றிலும் உண்மை. அநேக ஆசிரியர்கள் அதிலும் கிராமாந்திர ஆசிரியர்கள் முழு மனதுடன் புதிய திட்டத்தை வரவேற்கின்றனர்.

அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் ஜனங்களின் பஞ்ச நிலைமையால் பலர் தங்களின் சிறுவர்களையும், சிறுமிகளையும் தங்கள் தொழிலுக்கு உதவி செய்ய 3, 4வது வகுப்புக்களுக்குள்ளாகவே நிறுத்திக் கொள்வது சகஜமாய் இருக்கிறது. ஆகவே அவ்விதக் குழந்தைகள் கூடிய சீக்கிரம் தாங்கள் கற்ற சிறிதளவு எழுத்தறிவையும் மறக்கின்றனர். இன்னும் பலர் கிட்டத்தட்டப் பாதிக்கு மேல் பள்ளிக்கே வராமலே இருக்கின்றனர். அவர்கள் எழுத்து வாசனை பெற இது ஒரு வரப்பிரசாதம் எனலாம். ஆகவே பள்ளியில் சேர்ந்துள்ளவர் 5-வது வகுப்பு முடிய மட்டுமேனும், தொடர்ந்து கற்கவும், இதுவரை வராமலிருக்கும் பிள்ளைகளைப் பள்ளியில் சேரும்படி தூண்டவும் ஆசிரியர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. முதலில் கிராமாந்திரங்களுக்கு இருந்ததை மேஜர் பஞ்சாயத்துக்கும் விஸ்தரித்திருப்பது மிகவும் போற்றக் தக்கது. ஆனால் கிராமங்களிலுள்ள ஹையர் எலிமெண்டரிப் பாடசாலைகளில், 6, 7, 8 வகுப்புகளுக்கும் ஏன் இது அமுலாக்கவில்லை என்பது விளங்கவில்லை.

ஒரே காம்பவுண்டுக்குள் இரண்டு விதப் பாடசாலைகள், வேறு மணிக்கணக்கு வீதம் பாடம் நடத்துதல், மணியடித்தல், முதலிய கஷ்டங்கள் இருக்கின்றன.

6, 7, 8, வகுப்புப் பிள்ளைகள் சிறு பிள்ளைகளை விடப் பெற்றோர்களுக்குக் கஷ்டமான இக்காலத்தில் ஊதியம் சம்பாதிப்பதில் உதவுவார்கள்.

8-ம் வகுப்பில் 40 பிள்ளைகளிருந்தால் எல்லோருக்கும் 5½ மணி நேரம் பாடம் நடத்துவதை விட்டு 20, 20 ஆகப் பிரித்து, 3 மணி வீதம் நடத்துவது பாடங்களும் சரிவரப் பதியும்படி செய்யவும் பெற்றோர்களுக்கு உதவி செய்யவோ தொழில்களைக் கற்கவோ பிள்ளைகளுக்கு வசதியும் ஏற்படும். ஆகவே 6, 7, 8, வகுப்புக்களுக்கும் கூடிய சீக்கிரம் இந்த மாறுதல் அவசியம் தேவை.

கடைசியாக ஒன்று. உபாத்தியாயர்கள் இந்தத் திட்டப்படியும், காலையில் 3 மணி 10 நிமிஷ நேரமும் மாலையில் 3 மணி 10 நிமிஷ நேரமும் ஆக 6 மணி 20 நிமிஷ நேரமும் ஒவ்வொரு தடவையும் 30 நிமிடம் முன்னதாக ஆஜராக வேண்டி இருப்பதால், 7 மணி 20 நிமிஷம் வேலை நேரமாகிறது. இதை ஆசிரியர்கள் தேசத் தொண்டாக நினைத்துச் செய்ய மனமுவந்து வரவேண்டும் என்பது சரியே. ஆனாலும் ஏற்கெனவே மிக மோசமான பொருளாதார நிலையிலிருக்கும் அவர்களைக் கொஞ்சம் கைதூக்கிவிட வேண்டியது நியாயமே யன்றோ!

உகைப்பம்பாளையம்
22—6—53 டி. சிவராம சாஸ்திரி

முறையற்ற செய்கை

நாஸ்திகர்களை எதற்காக வெறுக்கிறோமோ, அதே முறையற்ற செயல்களை ஆஸ்திகர்களும் செய்வார்களானால் அது அருவருக்கத் தக்கது.

மக்கள் ஆதரவு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாஸ்திகர்கள் தங்கள் அசட்டுத் தனத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். மண் பிள்ளையாரை உடைக்கும் கண்மூடித்தனத்தால் ஆஸ்திகத்தை ஒரு சிறிதும் அசைத்துவிட முடியாதென்பது வெள்ளிடைமலை. அதே போன்று ஸ்ரீ ராமசாமி நாயக்கர் படத்தைக் கூட்டத்தில் வைத்து அடிப்பதாலும், தீவைத்துக் கொளுத்துவதாலும் நாஸ்திகத்தை அழித்துவிட முடியாது. கண்ணியமற்ற முறையில் யார் நடந்து கொண்டாலும் கண்டிக்கப்பட வேண்டியதே முறை.

ஆஸ்திகர்கள் அன்பு நெறியைக் கடைப்பிடித்துச் சன்மார்க்கமாக நடந்து கொள்வார்களானால் அதுவே ஆஸ்திகத்தை வளர்க்கும்.

மதுரை
15—6—53 கூ. ப. விஸ்வநாதன்

●

தெளிவு பிறக்குமா?

நமது தேச முன்னேற்றத்திற்குத் தலைவேதனையாக உள்ள பிரச்னைகளில் 'காஷ்மீர் பிரச்னை'யும் ஒன்று. காஷ்மீரத்தின் பாதுகாப்பிற்காக நம் நாடு கோடிக்கணக்கான பொருளையும் லக்ஷக்கணக்கான உயிர்களையும் இழந்திருக்கிறது. இன்னும் வருஷா வருஷம் நம் நாட்டின் வருமானத்தில் பாதியை ராணுவத்துக்காகவே செலவு செய்து வருகிறது. ஆனால் காஷ்மீர் பிரதமர் அப்துல்லா பகிரங்கமாக நினைத்தன்று ரேடியோ மூலம், மௌலானா ஆசாத்தையும் அருகில் வைத்துக் கொண்டே செய்த பிரசங்கத்தில் "இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுதான். இவற்றில் எதனுடனும் இணையவோ, இணைப்பேயில்லாமல் தனித்துச் சுதந்திர நாடாகவோ இருக்கக் காஷ்மீர் மக்களுக்கு உரிமை உண்டு" என்ற கருத்துப்படப் பேசியிருக்கிறார். இந்தியாவுடன் பூரணமாக இணைந்து விடவேண்டும் எனக் காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை செய்த தீர்மானம் காற்றோடு போயிற்று போலும்!

'பிச்சை யெடுத்ததாம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்றதாம் அனுமார்' என்றபடி இங்கு பஞ்சத்தையும் பட்டினியையும் பாராமல், பாதி வருவாயை ராணுவத்துக்காகச் செலவு செய்து காஷ்மீரத்தைப் பாதுகாத்து வரும் இந்தியாவைப் பற்றி இவ்விதம் பேசும் அப்துல்லா ஆட்சிக்கு உதவுவது விழலுக்கு இறைத்த நீரே.

எனவே, கட்சிச் சார்பற்று நடுநிலை நின்று காஷ்மீர் விவகாரங்களைக் கவனிக்கும் சாதாரண மனிதனுக்கும்கூட அப்துல்லாவின் போக்குப் பிடிக்காது. 'தனி மனிதனைவிட தேசத்தின் நலனே முக்கியம்'. நேருஜி அப்துல்லாவை எக்காரணம் பற்றி ஆதரித்து வந்திருந்தாலும் இனியும் அதையே பின்பற்றுவது வினைக்குப் பிடித்துக் கொண்டு பாதாளக் கிணற்றில் விழுந்த கதையாகவே முடியும்.

குகை சேலம்
19—6—53 வி. கே. கோவிந்தராஜ்

கையும் குழந்தையும்

முதிர்ந்த அனுபவத்தின் மீது நமது அன்பிற்குரிய முதல் அமைச்சர் வகுத்திருக்கும் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு உள்ளது என்பதைக் காண ஆச்சரியமாக உள்ளது.

சரித்திரத்தைப் பயின்று போதித்து வரும் ஆசிரியர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்கட்டும். ஒரு நாட்டின் கலாசாரப் பெருமையை எந்த அளவு கோல் கொண்டு மதிப்பிடுகிறோம்! அந்நாட்டு மக்கள் செய்த அழியாத சிற்பங்கள், கலைக் கோவில்கள், சிலைகள் போன்றவைகள்தானே அவர்களின் நாகரிகத்திற்கு அளவு கோல். அதே மாதிரி குழந்தையின் மனோவளர்ச்சியை நன்கு ஆராய்ந்த விஞ்ஞானிகள் குழந்தையின் கைகளின் வளர்ச்சிக்கும் அதன் மனோ வளர்ச்சிக்கும் விசேஷமான தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். கைத்திறனைப் பயன்படுத்தாத குழந்தையின் மனம் ஓரளவுக்குத்தான் உயரும். மன வளர்ச்சியைப் பூரணமாக்கக் குழந்தை தன் கைகளைப் பயன்படுத்தப் பழக வேண்டும். குழந்தைக் கல்வித் துறையில் விசேஷமான ஆராய்ச்சி அறிவு பெற்ற காலஞ்சென்ற மாண்டிசோரி அம்மையாரின் பின் வரும் வாக்கியங்கள் சிந்திக்கத் தகுந்தன.

"கைகளைப் பயன்படுத்தும் குழந்தை நல்ல பண்பைப் பெறுகின்றான். கைகளைப் பயன்படுத்திப் பழக்கப்படாத குழந்தையின் ஒழுக்கம் மிகத் தாழ்ந்த நிலையிலே உள்ளது. அவனிடம் பணிவும் துணிந்து செயலாற்றும் தன்மையும் காணப்படு வதில்லை. சோம்பேறியாகவும், சந்தோஷமற்றும் காணப்படுகிறான். கைகளைப் பயன்படுத்தும் குழந்தையோ வளர்ச்சி அதிகம் பெற்று உரம் உள்ள நெஞ்சையும் அடைகிறான்."

நாம் வாழும் சூழ்நிலை வேறு, நம் குழந்தைகள் வாழப்போகும் சூழ்நிலை வேறு. வருங்கால குடிமக்களின் தேவைக்கு ஏற்றவாறு கல்வி என்னும் மாளிகையை மாற்றியமைக்கும் திட்டத்தின் அஸ்திவாரம் ராஜாஜியின் ஆரம்பப் பள்ளிகளுக்கான சீர்திருத்தம். இத்திட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்தி, குழந்தைகளின் உடல், மனம், இரண்டும் ஒருங்கே வளருவதில் ஆசிரியர்கள் தங்களுக்குரிய பங்கைச் செலுத்தி நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற முயல வேண்டும்.

பவானி
21—6—53

டி. ஆர். சிவராமன்

●

சிவப்பு நாடா

நம்முடைய ஒப்பற்ற மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் நாட்டுக்குச் செய்த சேவைகள் அனந்தம். முக்கியமாகச் சென்னை மாகாணம் தேர்தலுக்குப் பின் இருந்த கேவல நிலைமையிலிருந்து தற்போதைய நிலைமைக்கும் பெருமைக்கும் அவரே காரணமாவார். அவருடைய ஆட்சியில் பல அற்புதங்களைப் பார்த்தோம். ஸ்திரமான சர்க்கார், உணவுக் கண்ட்ரோல் ரத்து, புதிய கல்வித் திட்டம் முதலிய சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு மக்களின் நல்வாழ்வுக்கு அடிகோலப்பட்டது. எங்கும் ராஜாஜியின் புகழைக் கேட்கலானோம். இருந்தாலும் அடியேன் மனத்திற்குள் ஒரு சிறு சந்தேகம் இருந்து வந்தது. அதாவது சர்க்கார் காரியாலயங்களில் 'சிவப்பு நாடா' முறை முன்போல் சர்வாதிகாரம் நடத்துமே! அதை எப்படி ராஜாஜியால் போக்க முடியும் என்பதுதான். சமீபத்தில் நடந்த ஒரு காரியத்தில் சிவப்பு நாடாவும் அறுந்து எறியப்பட்டு விட்டது என்பதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைகிறேன். சென்ற வருஷம் பத்திரிகையில் விடுத்த ராஜாஜியின் வேண்டுகோளின்படி 4% வட்டி கடன் பத்திரம் வாங்கினேன். அதற்கு முதல் ஆறு மாத வட்டி தவணைப்படி கிடைக்கவில்லை. சப் டிரஷரிக்கு மாதாந்தரம் போயும் பலனில்லாமல் சென்னை சர்க்காருக்குக் கடிதம் எழுதினேன். உடனே தாமதமின்றிக் குறிப்பிட்ட தேதிக்குள் வட்டி கொடுக்க வேண்டுமென்று அதிகாரிக்கு உத்தரவு அனுப்பி நகலும் எனக்கு அனுப்பி வைத்தார்கள். குறிப்பிட்ட தேதியில் சம்பந்தப் பட்ட அதிகாரி எனக்கு ஆளனுப்பி வட்டி வாங்கிக் கொண்டு போகும் படி செய்தார்.

கிருஷ்ணபுரம்
18—6—53

வி. எஸ். மணி

[இந்த நல்ல அனுபவத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம். துரதிர்ஷ்டவசமாக, எல்லா இடங்களிலும் சிவப்பு நாடா ஒழிந்து விட்டதாகச் சொல்ல முடியவில்லை. சர்க்கார் காரியாலயங்களில் உள்ள அதிகாரிகள் பொதுஜனங்களுக்கு ஒத்தாசையாக நடந்து கொள்ளும் பாதையில் இன்னும் வெகு தூரம் போகவேண்டியிருக்கிறது.

ஆசிரியர்.]

●

கைமேல் பலன்!

நான் மூன்றாவது படிக்கிறேன்; என்னுடைய தம்பி முதல் வகுப்பில் படிக்கிறான். இன்று தான் எங்கள் பள்ளியில் புதுமுறைத் திட்டம் வந்தது. அதன்படி ஒரு நேரம் பள்ளிக்குப் போய் வந்தோம். மறு நேரம் உபாத்தியாயர் சொற்படி எங்கள் மாட்டின் கன்றுக் குட்டிக்குத் தண்ணீர் காண்பிப்பதற்குக் கயிற்றை அவிழ்த்தேன். திடீரென கன்றுக்குட்டி ஓடிற்று. அதனால் நான் கீழே விழப்பட்டேன். என் தம்பி புல் கொண்டு வந்தான். அவனையும் முட்டித் தள்ளியது. அதனால் நாங்கள் அடிபட்டோம். இந்தத் திட்டம் எங்களுக்கு இம்முறையில் உபயோகப்பட்டது.

மருடஞ்சாவடி
23—6—53

ஜோதி; ஜோதீசன்

[பலே பேஷ்! மிக நல்ல முறையில் உங்களுடைய பயிற்சி ஆரம்பமாகியிருக்கிறது. தொடர்ந்து செய்து வாருங்கள். கன்றுக் குட்டியைப் பற்றிப் புத்தகத்தில் படிப்பதைக் காட்டிலும் பன்மடங்கு பயன் அடைவீர்கள். இந்தப் பாரத நாட்டுக்குப் பெயரளித்த சகுந்தலை பெற்ற பிள்ளை பரதன் சிங்கக் குட்டியுடன் விளையாடினான் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். அப்போது, கன்றுக்குட்டி முட்டிவிடுமே என்று பயப்பட மாட்டீர்கள்.

— ஆசிரியர்]

●

பையனும் தையலும்!

புதிய கல்வித் திட்டம் ஆரம்பமாகி இரண்டு தினங்களாகின்றன. என்னுடைய பையன் ஐந்து வயதுடைய சிறுவன். இரண்டு நாட்களாகப் பாதி நேரம் பள்ளியில் இருந்து விட்டு, எனது கைத்தொழிலாகிய தையல் கடைக்குப் பிற்பகல் பாதி நேரம் வந்து கொண்டிருக்கிறான். அவனுடைய கருவி கரணங்களை அடக்கி ஒடுக்கு

வதற்கே என்னுடைய பாதி நேரம் போய்விடுகிறது. ஒரு தொழிலியலில் இறங்குவதற்குத் தக்க வயது பன்னிரண்டாகிலும் இருக்க வேண்டும். அதற்குக் குறைந்த வயதுடையவன் மனநிலையே விளையாட்டுநிலையுடையதென்பது நாமறிந்ததே. ஆயினும் இந்தத் திட்டத்தை ராஜாஜி அவர்கள் உருவாக்கி விருப்பதன் காரணத்தை எங்களுக்கு விளக்கி எழுதுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மண்ணச்சநல்லூர்
17—6—53 ம. ப. ஆறுமுகம்

[தங்கள் குழந்தையுடன் இன்னும் இரண்டு குழந்தைகளையும் அழைத்து வரும்படி செய்யுங்கள். சிறிது நேரம் தங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டுப் பிறகு விளையாடப் போய் விடுவார்கள். இடையிடையே தாங்கள் செய்யும் வேலையைக் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருப்பதால் பள்ளிப் படிப்பைவிடப் பதின்மடங்கு பயன் அடைவார்கள். —ஆசிரியர்.]

●

மாணவர்களின் உற்சாகம்

பாகனேரி, போர்டு பள்ளித் தலைமை ஆசிரியர் என்ற முறையில் எழுதுகிறேன். அரசியல் அறிஞர் ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவர்கள் வகுத்துள்ள புது முறைக் கல்வியை வெற்றிகரமாக எங்கள் பள்ளியில் நடத்திவருகிறோம். இக் கல்வி முறையை மக்கள் அறியாததினால் இதை எதிர்க்கிறார்கள். இக் கல்வியைப் பற்றி விளக்கம் கூறியவுடன் மக்கள் மகிழ்ச்சியடைந்து செல்கிறார்கள். இக் கல்வி முறையை மாணவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு பள்ளிக்கு ஒழுங்காக வருகிறார்கள். முன்பிருந்ததைக் காட்டிலும் மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுகிறார்கள். எந்தக் காரியத்தையும் சுறுசுறுப்புடன் செய்கிறார்கள். ஏன் என்றால் மாணவர்கள் பாதி நேரத்தை வீட்டில் கழிப்பதால், மூளைக்கு ஓய்வு ஏற்படுகிறது. பிறகு பள்ளிக்கு வந்தவுடன் பாடங்களைக் கவனிப்பதால் ஓய்வு பெற்றிருந்த மூளை சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது என்று நான் நினைக்கின்றேன். எங்கள் பள்ளியில் ஒன்பது ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். யாவரும் இப்புது முறைக் கல்வியை வெற்றிகரமாக நடத்தி வெற்றிகாண அரும்பாடு பட்டு உழைத்து வருகிறார்கள். உழைப்புக்கு நல்ல பலன் விரைவில் கிடைக்குமென்று நம்புகிறேன்.

இனிமேலாவது செகண்டரி கிரேட் (Secondary Grade) ஆசிரியர்களுக்கு ஹைஸ்கூலில் வேலை பார்த்தால் ஒரு விதச் சம்பளமும் (45+22) எலிமெண்டரி ஸ்கூலில் வேலை பார்த்தால் (40+21) ஒரு சம்பளமும் என்ற முறை நீங்க வேண்டும்.

பாகனேரி
22-6-53 கணேஷ்

●

தாய்மாரின் நன்றி

முக்கியமாக, பெண் குழந்தைகளுக்கு இந்தப் புதிய கல்வித் திட்டம் நன்மை தரும் விஷயம் என்பது நிச்சயம். காலை முதல் மாலைவரை பள்ளி சென்று படிக்கும் பெண்களுக்குப் பள்ளிக்கூடப் பாடங்களைத் தவிர வேறு ஒன்றையும் கவனிக்க அவகாசமே இல்லை. அதிலும் மத்திய தர வகுப்புக் குடும்பத்தில் ஐந்தாறு குழந்தைகளை வைத்துக் கொண்டு அவதிப்படும் தாயாருக்கு வீட்டு வேலையில் உதவ ஆள் வைத்துக் கொள்ள முடியுமா! பெண் குழந்தைகள் மணமாவதற்கு முன்னேயே தாயாருக்கு உதவியாக வீட்டு வேலையைச் செய்யவும் குடும்ப நிர்வாகத்தில் கொஞ்சம் தெரிந்து கொள்ளவும் பள்ளிப் படிப்பு சொல்லிக் கொடுக்கிறதில்லை. இதனால் குழந்தைகளுக்கு ஒரு நேரப் பள்ளியானால் அவர்கள் தாயாருக்கு உதவியாய் வீட்டு வேலையைச் சந்தோஷமாகச் செய்வதுடன் எளிதில் ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் திறமையையும் அடைவார்கள். சங்கீதம், தையல் முதலிய கைவேலைகளைக் கற்கவும் அவகாசம் கிடைக்கிறது. காலையில் சங்கீத வகுப்புக்குப் போய் வந்ததும் அவசரமாகச் சாப்பிட்டு விட்டுப் பள்ளி சென்று மாலை ஐந்து மணிக்குத் திரும்பி வரும் பெண்ணை வீட்டு வேலையில் தாயார் ஒத்தாசைக்கு எதிர்பார்க்க முடியுமா! மாலையில் வந்தால் அவர்களுக்கு வேலை செய்ய மனமும் இருப்பதில்லை. பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கத்தான் அவகாசம் கிடைக்கிறது. அதோடு அவர்கள் தங்கள் வேலைகளைக்கூடச் செய்து கொள்ளாமல் அதையும் அவதியுறும் தாயாரே செய்ய வேண்டியிருக்கிறது. தங்கள் உடைகளைத் துவைத்தல், தட்டுகளைக் கழுவுதல் இதுபோன்ற எத்தனையோ தங்கள் காரியங்களைத் தாங்களே செய்து கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். இதற்கெல்லாம் கூடப் பிறர் உதவியை நாடவேண்டியிருந்தால், கல்வியினால் பயன்தான் என்ன! தாயாருக்கு உதவியாக, பெண்கள் வீட்டு வேலை செய்தால் குடும்பத்தில் சந்தோஷமும் அமைதியும் ஏற்படும்.

இந்தப் புது முறைக் கல்வித் திட்டத்தை ஆரம்பித்த நம் தலைவருக்குச் சகோதரிகள் சார்பாக என் நன்றியைச் செலுத்துகிறேன்.

மயிலாப்பூர்
26-6-53 டி. எஸ். லீலாவதி


●

புண்ணியவான்கள் கவனிக்க!

நான் எங்கள் குடும்பத்தின் மூத்த பிள்ளை. என் தகப்பனாருக்கு நாலு பிள்ளைகள். அவர் மராமத்திலாகாவில் மேஸ்திரியாக இருக்கிறார். மாத வருவாய் ரூ. 42. படி அரிசி 10 அணா வீதம் 2 படி தினம் வாங்க வேண்டியிருக்கிறது. இதிலிருந்து எங்கள் குடும்ப நிலையை நீங்கள் நன்றாக அறியலாம். எப்படியோ கடன் வாங்கி என்னை எஸ்.எஸ். எல். ஸி. பாஸ் செய்ய வைத்து விட்டார். ஆனால் பாஸ் செய்து இரண்டு வருடமாகியும் என் தகப்பனாருக்கு ஒரு பாரமாக இருக்க வேண்டி இருக்கிறது. என் உணவையாவது தேடிக் கொள்ளக் கூட வசதி ஏற்படவில்லை. எனக்கு வேறு நெருங்கிய உறவினர்கள் உதவி செய்யக் கிடையாது. ஆகவேதான் இதை உங்களுக்கு மனதை அடக்கி எழுதுகிறேன். வேலை கிடைக்கா விட்டால் என் உயிரைப் போக்கி கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை.

அணைக்குடி
20-6-53 எம். கண்ணன்

[இந்தப் பிள்ளை எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை ஒவ்வொரு பாடத்திலும் நல்ல மார்க்குகள் வாங்கியிருக்கிறான். ஏதாவது வேலை கொடுக்கக் கூடிய நிலைமையில் உள்ள புண்ணியவான்கள் இந்தப் பிள்ளைக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். விலாசம்: எம். கண்ணன், அணைக்குடி போஸ்டு, திருவிடைமருதூர் வழி, தஞ்சாவூர் ஜில்லா. —ஆசிரியர்]



பொன்னழகி

விஜயம்

3. சித்திரத்தின் கதை

"இளவரசே, இந்தச் சித்திரத்தை உயிருள்ள மாதிரி எழுதியது யார் தெரியுமா? அந்தச் சித்திரக்காரனைக் கண்டு பிடித்தீர்களானால், பொன்னழகியைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்!" என்றான் அந்தப் பரதேசி.

"நல்ல யோசனை. ஆனால் அந்தச் சித்திரக் காரனைக் கண்டு பிடித்து நம் நாட்டுக்கு அழைத்துக் கொண்டு வர வேண்டுமே! அது மிகவும் சிரமமான காரியமாயிற்றே! அதற்கு என்ன செய்வது?" என்றான் குலசேகரன்.

"இளவரசே, சிவநேசரே! நான் இப்பொழுது சொல்லப் போகும் விஷயத்தைக் கேட்டு நீங்கள் நம்ப மாட்டீர்கள். அந்தப் பொன்னழகியின் இணையற்ற சித்திரத்தை எழுதியவன் அடியேன்தான். என்னுடைய இந்தப் பரதேசிக் கோலம் நான் சித்திரக்காரன் என்று சொல்லிக் கொள்ள முடியாமல் செய்கிறது" என்று கூறி அவன் கொஞ்சம் பேச்சை நிறுத்தினான்.

"என்ன! நீங்கள் ஒரு சித்திரக் காரரா? நீங்களா அந்த அழகியின் படத்தை எழுதினீர்கள்? என்றால் இதை நம்பவே முடியவில்லையே!" என்று குலசேகரன் ஆச்சரியத்துடன் கூறினான்.


"ஆம். நம்ப முடியாதுதான். என்னுடைய சித்திரத்தைப் பற்றி நானே சொல்லிக் கொள்ளக் கூடாது. உங்களுக்கு என்னைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆகையினால் நான் சொல்லுகிறேன். நான் ஒருவரைச் சித்திரத்தில் தீட்டினால் அவருக்கும் அந்தச் சித்திரத்துக்கும் அணுவளவும் வேற்றுமை இருக்காது. எத்தனை எத்தனையோ உயிர் ஓவியங்களைத் தீட்டி மன்னர் மன்னர்களிடமிருந்தெல்லாம் பரிசுகள் பெற்றிருக்கிறேன். கடைசியில் இந்தப் பொன்னழகியின் சித்திரத்தைத் தீட்டிய பிறகு, சித்திரம் எழுதுவதையே நிறுத்தி விட்டேன்!"

"ஐயா, நான் கேட்கிறேனே என்று தவறாய் நினைக்கக் கூடாது. உங்களால் இப்பொழுது பொன்னழகியின் சித்திரம் இன்னொரு முறை வரைய முடியுமா?" என்றான் இளவரசன்.

"இளவரசே, நீங்கள் என்னைப் பற்றிச் சந்தேகப்படுவது நியாயம். என்னிடம் காவிக் கல் இருக்கிறது. அதைக் கொண்டு இதோ உங்கள் எதிரிலேயே பொன்னழகியின் சித்திரத்தை வரைகிறேன்!" என்று சொல்லி அந்தப் பரதேசி தன் மடியிலிருந்து காவிக் கல்லை எடுத்து, ஒரு நிமிஷத்தில் கீழே தரையில் பொன்னழகியின் சித்திரத்தை வரைந்தான்.

"ஆகா! அற்புதம்! அற்புதம்! நீங்கள் உண்மையிலேயே ஒரு இணையற்ற சித்திரக்காரர்தான். உங்களை நான் சந்தேகித்ததற்காக மன்னித்து விடுங்கள். சித்திரத்தை எழுதி என் மனசில் சதா அவள் எழில் உருவத்தைப் பதிய வைத்து விட்டீர்கள். அவள் எங்கிருக்கிறாள்? அவளைக் காண முடியுமா? நீங்கள்தான் ஒரு வழி சொல்ல வேண்டும்!" என்று கேட்டான்.

"இளவரசே, சித்திரத்தில் எனக்குள்ள திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஒரு



பெரியவர் என்னைத் தேடிக் கொண்டு திருவனந்தபுரத்துக்கு வந்தார். எனக்குப் பணம் நிறையக் கொடுத்து, கொங்கணை தோத்துத் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்று கப்பலில் ஏற்றினார். மூன்று மாதங்கள் கடல் பிரயாணம் செய்து மேற்கே பல்லாயிரக் கணக்கான மைல் களுக்கப்பால் இருக்கும் மரகதத் தீவை யடைந்தோம். அந்த மரகதத் தீவின் எழில் அரசிதான் பொன்னழகி.

"அந்தத் தீவு மிகவும் செழிப்பாயிருக்கிறது. அந்த நாட்டு மன்னரின் ஏகபுத்திரிதான் பொன்னழகி. மன்னரது உத்தரவு பெற்றுப் பத்து நாள் அங்கேயே அரண்மனையில் தங்கியிருந்து, பொன்னழகியைச் சித்திரத்தில் வரைந்தேன். மன்னர் சித்திரத்தைப் பார்த்துப் பூரித்துப் போனார். சித்திரக்காரரே, பொன்னழகிக்கு விவாகத்துக்கு ஏற்ற வயது வந்தும் அவள் இன்னும் விவாகத்தில் நாட்டம் இல்லாமலே இருக்கிறாள். அவள் மனதைக் கவரும் அழகும் ஆற்றலும் உள்ள ராஜகுமாரன்தான் அவளை மணம் செய்து கொள்ள முடியும். நீங்கள் இன்னும் ஆறு சித்திரங்களை எழுதித் தரவேண்டும். அவைகளை, சிங்களம், புஷ்பகம், சாவகம் முதலிய தீவுகளுக்கு அனுப்பி வைத்து அங்கெல்லாம் பொன்னழகிக்கு ஏற்ற ராஜகுமாரன் இருக்கிறானா என்று தேடி வரற்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். பாரத நாட்டுக்கு அவள் சித்திரத்தை நீங்கள்தான் எடுத்துப் போக வேண்டும்!" என்று கூறி நிறையப் பணம் கொடுத்தார். பொன்னழகியை ஆறு படங்களில் வரைந்து அவரிடம் கொடுத்தேன்.

"பாரத நாட்டுக்குத் திரும்பியதும் பொன்னழகியின் உயிர் ஓவியத்தைத் தீட்டி, பல மன்னர்களை அழைத்து என் சித்திரச் சாலையில் அந்தச் சித்திரத்தைக் காட்டினேன். அந்தச் சித்திரத்தைப் பார்த்த இளவரசர்கள் பிரமித்தார்கள். ஆனால் அந்த ரூபவதியை மணந்து கொள்ள யாருக்கும் தைரியம் வரவில்லை. இந்தச் சமயத்தில்தான் உங்கள் தகப்பனார் பிடிவாதமாகப் பொன்னழகியின் சித்திரத்தை வாங்கி வந்து இரத்தின மாளிகையில் வைத்தார். இரத்தின மாளிகையில் பொருட்காட்சி என்ற உங்கள் அறிவிப்பைப் பற்றி அறிந்ததும், நான் பரதேசிக் கோலத்தில் இங்கு வந்து சேர்ந்தேன். உங்கள் மன உறுதியைச் சோதிப்பதற்காகவே, பொன்னழகியைப் பற்றிக் காட்சிச் சாலையில் முறை முறைத்தேன்!"

"ஐயா, சித்திரக்காரரே! இப்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? நான் பொன்னழகிக்கு ஏற்றவன்தானா? என்னால் அவள் மனதைக் கவர முடியுமா? எது எப்படியானாலும் சரி, அவளை அடைந்தே தீருவது என்று என் மனதில் உறுதி பூண்டு விட்டேன்!" என்றான் குலசேகரன்.

"இளவரசே, ஒரு விஷயத்தைப் பற்றி உள்ளத்தில் உண்மையான உறுதி ஏற்பட்டு விட்டால், பிறகு வெற்றி நிச்சயம். அந்தத் திட நம்பிக்கை வேண்டும்!" என்று அந்தச் சித்திரக்காரன் சொன்னான்.

இந்தச் சமயம் சிவநேசர் மாத்திரம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார். சித்திரக்காரன் அவரைப் பார்த்து, "ஐயா தாங்கள் ஒரேயடியாக மௌனத்தில் ஆழ்ந்து விட்டீர்களே!" என்றான்.

சித்திரக்காரரே, நீங்கள் பொன்னழகியைப் பற்றிக் கூறியவைகளை யெல்லாம் கேட்டதிலிருந்து எனக்கு ஒரே யோசனையாய்ப் போய் விட்டது. கடல் கடந்து வெகு தூரத்துக்கு அப்பால் இருக்கும் மரகதத்தீவுக்கு எப்படிப் போவது? அந்தத் தீவுக்குப் போய்ச் சேர்ந்து விட்டாலும் அந்தப் பேரழகியின் மனதைக் கவருவது என்றால் அது சுலபமான காரியமா?" என்றார் சிவநேசர்.

உடனே குலசேகரன் எழுந்து அவர் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். "என் தகப்பனுக்குச் சமமான நீங்களே என் விஷயத்தில் இப்படிச் சோர்வடைந்து விட்டால், அப்புறம் நான் என்ன செய்வது?" என்று மிகவும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

"இளவரசே, நீங்கள் கவலைப்படாதீர்கள். எப்படியும் அவளைச் சந்திக்க ஏற்பாடு செய்யலாம். முதலில் நமது சித்திரக்கார நண்பருக்கு அரண்மனையில் விருந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்!" என்றார் சிவநேசர்.

(தொடரும்)

டால்மியா சிமெண்ட்

○●○

டால்மியா சிமெண்ட் நீண்டகால உழைப்புக்கும், மிக நேர்த்தியான ரகத்திற்கும் பிரசித்தி பெற்றது. மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், ரஸ்தாக்கள், பாலங்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூட கட்டிடங்கள், வீடுகள் முதலியன நிர்மாணிப்பதில் டால்மியா சிமெண்ட் மிகப் பெரிய அளவில் தற்போது உபயோகிக்கப்பட்டு வருகிறது.

டால்மியா சிமெண்டினால் கட்டப்பட்டவைகள் மிக அழகான தோற்றமளிக்கிறது; நீண்ட நாட்கள் நீடித்து உழைக்கிறது.

எமது இதர சிறந்த தயாரிப்புகள் :

ரீப்ராக்டரீஸ் - ஸானிடரி சாமான்கள் - ரீயின்போர்ஸ்டு சிமெண்ட் காங்கிரீட் குழாய்கள் - இன்ஸுலேட்டர்கள் - ரஸ ஜாடிகள் - ஸ்டோன்வேர் பைப்புகள் (பாதாள சாக்கடைக்கேற்றது)

○●○

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

டால்மியாபுரம் - திருச்சி

ஆஸ்த்மா சளி ஒரே நாளில் கரைந்துவிடும்

ஒரு பிரபல டாக்டரால் மெண்டாகோ (Mendaco) கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, ஆஸ்த்மாவினால் யாரும் அவதிப்படத் தேவையில்லை. இன்ஜெக்ஷன்களோ புகைகளோ இனிமேல் அனாவசியம். ருசியற்ற இரண்டு மெண்டாகோ (Mendaco) வில்லைகளை உணவுடன் உட்கொண்டால் போதும். பத்தே நிமிஷங்களில் அது ரத்தத்துடன் கலந்து சீக்கிரத்தில் சளியைக் கரைத்து விடுகிறது. சுவாசம் லகுவாகி, நரம்புகளும் ஓய்வு பெற்று நல்ல சுத்தமான காற்று சுவாச கோசத்திற்குச் சென்று தேக நிடமும் திரும்புகிறது.

குழந்தை போன்று சுகமாக உறங்குக

மெண்டாகோ (Mendaco) இயற்கை முறையில் வேலை செய்து, (1) மூச்சுத் திணறச் செய்யும் சளி அல்லது கோழையை கரைத்து அகற்றுகிறது. (2) சுவாசக் குழாய்களினுள்ளில் இருக்கும் ஆயிரக் கணக்கான தசை நார்களுக்கு ஓய்வளித்து சுவாசத்தை லகுவாக்குகிறது. (3) தேக நிடத்தையும் விருத்தி செய்து சுத்தமான, புஷ்டியான ரத்தம் ஊறச் செய்கிறது.

ஐந்து வருடங்களாக ஆஸ்த்மாவே இல்லை

ஸ்ரீ ஜெ. ஆர். எழுதுவது: "ஆஸ்த்மா என்னைக் கொல்லாமல் கொன்றது. மெண்டாகோ (Mendaco) உட்கொண்ட முதல் இரவிலேயே நற்பயன் கிடைத்தது. பின்னர் நோய் திரும்பவே யில்லை."

மிஸஸ். ஏ. டபிள்யூ. எழுதுவது : "நான் 25 வருடங்களாக ஆஸ்த்மாவினால் வருந்தினேன். மெண்டாகோ (Mendaco) உபயோகித்த பிறகு இரவெல்லாம் நல்ல தூக்கம் கிடைக்கிறது."

மிஸஸ். ஜீ. இ. வி. எழுதுவது: "ஆஸ்த்மாவினால் இரவு தூக்கமின்றி வருந்துபவர்களுக்கு மெண்டாகோ (Mendaco) ஒரு வரப்பிரசாதமே."

உடனே நற்பயன்

மெண்டாகோவினால் பயனில்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பி உங்கள் பணம் பூராவையும் வாபஸ் பெறுக. உங்கள் கெமிஸ்டிடமிருந்து இன்றே மெண்டாகோ (Mendaco) வாங்கிப் பரீட்சியுங்கள். உத்தரவாதம் உங்களுக்கான பாதுகாப்பு.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்த்மா ★ பிரோங்கைட்டிஸ் ★ குளிர் ஜுரம் இவைகளை ஒழிக்கிறது



என்று 'சுரேந்திரா உயர்தரக் கலாசாலை'யில் நான்காம் பாரத்தில் வாஸுவை அவன் தந்தை ரங்கநாதன் கொண்டு சேர்த்தாரோ, அன்றுதான் ராகவனையும் — பெற்றோரை இழந்த காரணத்தால் அவனை ஆதரிக்கும் பொறுப்பை ஏற்றுக்



'ஓடு! வேலை தேடு!' என்று விரட்டப் போகிறார். என் வேலைக்காக அவர் ஒன்றும் பாடுபடமாட்டார். ஸர்டிபிகேட்டைத் தூக்கிக் கொண்டு எத்தனை காரியாலயங்களுக்கு நம்பிக்கையுடன் ஏறி நிராசையுடன் இறங்க வேண்டி வருமோ!" என்று கூறிக் கண்ணீர் பெருக்கினான் ராகவன்.

"ராகவா!...கவலைப்படாதே! நீ வேலை கிடைக்காமல் வீட்டில் உட்கார்ந்து உன் மாமாவிடம் ஏச்சுப் பேச்சு கேட்டு அவதியுறும்போது, நான் மட்டும் பெருமையுடன் 'வேலை கிடைத்து விட்டது' என்று ஏற்றுக் கொள்ளுவேன் என்று நினைக்காதே!...... உனக்கு வேலை கிடைக்கும் வரை என் தந்தை எனக்கு வேலை பார்த்துக் கொடுத்தால்கூட நான் வேண்டுமென்றே ஏற்றுக் கொள்ளாமல் விட்டு விடுவேன்."

"வாஸு!..." ராகவனுக்கு உணர்ச்சி மிகுதியால் நெஞ்சு அடைத்துக் கொண்டு வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வருவதற்கு மறுத்தன.

* * *

வியாதியால் மெலிந்த உடலுடன் கட்டிலில் படுத்திருந்த வாஸு மெதுவாகத் திரும்பிப் படுத்தான்.

"...என்ன வாஸு! என்ன வேண்டும்? உங்க அம்மாவைக் கஞ்சி கொண்டு வரச் சொல்லட்டுமா?..." என்று அன்பொழுகக் கேட்டான் அவன் நண்பன்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ராகவா!" என்று கூறிய வாஸு சிறிது நேரம் ராகவனின் முகத்தையே பரிவுடன் நோக்கிக் கொண்டிருந்து விட்டு வறண்ட புன்னகை புரிந்தான்.

"ராகவா! நாம் பரீட்சைக்குப் படிச்சிண்டிருக்கச்சே, உனக்கு வேலை கிடைக்கும் வரை நானும் வேலை ஏற்றுக்காம விட்டுக் கொடுக்கிறேன்னு சொன்னேன்! இப்போ நிலைமை எப்படி மோசமாக மாறி யிருக்கு பார்த்தாயா? எனக்காக.. நான் உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கேன்னு, 'வேலைதேடப் போறே'ன்னு உங்க மாமா கிட்டப் பொய் சொல்லிட்டு வந்து இப்படி என் பக்கத்திலேயே உட்கார்ந்து சிசுருஷை செய்கிறாய்? இப்படியே எத்தனை நாளைக் கடத்தப் போறே, ராகவா? ஒருநாளில்லா விட்டால் ஒருநாள் உங்க மாமாவுக்கு விஷயம் தெரிஞ்சா உன் கதி?"—துயரமும், பரிவும் நாத மிழைத்திருந்த குரலில் கூறினான் வாஸு.

"அதையெல்லாம் பற்றி நான் கவலைப் பட்டால் தானே வாஸு? எப்படியோ உனக்கு உடம்பு தேறி நீ பழையபடி எழுந்து நடமாடினால் போதும்! அப்புறம் நாம் இரண்டு பேரும் சேர்ந்து மும்முரமா வேலை தேடினால் இவ்வளவு பெரிய பட்டணத்திலே கிடைக்காமலேயா போய்விடும்?" அன்புடனும், ஆதுரத்துடனும் கூறித் தன் நண்பனைத் தேற்றினான் ராகவன்.

தினமும் வாஸுவின் வீட்டுக்குப் போய் வந்து கொண்டும், மாமா மாமியிடம் 'இந்த உதவாக்கரைப் பயலுக்கு எத்தனை நாளைக்குத் தண்டச்சோறு கொட்டி மாரடிக்க வேண்டுமோ' என்ற வசைமாரியைப் பொறுமையோடு சகித்துக் கொண்டும் தன் சிநேகிதன் வாஸுவுக்காக நாட்களை நெட்டித் தள்ளிக் கொண்டு வந்தான் ராகவன்.

தம்முடைய ஏழ்மை ஸ்திதியில் பணத்தைப் பணமாகப் பாராமல் ரங்கநாதன் செலவழித்ததன் பயனாகவும், உள்ளன்புடன் ராகவன் நாள் முழுவதும் பக்கத்திலேயே உட்கார்ந்து சிசுருஷை செய்து வந்ததன் பயனாகவும் வாஸு மெள்ள உடல் தேறி எழுந்தான். இருந்தபோதிலும் நன்றாகச் சாப்பிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டால்தான் உடம்பில் சதை பிடித்துப் பழையபடி நடமாடி வேலை செய்ய முடியும் என்று டாக்டர் கூறி விட்டார்.

திடீரென்று ஒருநாள் அந்த யோசனை உதித்தது ரங்கநாதனுக்கு. அவருடன் கூடப் பிறந்த சகோதரன் ஜகந்நாதன் என்பவர் திருச்சியில் நல்ல உத்தியோகத்தில் நல்ல ஸ்திதியிலிருந்தார். அவரிடம் தம் புதல்வனை அனுப்பி வைத்துச் சில காலம் வைத்துக் கொண்டு உடம்பைத் தேற்றி யனுப்பச் சொன்னால், பின்னால் அவனால் பொறுப்பான வேலை ஒன்றில் அமர்ந்து உழைக்க

உடம்பில் சக்தி உண்டாகும் என்று தீர்மானித்தார் அவர். வாஸுவுக்கும் எப்படியோ தன் சிநேகிதன் உடம்பு தேறிப் பழைய நிலைமைக்கு வந்து விட்டால் போதுமென்ற எண்ணத்தில் ரங்கநாதனின் ஆலோசனையை மனமுவந்து ஆமோதித்து வாஸுவை ஊருக்குச் செல்லும்படியாகத் தூண்டினான். அதுவரை, தான் அவ்விருவருக்கும் சேர்த்து வேலை தேடிக் கொண்டிருப்பதாகக் கூறினான். ராகவனைப் பிரிய மனமின்றி அவனிடம் விரைவிலேயே திரும்பி வந்து விடுவதாக வாக்குறுதி கொடுத்து விட்டுப் புறப்பட்டான் வாஸு.

வாஸு ஊருக்குச் சென்ற புதிதில் ராகவனுக்கும் அவனுக்கு மிடையே மும்முரமான கடிதப் போக்கு வரத்து நடந்து கொண்டிருந்தது. பிறகு மெள்ள மெள்ள வாஸுவிடமிருந்து வந்து கொண்டிருந்த கடிதங்களின் எண்ணிக்கை குறைந்து திடீரென்று நின்று விட்டது. மனம் உடைந்து திகைப்புற்றுத் தவித்தான் ராகவன். தன் ஏக்கத்தையும் வருத்தத்தையும் கொட்டி அந்தத் திடீர் மனமாறுதலுக்குக் காரணம் கேட்டு எழுதிய கடிதத்துக்கு வெகு நாட்கள் கழித்து வந்திருந்தது ஒரு பதில் வாஸுவிடமிருந்து. தான் தன் சித்தப்பா ஊரிலேயே வேலை ஏற்றுக் கொண்டு விட்டதால் இனி அங்கேயே இருக்கப் போவதாக எழுதியிருந்தான் வாஸு.

* * *

மேஜையின் மீது கவிழ்ந்துக் கொண்டிருந்த தலையை மெதுவாக நிமிர்த்திய ராகவன் வாஸுவின் கடிதத்தை எடுத்துக் கடைசியாக ஒரு முறை படித்து விட்டு 'நன்றி மறந்தவன்; நம்பிய சிநேகிதனை நட்டாற்றில் விட்டவன்; தரித்திரத்திலே உழன்று வாடித் தவித்த அவனுக்குத் திடீரென்று இடையே வந்த அந்தஸ்து அவன் கண்ணெதிரே திரையாய் விழுந்து மறைத்து அவனையே நம்பி, அவனுக்காக எவ்வளவோ உதவிகள் செய்த ஒரு உண்மை சிநேகிதனை மறக்கும்படியாகச் செய்து விட்டது' என்று வெறுப்புடன் முணு முணுத்தான். தன் இதயத்திலிருந்து எழுந்த ஒரு நீண்ட பெருமூச்சுடன் அந்தக் கடிதத்தைச் சுக்கல் நூறாகக் கிழித்தெறிந்தான்.

சற்று முன்பு வரை உருவாக இருந்த அந்தக் காகிதத்தான் பொடிப் பொடியாகச் சிதறிப் பறந்ததைப் போலவே வாஸுவின், நினைவும், அவன்மேல் ராகவன் வைத்திருந்த அன்பும் சிந்திச் சிதறின.

* * *

வாஸுவின் தந்தை ரங்கநாதனின் ஆபீஸில் வேலை பார்த்து வந்த நாராயணன் தாம் முன்பு ரகுராமனிடம் கூறியபடியே அவருடைய மருமான் ராகவனுக்குத் தம்முடைய ஆபீஸில் சிபாரிசுகள் செய்து ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்து விட்டார்.

அநியாயமாக வாஸுவைப் போன்ற ஒரு நிலையற்ற சிநேகிதனின் நட்பை நம்பி ஆயிரம் பொல்லாதவராக இருந்தாலும், தன்னைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் மாமாவைக்கூட அவ்வளவு நாட்களாக ஏமாற்றி வந்ததற்கு வருத்தப்பட்டான். இப்போதாவது சம்பாதித்து அவருக்குக் கொடுத்துத் தன் கடமையை நிறைவேற்றும் காலம் வந்ததே என்று எண்ணி மனத்தில் மாமாவினிடம் பச்சாத்தாபமும், திருப்தியும் கொண்டான் ராகவன்.

அன்று காலை 'போஸ்ட்' என்ற குரல் கேட்டு வாயிற்புறம் விரைந்தான் ராகவன். கவரின் மேலிருந்த கையெழுத்தைப் பார்த்தவுடனேயே அது வாஸுவிடமிருந்துதான் வந்திருக்கிறதென்று புரிந்து விட்டது ராகவனுக்கு. முன்பெல்லாம் வாஸுவிட மிருந்து கடிதம் வந்தால் பாதிச் சாப்பாட்டில் கூடக் கையை உதறிவிட்டு எழுந்து, கடிதத்தை வாங்கி வந்து படித்து முடித்த பிறகு சாப்பிட உட்காரும் அளவுக்கு ஆவலும், பரபரப்பும் காட்டிய ராகவனுக்கு, இப்போது வாஸுவின் கடிதத்தைப் பார்த்ததும் ஒரு வித வெறுப்பும், வருத்தமும் தான் தோன்றின. ஏதோ உணர்ச்சியற்ற யந்திரம்போல் கடிதத்தை எடுத்தான் அவன்.

'என் அன்புக்குரிய நண்பன் ராகவனுக்கு,

நீ என்னுடைய அப்பாவின் ஆபீஸில் வேலை ஏற்றுக்கொண்டு முதல் மாத சம்பளமும் வாங்கி யிருப்பாய் என்று நினைக்கிறேன். அதை நிச்சயமாகத் தெரிந்து கொண்ட பிறகுதான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ராகவா! நான் இந்த ஊருக்கு வந்தவுடன் மனசு மாறி, உன்மேலுள்ள அன்பு, நட்பு எல்லாவற்றையும் மறந்து விட்டு என் சித்தப்பா பார்த்துக் கொடுத்த வேலையொன்றில் அமர்ந்து - உன்னை நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதாக நீ இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? ராகவா! அந்த எண்ணத்தை இந்தக் கணமே விட்டுவிடு. உண்மை இதுதான்.

முன்பு நான் உடம்பு சரியில்லாமல் படுத்திருந்தபோது எனக்குச் சிசுருஷை செய்து கொண்டு, வேண்டுமென்றே எனக்காக உனக்கு வந்த வேலைகளையெல்லாம் நீ விட்டுக் கொண்டிருந்தாய் என்ற விஷயத்தை ஒரு நாள் என் தந்தை அறிந்து கொண்டு விட்டார். நீ வீட்டுக்குச் சென்றிருந்த சமயம் அவர் என்னிடம் வந்து, "ஏண்டா வாஸு! உன் மேலுள்ள மட்டற்ற வாத்ஸல்யத்தினால் உன் சிநேகிதன் தான் இப்படி பைத்தியக்காரத்தனமாய், உனக்கு உடம்பு தேறி நீயும் வேலைக்கு வரும் வரை தானும் விட்டுக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லுகிறான் என்றால் அதை நீயுமா சும்மாப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? ...... உனக்கு அரை வயிறோ கால் வயிறோ கஞ்சி வார்த்தாலும், நான் உன்


தந்தை. நீ சாப்பிட்டு விட்டு வேலையின்றி வீட்டில் தண்டமாக உட்கார்ந்திருக்கிறாய் என்பதைப்பற்றி நான் இகழ்ச்சியாக நினைக்க மாட்டேன்; ஏசிக் காட்ட மாட்டேன். என் பெற்ற பாசம் அப்படி என்னை நினைக்க விடாது. ஆனால் வாஸுவின் நிலை அப்படிப் பட்டதல்ல. 'எத்தனை நாளைக்கு இப்படித் தண்டச் சோறு கொட்ட வேண்டுமோ' என்று சொல்லிக் கொண்டே அவனை வளர்க்கும் மாமா போடும் சாப்பாட்டை ஒவ்வொரு வேளை விழுங்கும்போதும் அவன் மனம் எவ்வளவு பாடு படும் தெரியுமா? என்னுடைய சிறு வயதில் எனக்கே அது போன்ற அனுபவம் ஒரு சமயம் ஏற்பட்டிருக்கிறது. அப்போது நான் எவ்வளவு துயரமும், மனச் சோர்வும் அடைந்திருக்கிறேன் என்பதை நினைத்தால் இப்போது ராகவனின் மன நிலைமை எப்படியிருக்குமென்று எனக்கு நன்றாக விளங்குகிறது. ஆனால் அவன் அந்த கஷ்ட நிஷ்டூரங்களையும், சொல்லம்புகளையும் உனக்காகப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளுகிறான். அதை நினைத்துப் பார்க்கும் போது தற்சமயம் எனக்குப் பெற்றெடுத்த புதல்வனாகிய உன்னைவிட ராகவனின் மேல் தான் மட்டற்ற அன்பும், அவன் தற்போது சிந்தித் தவிக்கும் நெருக்கடியான நிலைமையின் மீதுதான் அளவற்ற பச்சாத்தாபமும் தோன்றுகின்றன. என்னுடைய ஆபீஸில் வேலை யொன்று காலியாக இருக்கிறது. அதை ராகவனுக்குத்தான் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது என் தீர்மானம்.

"ஆனால் நீ இங்கேயே இருந்தால் அந்த விருப்பம் நிறைவேறாது. உன்னிடம் ராகவனுக்குள்ள அத்தியந்த சிநேக பாவம் காரணமாக அவன் உன்னை விட்டுத் தான் மட்டும் அதை ஏற்றுக் கொள்ள ஒரு நாளும் சம்மதிக்க மாட்டான். அந்த வேலை உனக்குக் கிடைத்தால் உன் குடும்பக் கஷ்டம் தீருமே என்று வாதாடுவான். அதனால் உடம்பைத் தேற்றிக் கொண்டு வர அனுப்புவதாகக் கூறி விட்டு உன்னை உன் சித்தப்பா ஊருக்கு அனுப்புகிறேன். அதுமட்டுமல்ல. உன்னை ஊருக்கனுப்பி விட்டு இந்த வேலையைப் பற்றி அவனிடம் சொன்னால், 'வாஸு ஊரிலிருந்து வந்த பிறகு அவன் என்ன செய்வான்' என்று கேட்பானாகையால், நீ ஊருக்குச் சென்ற சில வாரங்களுக்கெல்லாம் திடீரென்று அங்கேயே வேலை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும், இனி அங்கேயே இருக்கப் போவதாகவும், உன்மேல் ராகவன் மனத் தாங்கல் அடையும்படி கடிதம் எழுது. அது மட்டுமின்றி நானும் அந்த வேலையைப் பற்றி நானாகவே அவனிடம் கூறாமல் என் சிநேகிதர் ஒருவர் மூலம் சாமர்த்தியமாகச் சொல்லச் சொல்லி அவனை ஏற்பாடு செய்யும்படி சொல்கிறேன். உன்மேல் மட்டற்ற வாஞ்சை கொண்டிருக்கும் உன் சிநேகிதனின் மனத்தைச் சாதாரண முறையில் மாற்றுவது கடினமாகையால் இப்படிப்பட்ட சிக்கலான சூழ்ச்சியை நாம் செய்ய வேண்டியதாக இருக்கிறது" என்று கூறி முடித்தார். என் தந்தை கூறியவை அவ்வளவும் எனக்குச் சரியென்றே பட்டது. இப்போது அதன்படியே எல்லாம் வெற்றிகரமாக நிறைவேறி விட்டன. இனி உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. வேலை என்று ஒன்று ஏற்றுக் கொண்ட பிறகு இவ்வளவு நல்ல சம்பளமும் வரும்போது அதை நீ இனி எனக்காக விடப் பார்த்தால்கூட உன் மாமா உன்னைச் சும்மா விட்டுவிட மாட்டார். என்னுடைய சூழ்ச்சி வேலிக்குள் நீ மாட்டிக் கொண்டு விட்டாய்.

எனக்கு உடம்புக்கு வந்திருந்தபோது நீ பட்ட பாடுகளுக்கும் சிரமங்களுக்கும் பிரதியாக உன் உயிர்த் தோழனாகிய நான் இது கூடச் செய்யாவிட்டால் அப்புறம், பள்ளிக் கூடத்தில், 'இடர் வந்த காலத்துக் கைகொடுத்து உதவுவோனே உண்மைத் தோழன்;' 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை; செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்று நாம் படித்துப் படித்து உரு ஏற்றியதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக் காயாக அல்லவா ஆகிவிடும்?

நான் வந்து ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டதென்று என் சித்தப்பா ஜாடை மாடையாக முணு முணுத்தார். நான் வந்த காரியமென்னவோ தீர்ந்து விட்டது. அடுத்த வாரம் புறப்பட்டு வருகிறேன்.

உன் உயிர்த்தோழன், வாஸு.'



மயிலாப்பூர், டாக்டர் கெ. சங்கரன் அவர்களின் புதல்வி சௌ. பார்வதிக்கும், திருவனந்தபுரம்-அட்வகேட், ஸ்ரீ ராமலிங்கய்யர் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி பத்மநாபன் பி.ஏ. (Asst. Manager M/s. Parry & Co., Ltd) அவர்களுக்கும், சென்னை ஆள்வார் பேட்டையில் சென்ற ஜூன் மாதம் 3-ம் தேதி, அதி விமரிசையாக திருமணம் நடந்தேறியது. திருமணத்தின்போது ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

வாழ்க மணமக்கள்!

இணைப்பு வேண்டுமா?

'கல்கி' 21-6-53 இதழிலுள்ள வட்ட மேஜைப் பகுதியில் திருவிதாங்கூர் கொச்சியைச் சென்னை மாகாணத்தோடு இணைக்கும் கோரிக்கை பற்றி நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் கருத்தைத் தாங்கள் கேட்டிருப்பதால் இதை எழுதுகிறேன்.

திருவிதாங்கூர் கொச்சி தாய்த் தமிழகத்தோடு சேரும் நன்னாளை எண்ணி ஏங்கி நிற்கும் எண்ணிறந்த தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் ஒன்றாகிய தேவிகுளத்திலுள்ள தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் நாஞ்சில் நாட்டுத் தமிழன் நான். இவ்விணைப்பைப் பற்றித் திருவாங்கூர் கொச்சி மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் எங்கள் அன்பிற்கும் பூரண ஆதரவுக்குமுரிய எங்கள் பிரதிநிதி ஸ்ரீ சிதம்பர நாடாருடைய அபிப்பிராயமே எங்கள் இதய பூர்வமான விருப்பமும். நானறிந்த வரையிலும் சுயநலமின்றி நாட்டின் நன்மையைக் கருதும், எல்லாத் திருவிதாங்கூர் தமிழர்களும் இவ்விணைப்பைப் பூரணமாய் ஆதரிக்கிறார்களெனத் துணிந்து கூறலாம்.

தோழர் வி. ஒய். ரேசன் கூறுவதுபோல தமிழ் மக்களாகிய நாம் எம்மொழி பேசுபவருடனும் எவ்வித நாகரீகமுடையவருடனும் சுமுகமாகவும் சகோதர பாவத்துடனும் நடந்து கொண்டு வந்திருக்கிறோம். அதுபோலவே இன்னும் நடந்து கொள்ளத் தயாராகவுமிருக்கிறோம். ஆகவே இம்முறையும் நம் மலையாள சகோதரர் கடந்த காலத்திலே நமக்கு அநீதிகள் இழைத்திருந்த போதிலும் அவற்றை மன்னித்து மறந்து அவர்களையும் அன்போடு ஏற்று அணைத்து அவர்கள் செய்த தவறுகளைத் தாங்களே உணர்ந்து கொள்ளச் செய்வதோடு, தமிழ்ப் பெருமக்கள் தகைமை வாய்ந்தவர்கள், தனிக் குணம் படைத்த பெருந்தன்மையுடையோர் என்பதையும் நிரூபிப்பது நம் கடமை. தமிழன் தடை சொன்னான், அதனால் நாங்கள் சேரவில்லையென்று அவர்கள் குறை கூற இடங்கொடுப்பது தமிழ் மரபின் பெருமைக்குரியதல்ல என்பது என் கருத்து.

கடலார் எஸ்டேட்
21—6—53
பி. ஐயாத்துரை

* * *

அபாயம் வருகிறது!

"செத்தவன்தான் சுடுகாடு அறிவான்" என்பது நம் முது மொழி. மலையாளிகளின் தாக்குதலுக்கு உட்பட்டால்தான் அதன் லாபம் உங்களுக்குத் தெரியும். நாஞ்சில் தமிழகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமே, எனப் பயந்த கேரளியர்களில் சிலர் (பதவிக்கு ஆசைப் பட்டவர்கள்) ஐக்கிய கேரளம் வேண்டாம், "திருவாங்கூர்—கொச்சி சென்னையுடன் இணைய வேண்டும்" என்ற புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டு விட்டார்கள். நாஞ்சில் தமிழகம் பிரிந்தால் கேரளர் அரிசிக்குத் திண்டாடி அன்னிய மாகாணத்தினிடம் கை நீட்டிக் கேட்க வேண்டியதுதான் என்பது பூகோள சான்று. இதை நன்கு உணர்ந்த மலையாளிகள் "ஐக்கிய கேரளம்" வேண்டாம் எனக் கூச்சலிடுகின்றனர்.

இப்பொழுதுதான் ஆந்திரர்களிடம் இருந்து தமிழகம் விலகி வாழப் போகிறது. அதற்குள் மலையாளிகளையும் தமிழ் நாட்டுடன் இணைத்துவிடப் பாடுபட வேண்டாம். இணைய முடியாது. இணையவும் கூடாது. சேர்ந்துவிட்டால் சித்தூரை இன்று நேரு அரசாங்கத்தார் "தகராறுக்கு இடமில்லாத தெலுங்குப் பிரதேசம் என்று கூறியது போல் பிறகும் நாஞ்சில் நாடு தகராறுக்கு இடமில்லாத மலையாளப் பிரதேசம்" என்று கூற முயற்சிப்பார்கள். அந் நிலை வராதிருக்கத் தமிழ்த் தாய்தான் தமிழர்களைக் காக்க வேண்டும்.

நாகர்கோவில்
20—6—53
ஜெ. நவன்

* * *

உகந்ததல்ல!

ஜூன் மாதம் 21உ "கல்கி" பத்திரிகையில் தமிழ்நாடும் கேரளமும் என்ற தலைப்பில் வி. ஒய். ரேசன் எழுதியவை அவ்வளவும் முக்கியத்துவம் பெற்றவை.

மலையாளிகளின் ஜனத்தொகை பெருகிக் கொண்டே இருப்பதோடு அவர்கள் கல்வியும் கலாசாரமும் பெருகிக் கொண்டே இருக்கிறது. அவர்கள் எந்தத் தொழிலாகிலும் சரி தோட்டியிலிருந்து தொண்டைமான் வரைக்கும் வேலை செய்யப் பின் வாங்க மாட்டார்கள். அந்தத் திறமையாலும் உழைப்பாலும் அவர்கள் தமிழ் நாட்டில் இல்லாத இடமே இல்லை; செய்யாத வேலையும் இல்லை. தமிழர்கள் இப்பொழுது பெருந்தன்மையாக அவர்களிடம் வித்தியாசம் எதுவும் பாராமல் இருக்கிறார்கள்.

மலையாளமும் தமிழ்நாடும் இணைக்கப்பட்டால் தமிழர்கள் தங்கள் நாட்டை விட்டே வெளியேற நேரிடும். மலையாளிகளே யாவற்றையும் ஆக்கிரமித்துக் கொள்ளுவார்கள். அது நிச்சயம். அப்பொழுது இருவரிடையே மனக் கசப்பு ஏற்பட்டுத் தீராத பகை மூண்டுவிடும். ஆகையால் அதிகம் நெருங்காமல் இப்பொழுது இருக்கும் முறையே நீண்ட சிநேக பாவத்திற்கு இடம் தரும். பாஷாவாரியாக ஏற்பட இருக்கும் மாகாணங்களை எந்தக் காரணத்தாலும் ஒன்று படுத்துவது எதிர்கால அபிவிருத்திக்கு உகந்ததல்ல.

சென்னை
22—6—53
தி. வெ. புருஷோத்தமன்

* * *

ஐக்கிய தமிழகம்

திரு-கொச்சி சென்னையோடு இணைந்தால் திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் என்று ஒன்று தோன்றியதன் அர்த்தம்தான் என்ன! தமிழர்களாகிய நாங்கள் பத்து வருடமாகப் படாத பாடுபட்டுப் போராடி வருவது எதனால்! திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகள் சென்னை ஸ்தாபனத்தோடு சேர வேண்டும் என்ற ஒரே கோரிக்கைக்காகவே.

சென்ற இரு சட்டசபைத் தேர்தலிலும், முனிசிபல் தேர்தலிலும் கூடத் தமிழ்ப் பகுதிகள் கன்னியாகுமரி முதல் - கரமனை வரையிலும் இருக்கிறது என்பதை மலையாள அரசாங்கத்திற்குப் பெரும்பான்மையான வாக்குரிமைகளால் எடுத்துக் காட்டியும் இருக்கிறோம். ஆகையால் தமிழர்களாகிய நாங்கள் விரும்புவது திருவாங்

கூர்த் தமிழ்ப் பகுதிகள் மட்டும் சென்னை ஸ்தாபனத்தோடு இணைய வேண்டும் என்பதுதான்.

நாகர்கோவில்
22—6—53

எஸ். நடராஜன்

* * *

தனிக் குடித்தனம் வேண்டும்

தற்போது திருவாங்கூர்—கொச்சி தமிழகத்துடன் இணைந்தாலும் காங்கிரஸ் திட்டமாகிய மொழி வழி மாகாணம் அமைக்கும்போது பிரித்துத்தானே ஆகவேண்டும்! சகோதரர்களுக்குள் மனக் கசப்பு, சண்டை முதலியவை முற்றுமுன் தனிக் குடித்தனம் இருத்துவது நல்லதல்லவா! மேலும் ஐக்கியத் தமிழகம் உருவாகி விட்டால் இன்னொரு நாள் பாஷாவாரி மாகாணம் வேண்டுமென்று தமிழ் மக்கள் குரல் எழுப்ப வேண்டிய தேவையும் இருக்காது. இன்றும் உமி கொண்டு வருபவரோடு, அவல் கொண்டு வருபவர் இருவரும் கலந்து ஊதி ஊதித் தின்னலாம் என்பதில் அவல் கொண்டு வருபவர் அதை எப்படி ஒப்புக் கொள்ளுவார்!

நாகர்கோவில்
22—6—53

ம. ஸ்டீபன்

* * *

உள் எண்ணம்

துர்ப்பாக்கிய வசமாக திருவாங்கூர் கொச்சி தமிழ் மந்திரி ஸ்ரீ சிதம்பரநாத நாடார் சமீபத்தில் சென்னையில் பத்திரிகை நிருபர்களிடையே பேசியது, நாயகத்தினர் திருவாங்கூர் தமிழர்களாகிய எங்களைப் பற்றித் தங்கள் குறிப்பில் கண்டுள்ளபடி தப்பர்த்தம் செய்து கொள்ளுவதற்கு இடமேற்பட்டு விட்டது.

மந்திரி இதில் தவறினாரே தவிர, பதவியை அன்னாருக்குத் தேடிக் கொடுத்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸோ, அதன் முக்கியத் தலைவர்களோ, இந்த ஸ்தாபனத்தை ஆதரித்து வரும் பொது மக்களோ தவறு செய்யவில்லை.

இவ்விணைப்புத் தீர்மானம் பற்றி நாங்கள் நினைப்பது என்ன!

1. தமிழகத்துடன் மலையாளப் பிரதேசங்களை இணைத்து விடுவது மலையாளிகளுக்கு நன்மை பயக்கக்கூடியது என்பதை எல்லா மலையாளிகளுக்கும் வற்புறுத்துவதோடு மத்திய காங்கிரஸ் தலைவர்களை இதற்கு இணங்கச் செய்யவுள்ள ராஜதந்திர தீர்மானமாகும்.

2. பற்றுக்குறைப் பிரதேசமான மலபார் என்கிற ஒரு ஜில்லாவுக்கு இன்று சென்னை அரசாங்கத்தில் கிடைத்துவரும் சகல சௌகரியங்களைப் போல் இன்னொரு பற்றுக்குறைப் பிரதேசமான திருவாங்கூர் - கொச்சி சகோதர மலையாளிகளும் அனுபவிக்க வேண்டும் என்ற இனப்பற்றை இத் தீர்மானம் நன்றாகக் காட்டியிருக்கிறது.

நிற்க, இவ்விணைப்புத் தீர்மானத்தை வரவேற்று தி. கொ. பிரதேச காங்கிரஸ் பொதுக் காரியதரிசியும் மூக்காள் எம். எல். ஏ. யுமான ஸ்ரீ ஏ. பி. உதயபானு 6–5–'53 மலையாளப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கும் கீழ்வரும் அறிக்கையிலிருந்து மலையாளிகளுடைய உள் எண்ணத்தை நாம் நன்கு அறிய முடியும்.

'இவ்விணைப்பினால்...ஜனநெருக்கம் அதிகமுள்ள கோளப் பிரதேசத்திலுள்ள மக்களுக்குச் சென்னை ராஜ்யத்திலுள்ள இதர பிரதேசங்களுக்குச் சென்று குடியேறுவதற்கும் மற்றும் பல வசதிகள்

ஏற்படும். உத்தியோகங்கள், தொழில் மற்றுமுள்ள துறைகளிலும் மலையாளிகள் கூடுதல் கல்வியறிவு பெற்றவர்களாதலால் ஜனத்தொகை விகிதத்தை விடக் கூடுதல் பிரதிநிதித்துவம் கிடைக்கும். மந்திரி சபையிலும் 50 சதவிகிதம் மலையாள மந்திரிகள் வருவதுடன், பல தடவை மலையாளிகளே முதன் மந்திரியாகவும் வர முடியும்.

ஆகவே, தமிழகத்தைப் பல வழிகளிலும் சுரண்ட வேண்டும் என்ற மலையாளிகளின் மலபார் தீர்மானத்தை – சதித் திட்டத்தை – தி. கொ. தமிழ் மக்கள் முழு மனதோடு எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகர்கோவில்
23—6—'53

மணி

●

நோக்கம் நல்லதல்ல!

நாஞ்சில் தமிழன் என்னும் ஹோதாவில் நான் சில சொல்லுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். (தற்போது சென்னையில் தங்கி யிருக்கிறேன்.)

முத்து எடுக்கப் போய்க் கிளிஞ்சல் 'கண்ட' கதையாயிற்று எங்கள் கதை! தென் திருவாங்கூர் தமிழ்ப் பிரதேசம் தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்பதற்காகத்தான் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டதே யொழிய, மலையாளி மந்திரி சபையில் அங்கம் வகிக்கவோ, சமஸ்தானத்தில் சோஷலிஸ்டுகளோ கம்யூனிஸ்டுகளோ பதவிக்கு வர முடியாதபடி தடுப்பதற்கோ அல்ல. கனம் ராஜாஜி மந்திரி சபையில் பங்கு கொள்ளும் காமன்வீல் கட்சியோ, மந்திரி மாணிக்கவேலரோ சட்டசபைக்கு வெளியே காங்கிரஸை எதிர்க்கிறார்களா! ஆனால் இந்த அதிசயம் அங்கு உண்டு. பஞ்சாயத்துத் தேர்தலில் தென் பகுதியில் தேசிய காங்கிரசும் தி. த. நா. காங்கிரசும் சிண்டு பிடிக்கின்றன. சட்டசபையில் கூட்டு; வெளியே திட்டு. அரசியல் அறிவைக் கைவிட்ட இந்தத் தி. த. நா. கா. வைப் பற்றியோ, மக்கள் சபையில் அதன் பிரதிநிதித்வ பலம் பற்றியோ, மந்திரி பதவியில் அதன் ஸ்தானம் பற்றியோ வகுப்பு வெறியற்ற தமிழருக்கு அக்கறையில்லை. மாஜி எம். எல். ஏ. தாணுலிங்க நாடாரும், இன்றைய சுயேச்சை எம்.எல்.ஏ. குஞ்சன் நாடாரும் தங்கள் சகாவான மந்திரி சிதம்பர நாடாரை நாடியே வந்திருக்கின்றனரே யொழியத் தமிழருக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென்ற தாகம் தணிய தி. த. நா. கா. வில் சமீபத்தில் தொத்திக் கொள்ளவில்லை. இந்த லட்சணத்தில் 'இணைப்பை உங்கள் மந்திரி ஆதரிக்கிறார்' என்று சொல்லுகிறீர்கள்.

சென்னை பஞ்சப் பிரதேசமாம். கேரளத்தில் வளம் கொஞ்சுகிறதாம். (நாஞ்சில் நாட்டு 'நெல் இல்லாவிட்டால் பார்க்கலாம்!) இப்படியெல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். உள்ளூர உத்தியோகங்களைப் பற்றிப் பிடிக்கலாம் என்ற ஆசை உண்டு. அவர்கள் நோக்கம் நேருவின் கைகளுக்குப் பலம் அளிப்பது அல்ல. திருவாங்கூர் கொச்சியைச் சென்னையோடு சேர்த்துக் குட்டையைக் குழப்பிப் பின் பாஷாவாரி மாகாணம் பிரியும்போது ஆந்திரர் சென்னை மீது உரிமை கொண்டாடியது போல ஏதாவது செய்யப் போகிறார்கள். நீங்கள் வேறு 'பலே மலையாளிகள்' என்று முதுகில் தட்டிக் கொடுக்கிறீர்கள். இணைப்பு வேண்டாம்! திரிசங்கு சுவர்க்கத்திற்கு எங்களை ஆளாக்காதீர்கள்!

சென்னை
22—6—53

மு. காஜா மொகிதீன்

இணைப்பு வேண்டாம்!

திருவிதாங்கூர்த் தமிழர்களாகிய நாங்கள் மலையாள சகோதரர்களிடமிருந்து அடியும் உதையும் பட்டு உயிரிழப்பதைவிட விடுதலைப் போரிலே உயிர் விடுவதே மேல் என்று சிறிது நாட்களுக்கு முன்பு இறங்கினோம். திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் எங்கள் இலட்சியக் கட்சியாகத் தொண்டாற்றிற்று. தி. த. நா. காவின் உதவியின்றி ஒரு அரசாங்கம் அமைக்க முடியாது என்ற நிலையில் வந்த பின்தான் காங்கிரஸ் எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால் நாங்கள் கேரள காங்கிரஸுடன் சேர விரும்பவில்லை. சேரமாட்டோம். சேரவும் இல்லை. பார்லிமெண்டரிக் கட்சிதான் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன் பிரதிநிதிதான் மந்திரி சிதம்பரநாதன் அவர்கள்! இவ்வளவு தூரம் தமிழன் தேவை இருக்கும் கூடப் பஞ்சாயத்துத் தேர்தலின்போது என்ன நடந்தது என்பதை அறிந்தால் 'மலையாள சகோதரர்களை இங்கே சேர விடக் கூடாது' என்று நீங்களே கூறுவீர்கள். மணவாளக் குறிச்சி, வில்லுக்குறி, மற்றும் பத்துப் பதினைந்து வார்டுகளில் பல தமிழ் ஏழைக் குடும்பங்கள் வெளியே வந்து வோட்டுச் சாவடிக்குப் போக முடியவில்லை. வெளியே நம் மலையாள சகோதரர்கள் கத்தியுடன் காவல் நின்றனர். போலீஸின் உதவி காங்கிரஸ் அபேட்சகர்கள் நிற்கும் இடங்களில் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட மலையாள சகோதரர்களையா சேர்த்துக் கொள்வது!


கேரளம் ஒரு பற்றாக்குறை நாடு. உழைக்க உரமற்ற கைகள். பிறர் உழைப்பால் உண்டு வாழ்ந்த தேகம். இனியும் வாழ அப்படி ஆசை கொள்வது இயற்கைதானே! என்ன வானாலும் நாஞ்சில் சென்னையுடன் இணைந்து விடும். மிஞ்சிய திருவிதாங்கூரைத்தான் கேரளம் என்கிறோம் நாங்கள். அத்துடன் மலபாரையும் சேர்க்கும்போது உண்ணும் உணவுக்கும் அலைய வேண்டியதுதான். நேர்மாறாக, திருவிதாங்கூர்த் தமிழகமும் சேர்ந்த ஐக்கிய கேரளம் கொடுப்பதாகச் சொல்லிப் பார்த்தால் தெரியும்! நீங்களே வருந்தி அழைத்த போதும் சென்னையுடன் இணைய மாட்டார்கள் மலையாளிகள். நாஞ்சில் நெல்லும் இரணியல் பட்டுக்கரை வேஷ்டியும் இருக்கும்போது அவர்கள் ஏன் சென்னையுடன் சேருவார்கள்!

ராஜாஜியைக் கிழ உருவில் படமிட்டுக் கேரளத்தை இளம் குமரியாக இட்டு இணைப்பைத் தூக்குக் கயிறாகப் போட்டு "இவரை மணந்து கொள். இந்தக் கயிற்றை உன் கழுத்தில் போடுவார்" என்று கார்ட்டூன் போட்டுள்ளது கேரள பிரபல பத்திரிகையான விஸ்வரூபம்! ராஜாஜியா சொன்னார் இணையுங்கள் என்று! பின் எதற்கு ராஜாஜியை இப்படிக் கேலி கூத்துச் செய்ய வேண்டும்! இந்தியாவின் முதல் ராஜ தந்திரி நம் ராஜாஜி. அவரைத் தூற்றி இங்குள்ள பல பத்திரிகைகள் 'இணைப்பை' இணைத்துக் கார்ட்டூன் போட்டுள்ளது. தன் தவறை உணர முடியாமல் பிறர் மீது தன் தவறைப் போடும் குணம் படைத்தவர்களுடனா வாழ வேண்டும்!

திருவிதாங்கூர்த் தமிழகம் மட்டும் சென்னையுடன் இணைவதே எங்கள் லட்சியம். கேரளம் முழுமையும் சென்னையுடன் இணைவதை நாங்கள் நாஞ்சில் மக்கள் வன்மையாக எதிர்க்கிறோம்.

இரணியல்
23—6—53

இரணியல் சரோஜா



அம்மாவும் நானும் விரும்புவது....

உலகத்திலேயே குழந்தைகளுக்கேற்ற ஆகாரங்களைத் தயாரிப்பதில் கைதேர்ந்தவர்களான நெஸில்ஸால் தயாரிக்கப்பட்ட லாக்டோஜனே யாகும். என் தாயார் அதை விரும்புவதற்குக் காரணம் அதில் விடமின்களும், இரும்புச் சத்துக்களும் சேர்ந்திருப்பதேயாகும். விடமின் 'A' சரீரத்தை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கும், விடமின் 'D' நல்ல பற்கள் வளருவதற்கும், இரும்புச் சத்துக்கள் இரத்த புஷ்டிக்கும், ஏற்றது.

நான் லாக்டோஜனை விரும்புவதற்குக் காரணம், அது ருசியுள்ளதாயிருப்பதுடன், எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மேலும் இதை சீக்கிரமாக தயாரிக்க முடிவதால், பசித்தவுடன் சாப்பிட முடிகிறது. என் சிநேகிதர்கள் எல்லோரும் லாக்டோஜனை விரும்புகிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் நான் அவர்களுடைய தாயார்களும், அவர்கள் சொன்னதை சரி என்கிறார்கள்.

NESTLÉ'S **LACTOGEN**

குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்.



எங்களுடைய இலவச லாக்டோஜன் புஸ்தகத்தை படியுங்கள். இந்த கூபனில் உங்களுடைய பெயரையும், முழு விலாசத்தையும் எழுதி

நெஸில்ஸ் பிராடக்ட்ஸ் (இந்தியா) லிட்.,

தபால் பெட்டி 180, மதுரை,

என்ற விலாசத்திற்கு இன்றே போஸ்ட் பண்ணுங்கள்.

பெயர் ....


விலாசம் ....

....

3. பழைய பரமானந்தம்

ராமலாலின் கண்களில் தாண்டவமாடிய கோரத்தைக் கண்டதும் பரமானந்தர் ராமலாலுக்கு ஏதோ ஒருவித பிரமை உண்டாகி விட்டது என்பதை உணர்ந்தார். வேதனை குடிகொண்டுள்ள மனோரமாவின் முகத்தையும் சூதுவாது தெரியாத வாலிபனின் முகத்திலே முளைத்திருந்த வியப்புக் குறியையும் கண்ணுற்ற பரமானந்தருக்கு, ராமலால் அப்படிக் கோபப்படுவது தவறு என்றே பட்டது. எனவே, அவர் முன்பின் அறிமுகமில்லாத அந்த வாலிபனைப் பார்த்து, "நீ எதற்காக மனோரமாவுக்கு ரூபாய் கொடுக்க வேண்டும்? அவளிடம் பணம் கடன் — கிடன் வாங்கியிருந்தாயா, என்ன?" என்று கேட்டார்.

"இல்லை, இல்லை! மனோரமா அக்கா கைக் குட்டைக்குப் பூ வேலைப்பாடுகள் செய்து கொடுத்திருந்தாள். அதற்காகக் கொடுக்க வேண்டிய பணம்!" என்றான் அந்த வாலிபன்.



ராமலாலின் தலை தன்னையறியாமலே தரையை நோக்கலாயிற்று. குமுறிக் கொண்டிருந்த கோபம் கண் காணாமல் மறைந்து விட்டது. அந்தக் கோபத்துக்குப் பதிலாக ஆழ்ந்த மனவேதனை அவரை ஆட்கொண்டது. ஒரு பணக்காரரின் பெண் இரண்டு காசு கிடைக்கிறது என்பதற்காகப் பூ வேலைப் பாடுகள் செய்து கொடுப்பதா?

சுதாகர் ஆச்சரியத்தினால் அப்

☆ மனோரமா ☆

ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு:
ரா. வி.

படியே அயர்ந்து போய்விட்டான். அட! இப்பொழுதே முதற்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றும் கவலை இவனுக்கு ஏற்பட்டு விட்டதே! இந்த வயதிலேயே இந்த அறிவா? மிக மிக ஆச்சரியமாயிருக்கிறதே!

ராமலாலின் கவலைக்கான காரணத்தைக் கண்டு கொண்டார் பரமானந்தர். அடுத்த கணம் தமக்கு இயல்பான சிரிப்பைக் கடகடவென்று மடைவாய் திறந்து விட்டது போலக் கொட்டினார். "பேஷ், பேஷ்! மனோரமா ஜர்மனி தேசத்து இளவரசியையும் கூட மேவி விட்டாளே! ரொம்ப ரொம்பப் பிடிவாதக்காரிதான் போலிருக்கிறது! ஜர்மானிய இளவரசியும் அப்படித்தான். லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்து இருந்தும் வேலை செய்யாமல் வெறுமனே உட்கார்ந்திருக்க மாட்டான். பர்லினில் உள்ள ஒரு கடையில், அந்த ஜர்மானிய இளவரசியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவள் ஏதோ பொருளை விற்கக் கொண்டு வந்திருந்தான். கடைக்காரனுடன் அது சம்பந்தமாக ஏதோ பேரம் பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் எனக்கு அவளுடைய அறிமுகம் கிடைத்தது. இப்பொழுது கூட எனக்கு அவளிடமிருந்து அடிக்கடி கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றனவாக்கும்!" என்றார்.

"நல்ல வேளை! அவளை இங்கே அழைத்து வராமல் இருந்தாயே!" என்று சொல்லி ராமலால் குறும்பாகச் சிரித்தார்.

"அவள் இந்தியாவுக்கு வர ரொம்ப ரொம்ப ஆசைப்பட்டாள். ஆனால் நான்தான் தனிக் கட்டையாயிற்றே! இம்மாதிரி பந்தனங்கள் எனக்கு உதவாது என்பதுதான் உனக்குத் தெரியுமே! அதனால்தான் தட்டிக் கழித்து விட்டு வந்தேன் ...... மனோரமா! பணத்தை வாங்கிக் கொள்ளேன். இந்தப் பையனுக்கு நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது, பார்!" என்றார் பரமானந்தர்.

"இருட்டி விட்டது. நான் வரட்டுமா?" என்று கூறி விடை பெற்றுக் கொண்டான் சுதாகர். அவன் விடை பெற்றுக் கொண்டானே ஒழிய, அவன் மனம் அங்கிருந்து விடை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் அவனுடைய இருதயக் கோயிலில் மனோரமா குடிபுகுந்து விட்டாள்.

"எவ்வளவு நல்ல பெண்! எவ்வளவு கெட்டிக்காரி! எவ்வளவு நல்ல நோக்கம் படைத்தவள்! ஏழையாகி விட்ட தன் தந்தைக்குத் தானே உழைத்தல்லவா உதவி புரிகிறாள்! அதுவும் எப்படி? வலது கையினால் கொடுக்கும் தானம் இடது கைக்குத் தெரியாது என்பார்களே, அப்படி! தான் செய்யும் செயலை அவள் பிறருக்குச் சொல்ல விரும்பவில்லை. இவ்வளவு உத்தம குணம் படைத்த பெண்ணை எங்கும் பார்க்க முடியாது. இவளை இந்த ஏழைமை வாழ்விலிருந்து நம்மால் விடுவிக்க முடியாதா?"

இவ்வாறு யோசித்த வண்ணம் சுதாகர் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அந்த வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான். மனோரமா ஒவ்வொரு அடியாக முன் எடுத்து வைத்து அவன் உள்ளத்திலே குடி புகுந்து கொண்டிருந்தாள்.

லக்ஷக்கணக்கான ரூபாய்களை அவளுடைய காலடிகளில் கொண்டு வந்து கொட்ட வேண்டும் போலத் தோன்றியது சுதாகருக்கு. அப்படிச் செய்ய முடியும் என்ற உணர்ச்சி அவன் எண்ணத்துக்கு ஒத்துப் பாடியது. உற்சாகம் வேறு அதற்கு ஏற்றாற் போலத் தாளம் போட்டது. மகிழ்ச்சியில் மிதந்து சென்ற அவனுடைய கால்கள் சிறிதும் தரையில் பாவவேயில்லை.

"அப்பப்பா! நினைத்தாலே என்னவோ செய்கிறதே! மனோரமா தையல் வேலை செய்து வாழ்க்கை நடத்துவதா? என்ன கேவலம்? இந்தக் கஷ்டத்திலிருந்து அவளை எப்படியாவது விடுவிக்க வேண்டும். நான் எப்படியாவது அவளை இந்த ஏழைமை நிலையிலிருந்து கட்டாயம் விடுவித்தே தீருவேன்!"

இதுபோன்ற பற்பல விதமான எண்ண அலைகள் இருதயத்திலே எழுந்து மோதச் சுதாகர் தன் வீட்டை அடைந்தான்.

ராமலாலைக் கவலை பிடித்துக் கொண்டது. பரமானந்தர் தமது பிரயாண பிரதாபத்தைப் பற்றியும், உலகப் போக்கைப் பற்றியும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தார்; பேச்சுக்கிடையிலே பற்பல ஹாஸ்யத் திவலைகளையும் அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தார். அதன் சுவாரஸ்யத்திலே மூழ்கி ராமலால் இடையிடையே சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பிலே உயிர் இல்லை; உணர்ச்சியில்லை. சவக்களை தான் தோன்றியது. முகத்திலே தாண்டவமாடிக் கொண்டிருந்த கவலை குறையவும் இல்லை; மறையவும் இல்லை.

இருட்டி வெகு நேரம் ஆகிவிட்டது. எல்லோரும் உண்டு உறங்கப் போய் விட்

டார்கள். ஆனால் ராமலாலின் கண்களில் தூக்கம் துளியாவது வந்தால்தானே?

மனோரமா தையல் வேலை செய்து நாலு காசு சம்பாதித்தால்தான் குடித்தனம் நடக்கும் என்ற நிலைக்கு நம் நிலை அவ்வளவு மோசமாகி விட்டதா? அவன் பிறந்த பொழுது மனத்தில் என்ன என்ன ஆசைக் கோட்டைகளும் கற்பனைக் கோட்டைகளும் நாம் கட்டிக் கொண்டிருந்தோம்? அவளே அல்லவா இன்று நம் குடும்பத்துக்கு உழைத்து ஓடாகும்படி ஆகிவிட்டது!

ராமலாலின் மனத்தில் இல்லாத எண்ணங்களெல்லாம் எழுந்தன. இருள் கலந்த இரவும், தனிமையும் யோசனைகளைத் தூண்டி விடுபவை; உள்ளத்து உணர்ச்சிகளைக் கிளர்ச்சி கொள்ளச் செய்பவை. 'குருட்டுக் குருட்டு' என்று ஏதாவது எண்ணத்தில் மனிதனை ஆழ்த்தி விடுபவை. பகல் வேளைகளில் நடக்கக் கூடாத காரியங்கள் இரவு நேரங்களில் நடந்து விடுகின்றன. கொலை, கொள்ளை, களவு போன்ற தீச் செயல்கள் இரவின் இருளின் உதவியைக் கொண்டு தானே துணிகரமாக நடைபெறுகின்றன! இரவு வேளைகளில்தானே துயரப்படும் மனிதனின் துயரங்கள் அதிகமாகி அவனை வாட்டத் தொடங்குகின்றன! நோய் நொடிக்குக்கூட இரவு வேளைகளில்தான் பலம் அதிகரிக்கிறது. ராமலால் தனியாக இருந்தார். இரவின் கரிய இருள் வேறு அவருக்குத் துணையாக இருந்தது. அவரால் எவ்வளவு முயன்றும் தம் நினைவை மறக்க முடியவில்லை; நிலையை மறக்க முடியவில்லை. மனம் பொறுக்காமற் போகவே, எழுந்து வராந்தாவுக்கு வந்து உலாவலானார்.

பரபரப்புடன் இங்கும் அங்கும் நடை போட்டுக் கொண்டிருந்த ராமலாலின் உள்ளத்திலே பற்பல போராட்டங்கள் எழுந்தன. அநேக முடிவுகள் செய்தார்; அம் முடிவுகளை அழித்தார், குழந்தைகள் இளிக் கூண்டு கட்டி விளையாடுவது போல! 'எங்கேயாவது தமக்கென்று ஒரு வேலை தேடிக் கொண்டால் என்ன?' என்ற எண்ணம் எழுந்தது. தினம் பொழுது விடிந்தால், பொழுது போனால் எவருக்கு எண்ணற்றவர்கள் விழுந்து வணக்கம் தெரிவித்தார்களோ, கலெக்டர் கமிஷனர் முதலியவர்கள் எவருடன் சரி சமத்துவமாக உட்கார்ந்து உரையாடுவதில் பெருமை கொண்டார்களோ, அவரே பிறர் வீட்டுப் படியேறித் தலை வணங்கி வேலை கேட்பது என்று ஏற்பட்டு விட்டால் விதியின் கொடுமையை என்னவென்று சொல்வது? பிறரிடம் கைகட்டிச் சேவகம் செய்வதைக் காட்டிலும் பிச்சை வாங்கிப் பிழைப்பது எவ்வளவோ மேலான காரியம் என்று தோன்றிற்று. ஆனால் பிச்சை வாங்கிப் பிழைத்து விடுவது என்பதும் இந்த உலகத்தில் இலகுவாக முடியக்கூடிய காரியமா? எத்தனையோ பேர் இந்த உலகத்தை வெறுத்துக் குடும்பத்தை விட்டுக் காட்டுக்குப் போய்விடுகிறார்களே! அப்படி நாமும் போய்விட்டால் என்ன? அப்படிப் போவது தவறாகுமா?

தம் சிறிய குடும்பத்தைத் தவிக்க விட்டு விட்டு அவர் ஓடி விடுவதா, பயங்கொள்ளியைப் போல்? கூடாது, கூடாது! உயிருள்ள வரை கஷ்டத்துக்குப் பயந்து குடும்பத்தை விட்டு ஓடக்கூடாது. அது அழகல்ல. அம்மாதிரி எங்கேயாவது நடந்ததுண்டா? வீட்டை விட்டு ஓடுவதைக் காட்டிலும் உயிரை விட்டு விடுவது எவ்வளவோ மேல் என்று தோன்றிற்று ராமலாலுக்கு.

மரணத்தின் பயங்கரச் சிந்தனை எழுந்தது தான் தாமதம், அவருடைய கண்கள் 'கப கப' வென்று எரியத் தொடங்கின. நரம்புகளில் ரத்தம் வேகமாகப் பாயத் தொடங்கியது. உணர்ச்சிகள் உடலையும் உயிரையும் உந்தித் தள்ளின. உடலில் ஒருவிதமான புதுப் பலம் உண்டாவது போலத் தோன்றியது. அவர் தற்கொலை புரிந்து கொள்வதா? சிந்தனை அவருடைய மூளையைத் தறி கெட்டுச் சிதற அடித்து விட்டது.

"வராந்தாவில் இந்த நடுநிசி வேளையில் யார் சுற்றிக் கொண்டிருக்கிறது?"

பக்கத்து வீட்டிலிருந்து குரலில் அதிகாரம் தொனிக்க யாரோ கேட்டார்கள்.

"யாரும் இல்லை. நான்தான்!" என்று சொன்ன ராமலாலுக்குக் கேள்வி கேட்டது யாரென்று விளங்கி விட்டது! "ஓகோ! சுதாகரா? படித்துக் கொண்டிருக்கிறாயா, என்ன?" என்று கேட்டார் ராமலால்.


ராமலாலின் உள்ளத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த பயங்கரப் பேய் எண்ணங்கள் மறைந்தன. ஏனெனில் தனிமை கலைந்து விட்டதல்லவா? ராமலாலின் சஞ்சலமுற்ற சித்தமும் சிறிது சாந்தமுற்றது. சுதாகர் படிப்பதற்காக முன்னிரவு தூங்கிப் பின்னிரவு விழித்திருந்தான். ராமலாலின் வீட்டில் ஆள் நடமாடுவதைக் கண்ட அவன் கணீரென்ற குரலில் ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான். அதற்கு அவனுக்குப் பதிலும் கிடைத்து விட்டது.

"ஆமாம், பரீட்சை நெருங்கி விட்டதல்லவா? அதனால் இரவு நேரங்களிலும் கொஞ்சம் படிக்க வேண்டியிருக்கிறது!" என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குள் சென்று விட்டான் சுதாகர்.

ராமலாலுக்கு அப்புறந்தான் பச்சாத்தாப உணர்ச்சி ஏற்பட்டது. சீச்சீ! என்ன பயங்கரக் கெட்ட எண்ணங்கள்! இந்த எண்ணங்களெல்லாம் மன பலவீனத்துக்கு அறிகுறி. ஆபத்துக்கு அஞ்சாதவன் அல்லவா ஆண்மை வாய்ந்தவன்! ராமலாலும் ஒரு ஆண்பிள்ளைதானே? கஷ்டங்களைக் கண்டு அவர் ஏன் கலங்க வேண்டும்?

மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு ராமலால் தம் அறைக்குள் நுழைந்தார். உள்ளே சென்றதும் சுபத்திரா நின்று கொண்டிருப்





கேசவர்த்தினி அணா 14. ஷாம்பூ அணா 14. தபால் செலவு வேறு: எங்கும் கிடைக்கும்
தென் இந்திய ரஸாயனசாலை, கோயமுத்தூர்

பதைக் கண்டார். அவர் மனம் துணுக்குற்றது. என்ன? இதுவரை அவர் தனிமையில் இல்லையா? சுபத்திராவும் விழித்து கொண்டு அவருடைய சஞ்சல சித்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாளா?

"இன்று இரவு முழுவதும் தூங்காமலே கண் விழித்து விடுவது என்று விரதமா, என்ன?" என்று கேட்டாள் சுபத்திரா.

"ஏன்? எதற்காகக் கேட்கிறாய் இப்படி?" என்று கேட்டார் ராமலால்.

"எதற்காகக் கேட்பேன்? இதுவரை நீங்கள் தூங்கவில்லையே! இது இராக் கண் விழிக்கும் வயதும் இல்லையே! ஒன்றுக்கு ஒன்று உடம்புக்கு வந்து விட்டால்......?"


தமது வருத்தமும், வேதனையும், ஆற்றாமையும் சுபத்திராவுக்குத் தெரியாமல் இல்லை என்பதை ராமலால் புரிந்துகொண்டு விட்டார். அந்த வீட்டில் அவர் மட்டும் தனிமையாக அந்த வாழ்வு வாழவில்லை. அவருக்குத் துணையாக அவருடைய மனைவியும் இருந்தாள். அவளும் அவரைப் போலவே கண் மூடவில்லை. அவளையும் அவரைப்போலவே, வேதனையும் வருத்தமும் வாட்டிக் கொண்டிருந்தன. இதைப் புரிந்து கொள்ளவும் அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

'பாரதப் பெண் மணிகள் கணவனின் காலடிகளைப் பின்பற்றுபவர்கள். கணவன் படும் கஷ்டத்தைத் தன் கஷ்டமாகப் பாவிப்பவர்கள். எவ்விஷயத்திலும் கணவனை நிழலெனப் பின்பற்றுபவர்கள்' என்பது எவ்வளவு உண்மை! கணவனின் நலனையே தன் நலனாகக் கருதுவதில் இந்திய மண்ணில் பிறந்த பெண்களுக்கு ஈடு இந்தியப் பெண்கள் தான். தான் படும் துயரங்கள் பிறருக்குத் தெரியக் கூடாது. தன் கணவனுக்கே கூடத் தெரியக்கூடாது. தெரிந்தால் அவனுடைய மனக் கிலேசம் அதிகரிக்கும் என்று மூடி மறைத்துப் பதி செல்லும் பாதையிலேயே செல்லும் பாரதப் பெண் மணிகளை எவ்வளவு பூஜித்தாலும் தகும்.

"எதற்காக இப்படித் திடீரென்று வருத்தமே உருவாகி விட்டீர்கள்?" என்று கேட்டாள் சுபத்திரா.

"ஒன்றும் இல்லை. மனோரமாவுக்குக் கல்யாண வயது வந்து விட்டதல்லவா? கல்யாணம் எப்பொழுது செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். வேறு ஒன்றும் இல்லை!" என்றார் ராமலால் ஒருவாறு சமாளித்துக் கொண்டு.

"இது ஒன்றும் புதிய விஷயம் இல்லையே! இது காலாகாலத்தில் செய்யவேண்டியது தானே? இதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது? இது உங்கள் 'பரபரப்புக்குக் காரணமாக இருக்க முடியாது. உங்கள் உடலும் உள்ளமும் பரந்து கொண்டிருக்கின்றனவே!" என்றாள் சுபத்திரா மறுபடியும். கண நேரம் அங்கே மௌனம் நிலவியது.



டிரைவர் (முதலாளியின் மகனிடம்):— ஏன் ஸார், கார் இவ்வளவு மோசமாக மோதி நசுங்கி இருக்கிறதே!

முதலாளியின் மகன்:—டிராம் கம்பத்தில் கார் மோதி விட்டது!

டிரைவர்:—எத்தனை தடவை ஸார், கார் அப்படி மோதியது?

சுபத்திராவே மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தாள். "இதோ பாருங்கள்! உங்கள் உள்ளத்து வேதனை எனக்குத் தெரியும். நான் மனோரமா சம்பாதிக்கும் பணத்தில் ஒரு தம்பிடி என்றால் ஒரு தம்பிடிகூட நம் வீட்டுக்குள் வர விடவில்லை. பெண்ணின் பணத்தை எடுத்துக் கொள்வது மகா பாவம் என்பது எனக்குத் தெரியாதா? என்னை அவ்வளவு அறியாத ஜடம் என்று எண்ணுகிறீர்கள். இதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், இப்பொழுதே விட்டொழியுங்கள். அவளுக்குத் தையல் வேலையில் ரொம்ப ஆர்வம் இருக்கிறது. என்ன தடுத்தாலும் கேட்கமாட்டேன் என்கிறாள். மனோரமா இன்றுவரை சம்பாதித்த ஆயிரத்து இருநூறு ரூபாய்களையும் தனியாகத்தான் வைத்திருக்கிறேன். வீட்டுச் செலவுக்கு அதிலிருந்து நான் தம்பிடிகூட எடுத்துக் கொள்ளவில்லை. நீங்கள் வீண் கவலையை விட்டு ஒழியுங்கள்!" என்றாள்.

ராமலாலின் மனத்துக்குக் கொஞ்சம் அமைதி ஏற்பட்டது. அவர் மன ஆறுதல் பெற்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

பொழுது புலர்ந்தது. மனோரமா எழுந்து பிரார்த்தனை கீதங்கள் பாடினாள். பரமானந்தரும் பரபரப்புடன் எழுந்தார். உலகம் சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்து தன் வேலையில் ஈடுபட்டது. ராமலாலும் பரமானந்தரும் தனிமையில் உட்கார்ந்து பேசலானார்கள். ராமலாலுக்கு ஏற்பட்டுள்ள கவலை பரமானந்தத்துக்குத் தெரியாமல் இல்லை. அதனால் பேச்சுப் போக்கில் எத்தனையோ பணக்காரர்கள் ஏழையாகி ஓட்டாண்டியான கதையைச் சொன்னார். "செல்வம் நிலைத்திருக்கும் பொருள் அல்ல. செல்வத்துக்கு அதிஷ்டான தேவதையான லக்ஷ்மி சஞ்சலசுபாவம் படைத்தவள். இன்று இங்கு இருப்பாள். நாளை இன்னொரு இடத்



வாங்க வந்தவர் :— மிளகு ஒரு வீசை கொடுங்கள்.

செட்டியார் :—முதலில், நீர் பழைய பாக்கியைக் கொடும். அப்புறம்......

வாங்க வந்தவர் :—என்ன மறதி? முன்னொரு தடவை நான் உங்களுடைய கடைக்கு வந்திருக்கிறேனா?

தில் இருப்பான். பணம் போய்விட்டதே என்பதற்காக மனம் ஒடிந்து விடாதே!'' என்று கூறி ராமலாலை உற்சாகப்படுத்த நினைத்தார்.

அப்பொழுதும் ராமலாலின் வாட்டமுள்ள முகத்தில் மகிழ்ச்சிக் குறி சிறிதும் தோன்றாமற் போகவே, பரமானந்தர் தமது நிலைமையைக் கூறி விளக்க முற்பட்டார்.

"ராமு! நான் எத்தனை நாட்கள் பசியும் பட்டினியுமாகக் கிடந்திருக்கிறேன், தெரியுமா? பணம் சேர்க்கும் பாவச் செயலை இதுவரை நான் செய்யவில்லை; செய்ய விரும்பியதும் இல்லை. இருந்தாலும் உலகம் முழுவதையும் சுற்றி வந்திருக்கிறேன். உலகத்தைப் பார்த்தேன். உலகத்தில் வாழும் மக்களைப் பார்த்தேன். அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தேன். அவர்கள் அடையும் இன்பத்தைப் பார்த்தேன். படும் துன்பத்தைப் பார்த்தேன். ஆனால் துயரம் வரும்பொழுது மனிதன் ஏன் துணிவை இழந்து விடுகிறான் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நான் ஒருவனுடைய அறையில் போய்ப் படுத்து உறங்குகிறேன். அவன் என்னைத் தட்டி எழுப்பி விரட்டி விடுகிறான் என்று வைத்துக் கொள். எனக்குக் கொஞ்சமும் வருத்தம் ஏற்படாது. ரெயிலில் டிக்கட் இல்லாத பிரயாணம் செய்கிறேன். வழியில் கண்டு பிடித்து இறக்கி விடுகிறான் என்று வைத்துக் கொள். அப்பொழுதும் நான் வருத்தப்பட மாட்டேன். ரொம்பப் பசிக்கிறது. எவருடைய கடையிலாவது சென்று இரண்டு ரொட்டித் துண்டுகளை எடுத்துத் தின்று விடுவேன். காசு கொடுக்காததற்காகக் கடைக்காரன் என்னை அடித்தால்கூட நான் சிரித்துக் கொண்டுதான் இருப்பேன். இதெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் துன்பத்தில் உள்ள இன்பம் வேறு எதிலும் இல்லை என்பதை உனக்குப் புரிய வைப்பதற்காகத்தான். துயரம் மிக மிக இனிமையானது. தெரியுமா?'' என்றார்.

அதைக் கேட்ட ராமலால் சிரித்துக் கொண்டே, "நாளுக்கு நாள் வயது அதிகரித்துக் கொண்டே போகிறதே ஒழிய, நீ அதே பழைய பரமானந்தமாகத் தான் இருக்கிறாய். குடும்பம்—குடித்தனம் என்று உனக்கும் ஏதாவது இருந்தால் கவலையும் துயரமும் என்ன என்பது தெரிந்திருக்கும். குடும்ப பாரம் எவ்வளவு கஷ்டமானது என்பதைப் புரிந்து கொள்வாய். கட்டவிழ்த்து விட்ட காளை போன்ற உனக்கு என்ன கவலை? அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்!'' என்றார்.

"நீ என்னையும் என் கஷ்டங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் இப்படிப் பேசிவிட்டாய். இந்தக் குடும்ப மோகத்தை யெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஒரு ஆறுமாதம் என்னோடு சுற்று. அப்பொழுதுதான் உனக்கு என் துயரம் எப்படிப்பட்டது என்பது தெரிய வரும்!'' என்றார் பரமானந்தர்.

"எனக்கு ஒன்றும் தெரிய வேண்டாம். எனக்கு என் பாடே பெரிய பாடாயிருக்கிறது. இந்தத் துயரச் சுமையையே என்னால் தாங்க முடியவில்லை. இன்னும் வேறு வேண்டுமா?'' என்றார் ராமலால்.

"நான் இன்றைக்கே திரும்புவதாக இருக்கிறேன். இப்பொழுது இங்கே யாரும் இல்லை. சந்தர்ப்பமும் சரியாயிருக்கிறது. உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும்!'' என்று பீடிகை போட்டார் பரமானந்தர்.

'இவன் என்ன சொல்லப் போகிறான்?' என்று ராமலால் கற்பனையில் ஈடுபட்டார். ஒன்றும் விளங்கவில்லை. எனவே, "என்ன சொல்ல விரும்புகிறாய், சொல்லு?'' என்றார்.

"நான் சொல்லப் போவதைக் கேட்டு ஆச்சரியப் படாதே! அரற்றிக் கொள்ளாதே!'' என்று பரமானந்தர் பீடிகையை இன்னும் பலமாகப் போட்டார்.

"நல்ல மனுஷ்யன் அப்பா, நீ! சொல்வதைச் சட்டென்று சொல்லேன்! எதற்காக வீணில் ஆதுரத்தைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறாய்?'' என்று கடிந்து கொண்டார் ராமலால்.

"சரி, சொல்கிறேன், கேள்! ஆனால் ஜாக்கிரதை! கேட்பதையும் கேட்டுவிட்டு மனம் மாறினால் நான் உன்னை இலேசில் விடமாட்டேன். நான் சொல்வதைக் கேட்பதாக வாக்குக் கொடு, சொல்கிறேன்!'' என்றார் பரமானந்தர்.

"இப்படியே பூர்வ பீடிகை போட்டுக் கொண்டு போகிறாயே தவிர, விஷயத்தைச் சொல்ல மாட்டேன் என்கிறாயே!'' என்று அலுத்துக் கொண்டார் ராமலால்.

"எனக்கு ஏதாவது சிரமம் ஏற்பட்டால், நீ உதவி செய்வாயா, மாட்டாயா?''

"இது ஒரு கேள்வியா? என்னால் முடிந்த மட்டும் கடைசி வரை உன் சிரமத்தைப் போக்க முயல்வேன்."

"அப்படிச் சொல்லு. நீதான் என் உண்மை நண்பன். உன்மேல் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இப்பொழுது ஏற்பட்டு விட்டது. நான் உனக்குக் கொஞ்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமே, நினைவு இருக்கிறதா?" என்று கேட்டார் பரமானந்தர்.

ராமலால் சிறிது நேரம் யோசித்தார். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் தாம் கொடுத்த பத்தாயிரம் ரூபாய் நினைவு வந்தது. ஆனால் அதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே, "அது இருக்கட்டும். உனக்கு இப்பொழுது ஏதாவது உதவி தேவையா? சொல்லு!" என்றார்.

"ஆமாம், எனக்கு இப்பொழுது ஒரு உண்மையான உதவியாளன் தேவை. நீ முன்னால் பதினாயிரம் ரூபாய் கொடுத்து எனக்கு உதவி செய்திருக்கிறாய். இப்பொழுது..." என்று ஆரம்பித்தார் பரமானந்தர்.

"பழைய விஷயத்தைக் கிளறி எதற்கு மூளையைக் கெடுத்துக் கொள்கிறாய்?"—ராமலால் அவ்விஷயத்தைப் பற்றிப் பேச்செடுக்கவே விரும்பவில்லை என்பதைக் காட்டிக் கொண்டு, "அந்தப் பேச்சை விட்டு விட்டு வேறு ஏதாவது பேசு!" என்றார்.

ராமலாலின் பேச்சைக் கேட்ட பரமானந்தருக்குப் பெருத்த வியப்பு ஏற்பட்டது. மனிதன் இவ்வளவு ஏழையாகி விட்ட பொழுதிலும் தன் பெருந் தன்மையை விடாமல் பாதுகாக்கிறானே என்பதை நினைத்த பொழுது அவருக்கு ராமலால் மீது இரக்கம் பிறந்தது. 'இம்மாதிரி பெருந் தன்மையுள்ளவனைத்தான் ஏழைமையும் துயரமும் வாட்டுகின்றன!' என்று மனத்துள் எண்ணி ஒரு நெடு மூச்சு விட்டார். பிறகு, "அந்தப் பேச்சை எதற்காக நான் விட வேண்டும்? அதெல்லாம் முடியாது!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்.

"என்னால் முடிந்ததைச் செய்கிறேன். எங்கேயாவது நீ மறுபடியும் வெளியே சுற்றப் போகப் போகிறாயா, என்ன?" என்று கேட்டார் ராமலால்.

பரமானந்தர் 'கட கட' வென்று சிரித்தார். பிறகு, "நல்ல ஆள் அப்பா, நீ! சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் நீ பாட்டுக்குப் பேசிக் கொண்டே போகிறாயே! நான் உன்னிடம் பதினாயிரம் ரூபாய் வாங்கிப் போனேனே, அது செலவாக வில்லை. அந்தப் பணத்தை நான் உன்னிடமே கொடுத்து வைக்க விரும்புகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட ராமலால் கொதித்தெழுந்தார். "நான் அதைத் திருப்பி வாங்கிக் கொள்ளும் உத்தேசத்துடன் உன்னிடம் கொடுக்கவே யில்லை. தெரியுமா?" என்று படபடவென்று கூறிக்கொண்டே போனார்.

"நான் எங்கே அப்படிச் சொன்னேன்?" என்றார் சாந்தமாகப் பரமானந்தர்.

"நீ எனக்கு உபகாரம் செய்ய வந்திருக்கிறாயா, என்ன?" ராமலால் புண்பட்ட உள்ளத்துடன் உஷ்ணம் ஏறிய குரலில் கேட்டார். பிறகு, "உன் சாமர்த்தியம் எனக்குத் தெரியும். நான் ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தையில்லை. ஏழையான என் மீது நீ இரக்கம் காட்ட வந்திருக்கிறாய். அப்படித்தானே?" என்று சீறினார்.

"சிவ, சிவா! நான் இரக்கம் காட்டுவதா? நீ அல்லவா காட்ட வேண்டும்! என் பணத்தை பத்திரப் படுத்தி வைத்திருக்க உதவ மாட்டாயா? எனக்கோ வீடு வாசல் இடையாது. உற்றார் உறவினர் இடையாது. உன்னைத் தவிர நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர்கள் வேறு யாரும் இடையாது. அதனால்தான் இந்தப் பதினாயிரம் ரூபாயை உன்னிடம் கொடுத்து வைக்கலாம் என்று வந்தேன். என்னடா என்றால் நீ வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறாய். என் மீது எரிந்து விழுகிறாய்" என்றார் பரமானந்தர்.

திடீரென்று யாரோ சுபத்திராவுக்குக் குரல் கொடுத்தார்கள். அடுத்த கணமே ஒரு ஆசாமி படியேறி வந்தான். அவனைப் பார்த்த ராமலால், "என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"மாதவபாபுவின் மனைவி மூர்ச்சையாகி விட்டார்கள். எல்லோரும் மனோரமாவின் அம்மாவைக் கூப்பிடுகிறார்கள்!" என்றான் அந்த ஆசாமி.

"என்ன? மாதவனின் மனைவியா?"—ராமலால் ஆதுரம் தொனிக்கும் குரலில் கேட்டார்.

"ஆமாம். அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கையில்லை!" என்ற சோகமான பதில் அந்த ஆசாமியிடமிருந்து வந்தது. (தொடரும்)



கோண்டுவின் தியாகம்

அசூயம்



கோதண்டம் என்பது எவ்வளவு அழகான பெயர்! நல்ல பெயரைச் சிதைத்துத் துண்டாடும் கெட்ட பழக்கம் இந்த உலகத்தில் எப்படித்தான் ஏற்பட்டதோ, தெரியவில்லை. கோதண்டம் கோண்டுவாகவும், சுப்பிரமணியம் சுண்டுவாகவும், சிவசுப்பிரமணியம் சிசுவாகவும், மந்தகாசன் மண்டுவாகவும் திரிந்து எப்படி யெல்லாம் உருத்தெரியாமல் உருமாறி விடுகிறார்கள்.

அந்தக் குரங்குக்கும் கோதண்டம் என்றுதான் பெயர் வைத்திருந்தார்கள். ஆனால் அதன் பெயரும் திரிந்து கோண்டுவாக உருமாறி விட்டது. 'கோதண்டம்' என்று கூப்பிட்டால் யாரையோ கூப்பிடுகிறார்களாக்கும் என்று எண்ணி அது திரும்பிப் பார்க்காது. ஆனால் 'கோண்டு' என்று கூப்பிட்டு விட்டால் போதும், ஆவல் ததும்பும் விழிகளுடன் திரும்பிப் பார்க்கும்.

கோண்டுவைப் போலச் சாந்தமும் கம்பீரமும் உருவான குரங்கை நான் இதுவரை கண்டதில்லை. அது இந்தியாவில் பிறந்த குரங்கு இல்லை; சுமத்ராவில் பிறந்து வளர்ந்தது. அதன் சாந்தத்துக்கும் கம்பீரத்துக்கும் ஒருவேளை பிறப்பிடம் காரணமாயிருக்கலாம். கோண்டு சுபாவத்தில் மட்டும் மற்ற குரங்குகளுக்கு வித்தியாசப்பட்டிருந்தது என்பதில்லை; உடல் அமைப்பிலும் ஒருவித வித்தியாசப் பட்டிருந்தது. அவ்வளவு பெரிய குரங்கை யாரும் பார்த்திருக்க முடியாது என்றே எண்ணத் தோன்றுகிறது. அது நேரே நிமிர்ந்து நின்றால் ஐந்தடி உயரத்துக்குக் குறையாது. நான்கு வருஷங்களுக்கு முன்னால் திருவாளர் சந்தோஷம் அதைச் சுமத்ராவிலிருந்து கொண்டு வந்திருந்தார்.

திருவாளர் சந்தோஷம் எங்கள் தெருவிலேயே எல்லாரைக் காட்டிலும் அதிகப் பணப் பசை உள்ளவர். அவருக்குச் சமதையான பணக்காரர் அக்கம் பக்கத்தில் உள்ள ஐந்தாறு கிராமங்களில் கிடையாது என்று கூடச் சொல்லலாம். நான் கிட்டத்தட்டப் பதினைந்து இருபது வருஷங்களாக அவருடைய குடும்பத்து டாக்டராக இருந்து வந்தேன். அவர் குடும்பம் என்ன என்கிறீர்கள்? அவரும் அவருடைய கோண்டுவும்தான் அவருடைய குடும்பம். அவர் கலகலப்பாக யாருடனும் சிரித்துப் பேசி பழம்பவர்; வினயமாகப் பேசுபவர். யாரிடமும் 'டா' போட்டுப் பேசிக் கடுமையாக அவர் நடந்து கொண்டு நான் கண்டதில்லை. ஆனால் ஏனோ தெரியவில்லை. ஜனங்களிடையே அவருக்கு நல்ல பெயர் கிடையாது. ஜனங்கள் அவரைத் திருவாளர் சந்தோஷம் என்று சொல்வது கிடையாது. திருவாளர் 'நஞ்சுண்டன்' என்றுதான் சொல்லுவார்கள். நேருக்கு நேர் அவரைக் கண்டுவிட்டால் 'சந்தோஷம்' என்று சொல்லுவார்களோ என்னவோ, அவர் கண்களுக்கு மறைந்துவிட்டால் நஞ்சுண்டன் என்றுதான் சொல்லுவார்கள். அந்தத் தெருவிலேயே அவருக்கு அந்தப் பெயர்தான் வெகு பிரசித்தம்.

தமது பெயர் ஏட்டில் பாங்கிக் கணக்கில் ஐம்பது லட்சம் ஏறுத வரையில் மணம் செய்து கொள்வதில்லை என்று திருவாளர் சந்தோஷம் தீர்மானித்திருந்தார். மூப்பது வருஷகாலம் பற்பல தொழில்கள் செய்து அவர் தமது அந்தத் தீர்மானத்தைச் செயலாகவும் உருமாற்றி விட்டார். அப்புறம்தான் அவருக்குத் தமது வாலிபம் தம்மிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு விட்டது என்பது தெரிந்தது. திருவாளர் சந்தோஷத்துக்கு அப்பொழுது வயது ஐம்பத்தைந்தை எட்டிப் பிடித்து விட்டது.

அவரைப் போல் தனிமை வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்களிடம் கிளி, பூனை, நாய் முதலியவைகள்தான் பொதுவாக எனக்குத் தெரிந்த வரை காணப்படுகின்றன. ஆனால் திருவாளர் சந்தோஷம் ஒருவர் மட்டுந்தான் குரங்கு வளர்த்தவர். அதைக் காண ஜனங்களுக்கு முதலில் வியப்பு உண்டாயிற்று. ஆனால் நாளாக நாளாக அது பழங் கதையாகி விட்டது. கோண்டு தெருவாரோடு தெருவாராகச் சகஜமாகப் பழகி வரலாயிற்று.

ஒருநாள் மாலை நான் என் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்

தேன். திருவாளர் சந்தோஷத்தினிடமிருந்து கோண்டு என்னிடம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தது. உடனே அதைப் பிரித்துப் படித்தேன். திருவாளர் சந்தோஷம் என்னை உடனே புறப்பட்டு வருமாறு எழுதியிருந்தார். என் வீட்டுக்கும் அவர் வீட்டுக்கும் அவ்வளவு அதிக தூரம் இல்லை. ஐந்து நிமிஷ நடைதான்.

உடனே நான் அவர் வீட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டேன். அவர் வீட்டை நான் அடைந்த பொழுது அவர் தமது அறையில் உட்கார்ந்து என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நான் போனதும், "வாருங்கள், டாக்டர்! வாருங்கள்! உட்காருங்கள்!" என்று கூறி ஒரு நாற்காலியைக் காட்டினார். பிறகு கோண்டுவைப் பார்த்து, "கோண்டு, நீ போய் அந்த நாற்காலியில் உட்காரு!" என்றார். பிறகு என் அருகில் உள்ள நாற்காலியில் தாம் வந்து உட்கார்ந்து கொண்டார்.

அன்று அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தார் என்பதை அவருடைய முகமே தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. அவர் என்னைப் பார்த்து இளநகை புரிந்தவாறு, "உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்லவே, கூப்பிட்டனுப்பினேன். நான் இந்தத் தனிமை வாழ்க்கையிலிருந்து விடை பெற்றுக் கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன். நான் கூடிய சீக்கிரம் திருமணம் புரிந்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன்!" என்றார்.

நான் அவருடைய முகத்தையே பார்த்தேன். ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவர் பிரதிக்ஞை பூர்த்தியடைந்து விட்டது. எனவே, திருமணம் புரிந்து கொள்ளவேண்டிய காலமும் வந்து விட்டது. ஆனால் இந்த வயதிலா கல்யாணம்! தமது வாழ்க்கையின் முக்கால் பகுதியை இப்படித் தனிமையாகக் கழித்து விட்டபின் அவர் திருமணம் செய்து கொள்வது சரிதானா! மனத்தில் எழுந்த இந்தக் கேள்விகளை மனத்துள்ளேயே அடக்கிக் கொண்டு, "ரொம்ப சந்தோஷம். குறைந்த பட்சம் தங்களுடைய இந்தப் பெரும் சொத்தை ஆண்டு அநுபவிக்க ஒருத்தி வருவாள் அல்லவா!" என்றேன்.

திருவாளர் சந்தோஷம் புன்முறுவல் புரிந்தவாறே, "நான் என் வாழ்க்கையின் முழு ஆனந்தத்தையும் அநுபவிப்பேன். தங்களை இது சம்பந்தமாக ஆலோசனை கேட்பதற்காகத் தான் கூப்பிட்டனுப்பினேன். எனக்கு எந்த விதமான வியாதியும் இல்லை என்பது தங்களுக்குத் தெரியும். இருந்தாலும்......" என்று இழுத்தார்.

நான் அவருடைய உள்ளக் கருத்தைப் புரிந்து கொண்டு விட்டேன். உண்மையிலேயே அவருடைய உடலில் எவ்விதமான வியாதியும் இல்லை. ஆயினும் வயது என்று ஒன்றிருக்கிறதல்லவா! வயது ஆக ஆக மனிதனின் கோளங்களும் நாளங்களும் சுரப்பிகளும் உற்பத்தி செய்யும் ஜீவசத்து வறண்டு விடுவது இயல்பாயிற்றே! முதுமை என்றாலே இந்த ஜீவசத்துக்கள் வறண்டு குன்றுகின்றன என்பதுதானே பொருள்! திருவாளர் சந்தோஷமும் இந்த இயற்கை நியதிகளுக்கு விதி விலக்கானவர் அல்லவே!

எனவே, நான் அவரைப் பார்த்து, "தங்கள் உடல் நலம் நன்றாயிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் தாங்கள் குடும்ப வாழ்க்கையைச் சுகமாக நடத்த முடியுமா என்பது சிறிது சந்தேகமே!" என்றேன்.

"நானும் இதைப் பற்றி வெகுவாக யோசித்தேன். இந்தப் பிரச்னை எழக்கூடும் என்பது எனக்குத் தெரியாததல்ல. எனவே, அதற்கான உபாயத்தையும் நான் முன் கூட்டியே தேடி வைத்திருக்கிறேன். எனவே, நான் ஒரு நடை வியன்னுவுக்குப் போய் வருவதாயிருக்கிறேன்!" என்றார் திருவாளர் சந்தோஷம்.

"வியன்னுவுக்கா!"

"ஆமாம், தாங்கள் வாரோனாப் சிகித்சையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா! கிழவர்களின் பழைய சுரப்பிகளை எடுத்து விட்டு அவற்றுக்குப் பதிலாகப் புதிய சுரப்பிகளை வைத்து மனிதனை இளைஞனாக்கி விடுகிறார்களாமே!" என்றார் திருவாளர் சந்தோஷம்.

"ஆமாம், வாரோனாப் சிகித்சையைப் பற்றிக் கொஞ்சம் தெரியும்!" என்றேன் நான்

"திருமணத்தின் பொழுது இந்தச் சிக்கலான பிரச்னை எழக்கூடும் என்ற சந்தேகம் முன்பே என் உள்ளத்தில் எழுந்து விட்டது. அதனால்தான் நான் நான்கு வருஷங்களாக இந்தக் கோண்டுவை வளர்த்து வருகிறேன். இதற்காக நான் அப்படி ஒன்றும் அதிகமாகச் செலவழிக்கவும் வேண்டி வந்துவிடவில்லை. இப்பொழுது இது என் சிரமத்தை நீக்கிப் பிரச்னையைத் தீர்த்து விடும் அல்லவா!" என்றார் திருவாளர் சந்தோஷம்.

என் விழிகள் வியப்பினால் அகல விரிந்தன. இயற்கையிடம் தமது தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் இருப்பதற்காகவா திருவாளர் சந்தோஷம் இந்த நான்கு வருஷங்களாகக் கோண்டுவை வளர்த்து வருகிறார்! இனி அவர் தமது சுரப்பிகளை எடுத்து விட்டு அவற்றுக்குப் பதிலாகக் கோண்டுவின் சுரப்பிகளை வைப்பார். இப்படியாகத் திரும்பவும் தமது இழந்த வாலிபத்தைமீண்டும் பெற்றுவிடப் போகிறார். இதை எண்ணியபொழுது என்னால் அவர் தூர திருஷ்டியை வியந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

திருவாளர் சந்தோஷம் கோண்டுவைத் தம் அருகில் அழைத்து உட்கார வைத்துக் கொண்டார். பிறகு அதன் தலையைத் தம் கைகளால்



இலேசாகத் தடவியவாறே, "உங்கள் அபிப் பிராயம் என்ன?" என்று என்னிடம் கேட்டார்.

நானோ ஒரு டாக்டர். டாக்டர் என்ற முறையில் விஞ்ஞானத்தின் இந்த அற்புதத் திறனை நான் ஆதரிக்க வேண்டியவன்தானே! நான் கோண்டுவை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தேன். அது என்னை ஏழைமைப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தது. அது என்னைப் பார்த்து ஏதோ சொல்ல வருவது போலவும் எனக்குத் தோன்றியது. நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, "நீங்கள் சொல்வது நியாயந்தான். ஆனால் அப்புறம் கோண்டு உயிருடன் இராதே! உடனே இறக்கா விட்டாலும் சீக்கிரமே இறந்து விடுமே!" என்று எனக்குத் தோன்றிய சந்தேகத்தை எழுப்பினேன்.

"நான் அதற்கும் ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன்!" என்றார் திருவாளர் சந்தோஷம். "எனது உடலில் உள்ள சுரப்பிகளைக் கோண்டுவின் உடலில் பொருத்தச் செய்து விடுவேன். அப்படிச் செய்து விட்டால் அது நீண்ட நாட்கள் உயிர் வாழ வழி இருக்கிறதல்லவா!" என்று வெற்றி கிடைத்து விட்டது போன்ற பெருமிதத்துடன் கேட்டார்.

'ஒரு வேளை ......" என்று ஆரம்பித்தவன் யோசனையில் ஆழ்ந்தேன். 'மனிதனுடைய சுரப்பிகள் குரங்கின் உடலில் பொருத்தப்படுமானால் எப்படிச் செயல்ப் படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும் அல்லவா!' என்ற எண்ணம்தான் என்னை யோசனையில் ஆழ்த்தியது.

நான் திருவாளர் சந்தோஷத்துக்கு நற்பலன் கிட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, "அப்படியே செய்து பாருங்கள்!" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

*

திருவாளர் சந்தோஷம் ஐந்தாறு மாதங்கள் கழித்து வியன்னாவிலிருந்து திரும்பி வந்தார். அவர் திரும்பி வந்து விட்டார் என்ற செய்தி அறிந்ததும் நான் அவரைப் பார்த்து வரப் புறப்பட்டேன். கோண்டு வாசற்படிக்கருகே பழையமாதிரியே சாந்தமாகவும் கம்பீரமாகவும் உட்கார்ந்திருந்தது. எனக்கு அதனிடத்தில் எவ்விதமான மாறுதலும் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் திருவாளர் சந்தோஷத்தின் தேக நிலையில் உண்மையிலேயே வியக்கத்தக்க மாறுதல் ஏற்பட்டிருந்தது. பார்ப்பதற்கு அவர் பத்து வருஷம் இளைஞராகக் காணப்பட்டார். "உங்கள் உடல் நிலை உண்மையிலேயே மாறி விட்டது!" என்று நான் சிரித்துக்கொண்டே அவரிடம் என் மகிழ்ச்சியைத் தெரிவித்தேன்.

ஆனால் திருவாளர் சந்தோஷத்துக்கு வந்த கோபத்தைச் சொல்லி முடியாது. கர்ண கடூரமான குரலில், "ஆமாம், தேறி விட்டது! நீங்கள் என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டீர்கள், டாக்டர்! நீங்கள் முன்பே என்னைத் தடுத்திருந்தால் நான் இம்மாதிரிக் காரியங்களில் இறங்கியிருந்திருக்கவே மாட்டேன். என் வாழ்க்கையும் இப்படி வீணாகி யிருந்திருக்காது. என் கண் முன் நில்லாதீர்கள், போங்கள்!" என்று வாசற்புறத்துக்கு வழி காட்டினார். அதுமட்டும் அல்ல; "இனி என் வீட்டுக் குத்துப் படியில் காலடி எடுத்து வைத்தீர்கள், கல்தா கொடுத்து அனுப்புவேன்!" என்று எச்சரிக்கையும் செய்தார்.

நான் திகைத்துப் போய் விட்டேன். திருவாளர் சந்தோஷம் இப்படியெல்லாம் மாறிவிடுவார்என்று நான் இதுவரை கனவில் கூடக் கற்பனை செய்து பார்த்ததில்லை. அவர் இப்படிக் கோபித்துக் கொண்டு என் மேல் சீறி விழுந்ததற்கும் எனக்குச் சரியான காரணம் விளங்கவில்லை. வாய் திறக்காமல் வந்த வழியே வீட்டுக்குத் திரும்பி வந்தேன். திருவாளர் சந்தோஷத்தினிடம் ஏன் இப்படிப் பட்ட பெரிய மாறுதல் ஏற்பட் டிருக்கிறது! கோண்டுவின் சக்தி நிறைந்த சுரப்பிகளை வைத்ததும் அவர் சுபாவம் இப்படி மாறிவிட்டதா!



* * *

இந்தச் சம்பவம் நடந்த சில தினங்களுக்கப்புறம் ஒரு நாள் நான் என் 'டிஸ்பென்ஸரி'யைத் திறந்த பொழுது அதன் அவல நிலையைக் கண்டு அப்படியே பிரமித்துப் போய் நின்றேன். யாரோ ஜன்னலின் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து வந்திருந்தார்கள். மருந்து பாட்டில்கள் உடைந்து இங்கும் அங்கும் சிதறிக் கிடந்தன. இதன் காரணமாக எனக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆயிரத்துக்குக் குறைவில்லை. எனக்கு வியப்பாயிருந்தது. இப்படி என் டிஸ்பென்ஸரியில் புகுந்து உடைத்துப் போடுவதனால் யாருக்கு என்ன லாபம் ஏற்பட்டிருக்க முடியும்! திடீரென்று திருவாளர் சந்தோஷத்தின் உருவம் என்நினைவில் பளிச்சிட்டது. அன்று அவர் என் மேல் அநாவசியமாகத் தானே எரிந்து விழுந்தார்! அவருக்கு என்னைவும் நீங்கு நினைக்காத

என் மேல் கோபம் வரக் காரணம்! அவர் உடலில் குரங்கின் சுரப்பிகள் பொருத்தப்பட்டுள்ளனவே! ஒரு வேளை அதுதான் காரணமாயிருக்குமோ! இல்லாவிட்டால் அவர் கோபிக்க வேறு என்ன காரணம் இருக்க முடியும்! குரங்கின் சுரப்பிகள் பொருத்தப்பட்டதும் மனுஷ்யருக்குக் குரங்குப் புத்தி வந்திருக்க வேண்டும்!—இப்படி என் சிந்தனைக் கதிர்கள் சிதறின.

அப்புறம் இம்மாதிரிச் சம்பவங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரலாயின. இன்றைக்கு இந்த வீடு என்றால் நாளைக்கு இன்னொரு வீடு. தெருவார்கள் திக்கு முக்காடிக் கஷ்டப்பட்டார்கள். வழி ஒன்றும் புலனாகாமற் போகவே, போலீஸாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. தெருவில் உள்ள வாலிபர்கள் இரவு வேளைகளில் 'ரோந்து' சுற்றத் தொடங்கினார்கள், அந்த விசித்திரத் திருடனைப் பிடித்துவிட வேண்டும் என்பதற்காக. என் சந்தேகம் எல்லாம் திருவாளர் சந்தோஷத்தின் மேல்தான். வரவர அந்தச் சந்தேகம் வலுத்துக் கொண்டே போயிற்று. இதெல்லாம் அவருடைய கொனஷ்டைகளாகத் தான் இருக்க வேண்டும் என்று நம்பினேன். ஆனால் இதை நான் யாரிடமும் வாய் விட்டுச் சொல்லவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, ஜனங்களுக்கு லகுவில் இந்த விஷயத்தில் நம்பிக்கை ஏற்படாது. இரண்டாவது, திருவாளர் சந்தோஷம் என் மேல் மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தாலும் தொடர்ந்து விடக்கூடும் அல்லவா!

* * *


கடைசியில் ஒருநாள் இரவு திருடன் பிடிபட்டு விட்டான். உண்மையிலேயே அது மிகமிக ஆச்சரியமான வியக்கத்தக்க விஷயம்தான். திருடன் யார், தெரியுமா! கோண்டு! சாந்தமும் கம்பீரமும் உருவான—கொனஷ்டை, குற்றம் என்பதையே அறியாத கோண்டு! ஆச்சரியமாயில்லையா! உத்தரவின்றி ஒரு இலையைக் கூடத் தொடாத கோண்டு, இவ்வளவு உபத்திரவங்களும் உத்பாதங்களும் செய்தது என்றால் ஆச்சரியமாயிராதா!

ஒரு நொடியில் எனக்கு விஷயம் விளங்கி விட்டது; மின்னலைப் போல் என் மூளையில் பளிச்சிட்டு விட்டது. திருவாளர் சந்தோஷத்தின் குற்றமே உருவான வித்துக்கள் நிறைந்த சுரப்பிகள், குற்றம் என்பதையே அறியாத கோண்டுவின் உடலில் சென்றதும் தம் வேலையைச் செய்யத் தொடங்கி விட்டன. எனவே, கோண்டு குற்றங் கொனஷ்டைகள் செய்யும் சுபாவம் உள்ளதாக மாறிவிட்டது. கோண்டு ஒரு குரங்கானதனால், சீக்கிரம் பிடிபட்டு விட்டது. திருவாளர் சந்தோஷம் மனிதராகையால் முப்பது வருஷம் சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவி மோசடி செய்து பணம் சேமித்து வந்தார். கோண்டுவுக்கும் திருவாளர் சந்தோஷத்துக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

அன்று திருவாளர் சந்தோஷம் என்னைக் கடிந்து கோபித்துக் கொண்டதற்கும் காரணம் எனக்கு விளங்கி விட்டது. அவர் இந்த முதிர்ந்த வயதிலும் வாழ்க்கையை அநுபவிக்க விரும்பினார். ஆனால் கோண்டுவின் தீச் செயல்கள் என்ன என்பதையே அறியாத சுரப்பிகள் அவருடைய அந்த ஆசையில் மண்ணைத் தூவிவிட்டன. அவர் பாவச் செயல்களில் பகிரங்கமாக இறங்க முடியவில்லை; இஷ்டப்படி இன்பங்கள் அநுபவிக்க முடியவில்லை. எனவே, உள்ளத்தில் ஒன்று சேர்த்து வைத்திருந்த அவ்வளவு ஆசைகள் மீதும் பனி விழுந்து விட்டது. எனவே, திருவாளர் சந்தோஷம் தமது கோபத்தை யெல்லாம் பெண்டாட்டி மீது கோபித்துக்கொண்டு பிள்ளையை அடிக்கும் கதையாக என் மீது காட்டத் தொடங்கி விட்டார்.

இவ்விதம் நாளுக்கு நாள் திருவாளர் சந்தோஷத்தினிடம் மாறுதல் காணத் தொடங்கிற்று. கடைசியில் ஒருநாள் அவர் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணத்தையே அடியோடு விட்டுவிட்டார். இன்ப போகங்களில் ஈடுபடும் எண்ணத்தை விட்டு விட்டு யோகப் பயிற்சிகளில் ஈடுபட்டார். அதிலேயே அதிக இன்பம் துய்ப்பதாக அவருக்குத் தோன்றத் தொடங்கிற்று. கொஞ்சங் கொஞ்சமாக இந்த உலகத்தின் மோக—மாயையிலே அவருக்கு விரக்தியும் வெறுப்பும் ஏற்படத் தொடங்கின. மனமும் பரிபக்குவ நிலையை

நல்ல யோசனை !



3 வாசனைக் கலாரத்னங்கள்

கம் கம் ஜவாஜ் * கம்பால் * கமகர்

அகர்பத்திகள்.

டி.எல். சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

சௌகரியமே குழந்தைக்கு திருப்தி



......அதனால்தான் விவேகமுள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தையின் தளிர்மேனியை அரிச்சலன்றிப் பாது காக்க கால்கேட் போரேட்டட் பேபி பவுடரை உபயோகிக்கிறார்கள். மிக மெல்லிய மேனிக்கும் இதம் அளிப்ப தற்காக விஞ்ஞான முறையில் தயாரிக் கப்பெற்றது ... புண்படுத்தும் உஷ் ணம் தாக்காமல் தடுக்கிறது; குழந்தை நாள் முழுதும் ஜிலுஜிலுவென்று சௌகரியமாய் இருக்க உதவுகிறது. இதன் மெல்லிய நறுமணம் உங்களை யும் குழந்தையையும் கவர்ந்துவிடும்.

கால்கேட்

போரேட்டட்

பேபி பவுடர்



எல்லாவித பல்வலிகளுக்கும்

பல் வெண்மை தரும்.....

ஈறுகளுக்கு வலு தரும்

உபயோகியுங்கள்

குரங்கு மார்க்

கருப்பு பல்பொடி

(REGO)

மணம் தரும்.

எங்கும் கிடைக்கும்

3 விதமான சைசுகள்

NOGI & CO.,
87, CHINA BAZAAR Rd., MADRAS-1



ஸ்ரீ ராதா ஜெனரல் ஸ்டோர்ஸ், 47, வடக்கு சித்திரை வீதி, மதுரை

அடைத்தது. நானாவட்டத்தில் சமூகம் அவருடைய பெருந் தன்மையைக் கொண்டாடத் தலைப்பட்டது. ஆனால், பாவம்! கோண்டுவின் நிலைமை நினைத்தால்தான் என் மனம் படும் வேதனையைச் சொல்ல முடியவில்லை. போலீஸ் அதை இரும்புக் கூண்டில் போட்டு அடைத்து விட்டது. ஏனெனில் அதற்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

பகுத்தறிவில்லாத கோண்டுவின் தன்னலத் தியாகத்தை என்னவென்று சொல்வது! அதன் தியாகத்துக்கு யார் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் என்று நிலங்கள் கொடுக்கப் போகிறார்கள்! இல்லை, அப்படியே அதற்குத் தியாகத்தின் விலையாக யாராவது ஐந்து ஏக்கர் பத்து ஏக்கர் என்று கொடுக்க முன் வந்தால்கூட அது வாங்கிக் கொள்ளத்தான் போகிறதா! விலை மதிப்பற்ற தியாகத்துக்கு விலை வாங்கிக் கொள்ளாத கோண்டுவைப் பார்த்து, 'பாவம், கோண்டு!' என்று பச்சாத்தாபப் படுவதைத் தவிர மானிடர்களாகிய நாம் வேறு என்ன செய்ய முடியும்!

படித்துப் பாருங்கள்!

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு

நான வணிகரது பொருளீட்டும் திறமையும், ஈட்டிய பொருளை இறைவன் ஆலயத் திருப்பணிக்கும் மற்றும் அறநிலையங்களுக்கும் அள்ளி வழங்கியுள்ள வள்ளன்மையும் யாவரும் அறிந்தவையே. அத்தகைய வள்ளற் பெருமக்களின் வாழ்க்கை வரலாறு, ஆலயச் செப்பேடுகளையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலில் விரிவாக எழுதப் பட்டிருக்கிறது. பண்டித மணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் திருத்தங்கள் செய்து, விளக்கங்கள் சேர்த்திருக்கிறார் என்றால், நூலின் உயர்வைப் பற்றி வேறு ஒன்றும் கூற வேண்டியதில்லை.

தொகுத்தவர்: வயிரவாகரம், அ. ராமநாதன் செட்டியார்; கிடைக்குமிடம்: கமர்ஷியல் பிரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை—1; வி. ரூ. 4—9—0.

தமிழின் வெற்றி

பழந் தமிழ்ப் புலவர் ஒருவர் முதலிரண்டடியில் அரசனைத் திட்டிவிட்டார். பிறகு அது தவறு என்று தெரிந்தது. ஆகவே, பின் இரண்டடியை வேறுவிதமாக அமைத்தார். அவை என்ன செய்தன தெரியுமா! முதலிரண்டடியிலிருந்த வசவை, வாழ்த்தாக மாற்றிவிட்டன! இப்படி யெல்லாம் 'ரஸவாதம்' புரிந்த புலவர்கள் சிலரின் வரலாற்றை இந்நூலில் காணலாம்!

ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: ரூ. 1—4—0.

சரத்சந்திரர் கதைகள்

இலக்கிய உலகில் இணையில்லாத புகழையும், வாசகர்கள் உள்ளத்தில் நிரந்தர ஸ்தானத்தையும் தேடிப் பிடித்துக் கொண்டவர் அமரர் சரத்சந்திரர். அவர் எழுதிய ஐந்து சிறுகதைகள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. "சித்திரம்", "பால்ய நினைவுகள்", "ஏகாதசி பைராகி" என்னும் கதைகள் அற்புதமாகப் பின்னப்பட்டு அழகாகச் செல்லுகின்றன. மாறுபட்ட இதயங்களில் வீறுகொண்டு வளரும் காதலும், சிறு வயதில் இழைத்த நெஞ்சுணர்ந்த குற்றம் மனித இதயத்தை எப்படி உலுக்குகிறது என்பதும், சமூக சேவை செய்யப் புறப்பட்ட வாலிபர்களில் ஒரு உண்மையான சமூக சேவகன் ஏற்பட்ட அதிசயமும் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழாக்கம்: க. குருசாமி; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை—4 விலை: ரூ. 1-8-0.

வினை

தன் வினை தன்னைச் சுடும் என்பதாக ஒரு பழமொழியுண்டு. அதில் கிடக்கும் உண்மையை விளக்குகிறது இந்த நாடகம். அம்பலவாணர், பதவி மோகம் பிடித்து, இருபத்திரண்டு ஏழைப் பள்ளியாசிரியர்களையும், ஒரு தலைமை ஆசிரியரையும் வேலை இழக்கச் செய்கிறார். அந்தப் பாவம் அவரைப் படுத்துகிறது! நாடகம் படிக்கச் சுவாரஸ்யமாக இருக்கிறது. இந்நூலுக்கு முகவுரை யளித்துள்ள நடிகமணி திரு. டி. கே. ஷண்முகம், "ஒரு சிறந்த நாடகத்திற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இந்த நாடகத்தில் பொருந்தி யிருக்கின்றன" என்று கூறுகிறார்.

ஆசிரியர்: கருணன்; பிரசுரம்: அருணோதய நிலையம், ஆத்தூர், சேலம்; விலை: ரூ. 1—8—0.

தேவார மணி


'ஏழிசையாய் இசைப்பயனாய்' விளங்கும் இறைவனைத் தீந்தமிழ்ப் பாடல்கள் பாடிப் பரவினார் அப்பர் பெருமான். அவர் காலத்தில் அவதரித்த திருஞான சம்பந்தரும் இறைவனை அருந்தமிழ்ப் பாக்களினால் துதித்தார். சுந்தரமூர்த்தி நாயனாரும் "பித்தா, பிறைசூடி, பெருமானே, அருளாளா!" என்று ஆரம்பித்து எத்தனையோ பாடல்களால் இறைவனை இறைஞ்சினார். இம் மூன்று சைவசமய குரவர்கள் இயற்றிய பாடல்கள் தேவாரம் என்று வழங்குகின்றன. தேவாரம் முழுவதையும் படிப்பது எல்லாருக்கும் இயலாத காரியம். எனவே அவற்றில் பல இனிய பாடல்களைத் திரட்டி இந்நூலில் தரப்பட்டிருக்கிறது. தொகுத்தவர்: ராய. சொ.; கிடைக்கும் இடம்: அ. கு. ராம. க. சொ. இராமன் செட்டியார், ராயவரம், திருச்சி; இலவச வெளியீடு.


MADRAS

அழகிய நகரம் எனப் பெயர் பெற்ற நம் சென்னை நகரத்தைப் பற்றி விரிவான விவரங்கள் படங்களுடன் இந்நூலில் தரப்பட்டிருக்கின்றன. கோட்டை, ஹைகோர்ட், ஸெனேட் ஹவுஸ், கபாலீசுவரர் கோயில், கடற்கரை, மியூஸியம், மாமல்லபுரம், காஞ்சிபுரம் முதலிய பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றிய முழு விவரங்களும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. சென்னையைப் பார்க்க வருபவர்களுக்கு மிக உபயோகமான புத்தகம். வெளியிட்டோர்: The Tourist Traffic Branch, Ministry of Transport, New Delhi: விலை: அணா 8.

அனாமதேயக் கடிதம்

ஆர். ராஜகோபாலன்





'அரோஹரா' பாங்கி அன்று விசேஷ மாறுதலை யடைந்திருந்தது. முதல் நாள் வேஷ்டி கட்டிக் கொண்டு, பரட்டைத் தலையுடன் விளங்கிய அத்தனை குமாஸ்தாக்களும் அன்று 'டை' சகிதமாகக் காட்சி தந்தார்கள். பியூன் முனிசாமி கூட என்று மில்லாத புதுவித ஜோருடன் விளங்கினான். இதற்கெல்லாம் காரணம் அன்றுதான் மிஸ் அன்னம் — புதிதாக நியமிக்கப்பட்ட பெண் குமாஸ்தா — உத்தியோகத்தில் அமரப் போகிறாள் என்ற செய்தி தான். ஆல்ஜியர்ஸ் பெருமையுடன் சிம்மன் என்ற மற்றொரு குமாஸ்தாவைப் பார்த்தான். சிம்மன் ஆபீஸ் காரியதரிசி நடேசனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான். இதற்கு முன் பல தடவை பாங்கியின் நிர்வாக அதிகாரி, குமாஸ்தாக்களை 'பான்ட்' சகிதமாக வரச் சொல்லியும் ஒரு நாள் கூட மேல் உத்தரவுக்குப் பணியாதவர்கள் இப்பொழுது இவ்வாறு மாறியதில் நடேசனுக்கு அளவு கடந்த ஆனந்தம். வயதில் பெரியவரான அவர் இந்தக் காலத்து பிள்ளைகளின் விசித்திர மனப்பான்மையைக் கண்டு மனசுக்குள் சிரித்துக் கொண்டார்!

"இது யாரடா, இந்தப் புது குமாஸ்தா?" என்றான் சிம்மன் ஆல்ஜியர்ஸைப் பார்த்து.

"அவள் என்னுடன் ஸெண்ட் மேரீஸில் படித்தாள், என் க்ளாஸ்மேட்" என்று சொல்லிப் பெருமைப் பட்டான் ஆல்ஜியர்ஸ்.

இவ்வாறு ரகசியமாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே யிருந்தார்கள். தெரிந்தவன் தனக்குத் தெரியாததைச் சொன்னான். தெரியாதவன் அதைக் கேட்டு அனுபவித்தான்! எல்லோருடனும் பேச்சில் கலந்து கொள்ளாமல், தனியா ஒதுங்கி யிருந்தான் ராஜம். 'பொய்யை மெய்யாகச் செய்யலாம், மெய்யைப் பொய்யாகச் செய்யலாம். பொய்யையும் மெய்யையும் கலந்தும் பேசலாம். இதில் நமக்கென்ன வேலை' என்று 'கம்'மென லெட்ஜரில் பதித்த தலை வாங்காமல் இருந்தான் ராஜம். தெரியாததைத் தெரிந்தது போலச் சொல்லும் பிரகிருதிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டான் அவன்.

சென்னைக் கடற்கரையைப் போல் நிசப்தமற்று இருந்த அந்த ஆபீஸ், நிர்வாக அதிகாரி வருகிற சப்தத்தைக் கேட்டவுடனே 'கப்'பென்று அடங்கி விட்டது. ஒரு பியூன் அவருடைய பையைத் தூக்கி வந்தான். அவருக்குப் பின்னே அவள் நடந்து வந்தாள். தங்களுடைய இடத்தில் உட்கார்ந்து கொண் டிருந்த அனைவரும் அவளையே கூர்ந்து கவனித்தனர். தங்களுக்குள்ளே ஒரு முறை மற்றவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். நிர்வாக அதிகாரி அந்தப் பெண்ணுடன் தம்முடைய அறைக்குச் சென்றார். அதற்குள்ளே அங்கிருந்தவர்கள் தங்கள் 'காலரை'த் தூக்கி விட்டுக் கொண்டு கைக்குட்டையை எடுத்துத் தங்கள் முகத்தைத் துடைத்துக் கொண்டார்கள்.

உள்ளேயிருந்து வந்த மணிச் சத்தத்தைக் கேட்ட முனுசாமி உள்ளே போனான். அடுத்தபடியாக ராஜம் உள்ளே வரவழைக்கப்பட்டான். அன்றிலிருந்து அவள் உத்தியோகம் பார்க்கப் போவதாகவும், கணக்கு இலாகாவில் அவன் வேலை செய்யப் போவதாகவும், அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து பிடித்தது சனி காரியாலயத்துக்கு!

அன்னம் ராஜத்தினிடம் தான் பேசினாள்; அவனுடனே தான் சிரித்தாள்; அவனுடனே ஆபீஸிற்கு வந்தாள்! அவனுடனே ஆபீஸை விட்டுப் போனாள்! மற்றவர்களை யெல்லாம் ஒதுக்கி விட்டு விட்டு அவனுடனேயே அவள் இவ்வாறு ஏன் இருக்க வேண்டுமென்ற கேள்வி ஆல்ஜியர்ஸ் மனத்தில்தான் முதன் முதலாக உதித்தது. இதைக் காதல் என்று அவன் முடிவுகட்டினான். 'அவளாவது அவனையாவது காதலிப்பதாவது' என்ற பொறாமையும் அவன் மனத்தில் எழுந்தது. அவன்

சிரித்தால், தன்னைப் பரிகசிக்கிறான் என்று ஆல்ஜியர்ஸ் நினைக்குமளவிற்கு அவன் மனத்தில் பொறாமை கொழுந்துவிட்டு எரிந்தது.

ஒருநாள் 'பைல் கிளார்க்' சிம்மன் ஆல்ஜியர்ஸிடம் ஓடி வந்து, ரகசியமாகக் குசு குசுவென்றான். ஆல்ஜியர்ஸ் அவனை வெளியே அழைத்து விஷயத்தைக் கேட்டதில் அன்னத்தையும் ராஜத்தையும் அவன் எங்கோ சினிமாவில் முதல் நாள் பார்த்ததாகச் சொன்னான். உடனே "ஐயோ, நீ வேறு பார்த்துத் தொலைத்தாயா?" என்று சொல்லி விட்டு ஆல்ஜியர்ஸ் மேற்கொண்டு சொன்னான்:

"நீ இன்றுதான் பார்த்தாய். நான் இது வரைக்கும் அதாவது அவன் உத்தியோகத்திற்கு வந்த இந்த ஒரு மாதத்திற்குள், ஐந்தாறு தடவை அவனுடன் சினிமாவுக்குப் போவதைப் பார்த்தேன். அன்றைக்கு அவன் அவளுக்குப் புடவை கூட வாங்கிக் கொடுத்ததை நான் கண்ணால் பார்த்தேன். இன்னொருநாள் இருவரும் தனியாக வாடகைக் கார் எடுத்துக் கொண்டு போனார்கள்......"

இதைக் கேட்ட சிம்மன், "பாவம், ராஜத்திற்குப் புத்தி இந்த மாதிரி போக வேண்டாம். நாளைக்கு நாலு பேர் என்ன சொல்லுவார்கள்? நல்ல பையன், இப்படிக் கெட்டு விட்டானே என்று சொல்ல மாட்டார்களா?" என்று ரொம்பவும் அங்கலாய்த்தான்.

"நாலு பேர் சொல்வது இருக்கட்டும். நாளைக்கு நம்ம பாங்கியின் பெயரல்லவா அனாவசியமாக அடிபடும். 'பாரடா, அரோஹரா பாங்கியில் காதல்' என்றெல்லாம் இகழ்ச்சியாகச் சொல்லி, நம் பாங்கியின் பெயரையே கெடுத்து விடுவார்களே" என்றான் ஆல்ஜியர்ஸ்.

இருவருமாகச் சேர்ந்து இப்படியே பேசிக் கொண்டே போனார்கள். முதலில் இப்படி ஆரம்பித்தது, பின்னர் பாங்கியின் கடமை, நிர்வாக அதிகாரியின் பொறுப்பு, இப்படியெல்லாம் திரும்பியது. சிம்மன் யோசனை செய்ய ஆரம்பித்தான். ஆல்ஜிர்யஸ் விட்டுக் கொடுக்கவில்லை. ஏதேதோ சொல்லிக் கொண்டே போனான். கடைசியில் "நாம் யோசிப்பதில் பயனில்லை. நம்முடைய நிர்வாக அதிகாரிக்கு இதைத் தெரிவித்துவிட வேண்டும். பிறகு அவர் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யட்டும். என்னைப் பொறுத்த மட்டிலும் நான் இதைச் சும்மா விடப் போவதில்லை. நிர்வாக அதிகாரிக்கு ஒரு மொட்டைக் கடிதம் எழுதப்போகிறேன்" என்றான் அவன் பெருமையாக.



ஆல்ஜியர்ஸ் அனாமதேயக் கடிதத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தானே தவிர, அவன் மனசில் பயம் மிகுந்திருந்தது. அனாமதேயக் கடிதம் எழுத அதிக நாழிகையாகாது. ஆனால், அதைக் கண்டு நிர்வாக அதிகாரி எதையாவது செய்து விட்டால் என்ன செய்வது என்ற பயம்தான் அவனை உலுப்பியது. ஆனால் பிறகு நடந்த ஒரு சில சம்பவங்கள் அவனை ஒரு அனாமதேயக் கடிதம் எழுதச் செய்தது. ஒரு தடவை அவன் தினசரி அட்டென்டன்ஸில் கையெழுத்திட அவள் பேனாவை எடுத்தபொழுது, அவள் அவனை முறைத்தாள். இன்னொருதடவை அவனாகச் சம்பந்தமின்றி அவளிடம் பேச்சுக் கொடுக்கப் போனபொழுது அவள் பதிலே பேசவில்லை! இதனாலெல்லாம் கோபம் கொண்ட ஆல்ஜியர்ஸ் எழுதிய அனாமதேயக் கடிதம் இதுதான்:

"அன்பார்ந்த நிர்வாக அதிகாரி அவர்களுக்கு,

உங்கள் ஆபீஸிலேயே சம்பந்தப்படாத நான், உங்களுக்கு ஒரு அனாமதேயக் கடிதம் எழுதுகிறேனென்றால், அதன் முக்கியத்துவம் உங்களுக்கே நன்றாகத் தெரியவேண்டும். விஷயம் பெரிதில்லை. ஆனால் அதுவே நாளைக்கு உங்கள் பாங்கியின் பெயரைக் கெடுக்கும் என்பது உண்மை!

உங்கள் ஆபீஸ் ராஜமும் பெண் குமாஸ்தா அன்னமும் அடிக்கடி சினிமா போகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இதுபோல் எத்தனையோ சேஷ்டைகள் நடக்கின்றன. இதுபோல் இன்னும், இனிமேலும் நடந்து கொண்டேயிருந்தால், பாங்கியின் நல்ல கௌரவம் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். இனி உங்கள் இஷ்டம்.

இப்படிக்கு,
நன்மை விளம்பி."

இந்தக் கடிதத்தை எழுதி எடுத்து வைத்துக் கொண்டு ஆல்ஜியர்ஸ் பலமுறை படித்துப் பார்த்தான்; சிம்மனையும் படிக்கச் சொன்னான். பின்னர் யாருக்கும் தெரியாமல் தபாலில் சேர்த்தனர்!

மறுநாள் ஆபீஸிற்குப்போன ஆல்ஜியர்ஸ் மனது பட படவென்று அடித்துக் கொண்டிருந்தது. என்ன ஆகுமோ என்ற திகிலுடன், ராஜத்தின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட சந்தோஷம் வேறு! அன்றையத் தபால் கட்டு நிர்வாக அதிகாரியிடம் போய்ச் சேர்ந்தது. அதில் ஆல்ஜியர்ஸ் எழுதிய அனாமதேயக் கடிதமும் இருந்தது. சிறிது நாழி கழித்து நடேசன் உள்ளே அழைக்கப் பட்டார். ஆல்ஜியர்ஸ் தவிர மற்றெல்லோரும் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தார்கள். உள்ளே போனவர் வெளியே வருவதற்குள், அவன் மனம் என்ன பாடுபட்டதென்று அவனுக்கே தெரியாது! நடேசன் ஒரு வழியாக வெளியே வந்தார். அவர்

கையில் அனாமதேயக் கடிதம் இருந்தது. ஆனால் அந்தக் கடிதத்திற்குக் காரண பூதர்கள் தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடுமோ என்று விழித்தார்கள்! ஆனால் நடேசன் ஒருமுறை பொடியை உறிஞ்சி விட்டுக் கடகட வென்று தமக்குத் தாமே சிரித்தார். ஆல்ஜியர்ஸ் பொறுமை யிழந்தவனாகக் காணப்பட்டான்.

நடேசன் சொன்னார்:

“எந்த முட்டாளோ இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறான். ராஜமும் அன்னமும் காதலிக்கிறார்களாம். அவர்கள் அண்ணன் தங்கை என்கிற விவரம் இதையெழுதியவனுக்குத் தெரியாது போலிருக்கிறது. எல்லோரும் ‘பாண்ட்’ சகிதமாக வர வேண்டும் என்று நினைத்துத்தான் நிர்வாக அதிகாரி ஒரு பெண் குமாஸ்தா வேண்டுமென்றார். ராஜத்தின் சிபாரிசில் அவனுடைய தங்கைக்கு வேலை கிடைத்தது. இந்த விவரமெல்லாம் இந்தக் கடிதம் எழுதியவனுக்குப் போய் எப்படிச் சொல்வது?”

இவ்வாறு கூறிய நடேசன் மறுபடியும் இடி இடி யென்று சிரித்தார். சிம்மன், ஆல்ஜியர்ஸைப் பார்க்க அவன் பக்கம் திரும்பினான். ஆனால் அவனோ அதற்கு முன்பே அங்கிருந்து நழுவி விட்டான்!

ஆசிரியரின் வெற்றி

‘சினிமாப் பித்தன்’ ஆசிரியர் தம் பத்திரிகையின் ‘பித்தனைக் கேளுங்கள்’ பகுதிக்கு வந்த கடிதங்களை ஒவ்வொன்றாய்ப் படித்தார். அதில் பெரும்பாலானவை, பிரபல சினிமா நடிகை மிஸ். மோகனாங்கியின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றித் தெரிவிக்குமாறு பித்தன் நேயர்கள் கேட்டு எழுதியிருந்தவைதாம்.

ஆசிரியர் தலையைச் சொறிந்து கொண்டார். பல பிரபல சினிமா நடிகைகளைப் பேட்டி கண்டு அவர்கள் வாழ்க்கை வரலாற்றைத் தமக்கே உரித்தான ஹாஸ்ய பாணியில் எழுதி வாசகர்களை மகிழ்வித்து வந்த அவருக்கு மிஸ். மோகனாங்கியின் விஷயத்தில் அவர்கள் இச்சையைப் பூர்த்தி செய்ய முடியாது போயிற்று.

இரண்டு மூன்று தடவை அவள் பங்களாவை முற்றுகை யிட்டு அவர் தோல்வி யடைந்தார்.

மற்ற ‘நடிக நக்ஷத்திரங்கள்’ சினிமாப் பித்தன் ஆசிரியர் நம்மைப் பேட்டி காண வரமாட்டாரா என்று தவித்தபோது மிஸ். மோகனாங்கி மட்டும் அவரை லட்சியம் பண்ணாமலிருந்தது அவருக்கு மிக மன வருத்தத்தை யளித்தது.

சினிமாப் பித்தன் ஆசிரியர் ஒன்றும் புரியாத நிலையில் அமர்ந்திருந்த போதுதான் ‘பூனைபோல் உள்ளே நுழைந்தார் உதவி ஆசிரியர் கேசவன்.

அவரைப் பார்த்ததும், ‘என்ன கேசவன்! மிஸ் மோகனாங்கியைப் பற்றிய விவரத்தைச் சீக்கிரம் நம் பத்திரிகையில் வெளியிட வேண்டும். உடனே இதற்கு ஏதாவது வழி செய்யுங்களேன்!” என்றார் ஆசிரியர்.

“நானே அதைச் சொல்லத்தான் வந்தேன்!” என்ற உதவி ஆசிரியர் கையிலிருந்த பத்திரிகையை அவரிடம் நீட்டி, “இதில் தேவைப் பகுதியில் மிஸ் மோகனாங்கி செய்திருக்கும் விளம்பரத்தைப் படித்துப் பாருங்கள்” என்றார்.

ஆசிரியர் அதைப் படித்துப் பார்த்து விட்டு “ஆமாம்! இதற்கும் அவள் வாழ்க்கை வரலாற்றுக்கும் என்ன சம்பந்தம்!” என்றார்.

“இன்னும் ஒரே வாரத்தில் அதன் சம்பந்தம் தெரியும். எனக்கு இந்த ஒரு வாரம் மட்டும் லீவ் கொடுங்கள் போதும்” என்றார்.

“அது சரி. ஆனால் விளம்பரத்தில் அவள் கேட்டிருக்கும் யோக்கியதாம்சம்......”

“எனக்கு நிறைய இருக்கிறது” என்றார்.

பித்தன் ஆசிரியர் முகம் மலர்ந்தது.

“சரி; ஜமாயுங்கள்” என்றார் அவர்.

அதற்கடுத்த ‘சினிமாப் பித்தன்’ இதழ்கள் ஏஜெண்டுகளை அடைந்த அரை மணி நேரத்திற்குள் தீர்ந்து போயின. தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மேலும் இதழ்கள் அனுப்ப வேண்டிப் பித்தன் காரியாலயத்திற்குத் தந்திகள் பறந்தன. ஆசிரியர் திக்குமுக்காடிப் போனார்.

காரணம் அந்த இதழில் மிஸ். மோகனாங்கியின் வாழ்க்கை வரலாறு கொட்டை எழுத்தில் வெளியாகி யிருந்ததுதான்.

“இன்று தென்னிந்தியாவின் தலைசிறந்த நடிகையான மிஸ். மோகனாங்கி சினிமாவில் சேருமுன்னர் பம்பாய்க் கம்பெனி யொன்றில் லேடி டைப்பிஸ்டாக இருந்தார். முதற் காதலில் ஏமாற்றமடைந்து போன அவர் வாழ்நாள் முடிவுவரை மணம் செய்து கொள்வதில்லை என்று தீர்மானித்து விட்டார். அவருக்கு மிகவும் பிடித்த பட்சணம் பம்பாய் குல்கந்து. படத்தில் சாதுவாய்த் தோற்றமளிக்கும் அவர் உண்மையில் ரொம்ப சிடு சிடுப்பான குணம் வாய்ந்தவர். அவரிடம் சேர்ந்தாற்போல ஒரு மாதம் எந்தச் சமையல்காரனும் இருந்ததில்லை என்று அவரே அடிக்கடி சொல்லுவார். காலை ஒன்பது மணிக்கு எழுந்ததும் காப்பி சாப்பிட்டு விட்டு அப்புறம் தான் பல் தேய்ப்பார்...” என்பது போன்ற பல ருசிகரமான விஷயங்கள் அதில் அடங்கியிருந்தன.

இதர சினிமாப் பத்திரிகை ஆசிரியர்கள், தங்களால் சாதிக்க இயலாத காரியத்தைப் ‘பித்தன்’ சாதித்து விட்டது கண்டு வியந்தார்கள்.

ஊரில் எங்கே கண்டாலும் ஜனங்கள், சினிமாப் பித்தன் பத்திரிகையில் வெளியாகியிருந்த மோகனாங்கியின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியே பேசிக் கொண்டார்கள்.

தான் எந்த நிருபருக்கும் பேட்டி கொடுக்காத போது தன்னைப் பற்றிய ‘உண்மை விவரங்கள்’ பித்தனில் எப்படி வெளியாயின என்று மோகனாங்கியே ஆச்சரியமடைந்தாள்.

ஆனால் அவள் ஆச்சரியமெல்லாம், புது சமையற்கார ஐயா கொடுக்கச் சொன்னதாகச் சொல்லி வேலையாள் மறைத்து வைத்திருந்து கொடுத்த கடிதத்தைப் பார்த்ததும் அடங்கி விட்டது.

“தேவி! நான் இப்படி நேரில் சொல்லிக் கொள்ளாமல் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டுப் போவதற்கு மன்னிக்கவும். நான் வந்த காரியம் ஆகிவிட்டது. குல்கந்து சாப்பிடும்போது மட்டும் ஏழையை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இப்படிக்கு, கேசவன். உதவி ஆசிரியர்; சினிமாப் பித்தன்” என்றுதான் அந்தச் சிறிய காகிதத்தில் எழுதியிருந்தது.

— டி. ஜி. எஸ்.

ஹங்கேரியின் சிறப்பு

ஜெயமணி

ஹங்கேரி நாடு ஒரு காலத்தில் மலைகளால் சூழப்பட்ட மிகச் செழுமையான சமவெளிப் பிரதேசமாக இருந்தது. அதன் மலைச் சாரல்களிலிருந்து ஏராளமாகச் சுரங்கச் செல்வமும் விலையுயர்ந்த மரங்களும் கிடைத்தன.

ஆனால் முதலாவது மகா யுத்தத்துக்குப் பிறகு ஹங்கேரி அதற்குச் சொந்தமாக இருந்த பாதரசம், தங்கம், வெள்ளி, தாமிரம் எல்லாச் சுரங்கங்களையும் இழந்துவிட்டது. அதன் இரும்புச் சுரங்கங்கள் மாத்திரமே மிஞ்சி இருந்தன. ஹங்கேரிக்குச் சொந்தமாக இருந்த காடுகளிலும் ஐந்தில் நாலு மடங்கை அது இழக்கும்படி நேர்ந்தது.

ஹங்கேரி மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். ஹங்கேரியின் வருமானத்தில் பாதிக்கு மேல் விவசாயப் பொருள்களின் மூலமே கிடைக்கிறது.

அந்த நாட்டில் கோதுமை, பார்லி, சோளம், சர்க்கரை, ஆப்பிள், பேரிக்காய், சீமை வாதாம் பழம் போன்ற பலவகைப் பழங்கள் ஏராளமாக உற்பத்தியாவதால், அவை வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கால்நடைகளுக்கும் குதிரைகளுக்கும் ஹங்கேரி பிரசித்தி பெற்றது. எனவே அங்கிருந்து வெளி நாடுகளுக்கு மாடுகளும் குதிரைகளும் ஏற்றுமதியாவதன் மூலம் அந்த நாட்டுக்கு ஏராளமான வருமானம் கிடைக்கின்றது.

பல நூற்றாண்டுகளாக ஹங்கேரி மக்கள் கால் நடைகளைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து வளர்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய வாழ்க்கையில் கால் நடைகள் சிறந்த பொக்கிஷமாக இருந்து வருகின்றன. உழவு, போக்குவரத்து முதல் பற்பல காரியங்களுக்கும் ஹங்கேரி மக்கள் கால் நடைகளின் உதவியையே நாடுவது வழக்கமாக இருந்து வருகிறது.

* * *

முப்பத்தாறாயிரம் மைல் விஸ்தீரணம் உள்ள ஹங்கேரியின் ஜனத்தொகை சற்றேறக் குறைய ஒரு கோடியாகும். இவர்களைத் தவிர, முதலாவது மகா யுத்தத்துக்குப் பிறகு ஹங்கேரி மற்ற நாடுகளிடம் பறி கொடுத்த பிரதேசங்களில் இருபத்தைந்து லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்.

ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டின் ஜனத்தொகை பன்னிரண்டு லட்சம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

புடாபெஸ்ட் ஒரு காலத்தில், டனூபி நதியின் இரு கரைகளில் புடா என்றும் பெஸ்ட் என்றும் இரண்டு நகரங்களாக இருந்தன. 1872-ம் வருஷத்தில் தான் அவ்விரண்டையும் ஒரு நகரமாகச் செய்தனர். அதிலிருந்து அதற்கு புடாபெஸ்ட் என்ற பெயர் வழங்கி வருகிறது.

புடாபெஸ்டில் உலகத்திலேயே பெரிய மாவு மில்கள் இருக்கின்றன.

புடாபெஸ்ட் ஆரோக்கிய வாசத்துக்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். அதன் சமீபமாக ஏராளமான இயற்கை ஊற்றுகள் இருப்பதே அதற்குக் காரணம். அந்த ஊற்றுக்களில் ஒன்று பூமியில் மூவாயிரம் அடிக்குக் கீழே இருந்து வருவதால், அந்தத் தண்ணீர் அபூர்வமான ஔஷத சத்துடன் கூடியதாக இருக்கிறது. உலகத்திலேயே பூமிக்குக் கீழே மோட்டார்கள் செல்லும் பாதையை அமைத்த முதலாவது நகரம் புடாபெஸ்ட் தான்! டனூபி நதியின் இரு கரைகளிலும் உள்ள புடா, பெஸ்ட் இவ்விரண்டையும் இணைப்பதற்காக 1250 அடி நீளத்தில் அற்புதமான தொங்கு பாலம் ஒன்றை நிர்மாணித்திருக்கிறார்கள்.

ஹங்கேரி மக்களின் கால்நடைச் செல்வம்



புடாபெஸ்ட் நகருக்கு அடுத்தபடியாக செகெட் நகரைச் சொல்லலாம். ஒன்றரை லட்சம் ஜனத் தொகையுள்ள அந்நகர் விவசாயப் பொருள்களின் வியாபார ஸ்தலமாக விளங்குகிறது. 1879-ம் ஆண்டில் ஏற்பட்ட பயங்கரமான வெள்ளத்தில் செகெட் நகர் அடியோடு அழிந்து விட்டது. எனினும், பிறகு அதை முன்னரைக் காட்டிலும் அதிக அழகுள்ள நவீன நகரமாக நிர்மாணித்து விட்டார்கள்.

மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கும் டெப்ரசன் என்ற நகரம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த நகரில்தான் 1849-ல் ஹாப்ஸ்பர்க் ஆட்சியிலிருந்து ஹங்கேரி விடுதலை பெற்றுச் சுதந்திரப் பிரகடனம் செய்தது. மேற்படி நகர் கால்நடைச் சந்தைகளுக்குப் பிரசித்தி பெற்று விளங்குகிறது.



ஹங்கேரி விவசாயிகளின் வீடுகள்

ஹங்கேரியில் ஏராளமான நெசவாலைகளும் காகிதம், யந்திரக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகளும் இருக்கின்றன.

* * *

ஹங்கேரியில் ஆறு வயதிலிருந்து பதினாறு வயது வரையில் சகலரும் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும் என்ற சட்டம் அமுலில் இருந்து வருகிறது.

அந்த நாட்டில் ஆறு சர்வ கலாசாலைகள் இருக்கின்றன. அவற்றுள் புடாபெஸ்டில் உள்ள சர்வ கலாசாலைதான் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சகல சர்வ கலாசாலைகளும் ஹங்கேரி சர்க்காரின் சொந்த நிர்வாகத்தில் இருந்து வருகின்றன.

ஹங்கேரியில் உலகப் பிரசித்தி பெற்ற கவிகளும் எழுத்தாளர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த நாட்டில் நோபல் பரிசு பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

சங்கீதம், நடனம் இவற்றில் ஹங்கேரிப் பெண்கள் ஐரோப்பாவிலேயே தலைசிறந்து விளங்குவது போல், சமையல் வேலையிலும் பிரசித்தி பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஹங்கேரிப் பெண்களைப் போல் சமையலை ஓர் அருமையான கலையாக அபிவிருத்தி செய்துள்ளவர்கள் வேறு யாருமில்லை.

ஹங்கேரியில் 200 சதுரமைல் விஸ்தீரணம் உள்ள பாலடான் ஏரி மத்திய ஐரோப்பாவிலேயே மிகப் பெரியது.

* * *

சிற்சில முக்கிய அம்சங்களில் ஹங்கேரி, உலகத்தில் உள்ள பல நாடுகளையும் விட அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

1934-ல் ஹங்கேரியில் உள்ள நிலங்களில் பெரும் பகுதி சுமார் ஆயிரம் பேர்களுக்கு மாத்திரமே சொந்தமாக இருந்தது. அதனால் விவசாயிகளில் பெரும்பாலோர் ஜீவனத்துக்குப் போதிய நிலம் இல்லாமல் தவித்து வந்தார்கள். நிலச் சொந்தக்காரர்கள் பரம்பரையாக ஹங்கேரியின் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தார்கள்.

பெரிய நிலச் சொந்தக்காரர்களின் சொத்துக்களைப் பங்கிடு செய்யும் விஷயமாக 1920ம் ஆண்டிலேயே நிலச் சீர்திருத்த மசோதா நிறைவேறி விட்டது. பெரும் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களை ஏழை விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நியாயமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதே மேற்படி மசோதாவின் நோக்கமாகும்.

அந்த நாட்டில் ஒரு புறம் பெரிய நிலச் சொந்தக்காரர்கள் சகல சுக போகங்களுடனும் வாழ்ந்து வந்தார்கள். மற்றொரு புறத்தில், ஏழை விவசாயிகள் வசிப்பதற்குக்கூட தகுதியான வீடுகள் இல்லாமல், வறுமையினால் வாடி வந்தார்கள். மேற்படி நிலைமை ஹங்கேரித் தலைவர்களின் மனத்தை உருக்கியது. அத்தகைய ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டும் என்று அவர்கள் திடசங்கல்பம் கொண்டார்கள். அவர்களுடைய உறுதியே நிலச் சீர்திருத்த சட்டமாக உருவாகியது.

எனினும், ஹங்கேரியில் எழுந்த அரசியல் குழப்பம் காரணமாக அந்தச் சட்டம் தீவிரமாக அமுலுக்கு வர முடியவில்லை. இரண்டாவது மகாயுத்தம் முடிந்த பிறகு அதை அமுலுக்குக் கொண்டு வருவதில் ஹங்கேரி சர்க்கார் கவனம் செலுத்தலாயினர்.

1840-லிருந்தே ஹங்கேரியில் முன்னேற்றகரமான தொழிலாளர் சட்டங்களும் அமுலுக்கு வரத் தொடங்கின. அந்தச் சட்டங்களின் மூலம் சிறுவர், சிறுமியரை வேலைக்கு வைத்துக் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் பலனாக தொழிலாளர்களுக்கான வசதிகளும் அதிகமாகியுள்ளன.

ஹங்கேரி பால்கன் நாடுகளுக்கு மத்தியில் இருப்பதால், அந்த நாடுகளின் ஒத்துழைப்பின்றி அது அதிக முன்னேற்றம் அடைவது முடியாத காரியமாக இருக்கிறது.

அகில உலகச் சிறுகதைப் போட்டி

- ஏற்கெனவே முதல் தடவையாக அகில உலகச் சிறுகதைப் போட்டி நடந்தது அல்லவா! அதில் இந்தியா உள்பட உலகத்தில் உள்ள இருபத்து மூன்று நாடுகள் கலந்து கொண்டன.
- அந்தப் போட்டியில் உலகத்திலேயே முதல், இரண்டாவது பரிசு பெற்ற கதைகள் "கல்கி"யில் தொடர்ச்சியாக வெளியாகி வந்தது வாசக நேயர்கள் அறிந்த விஷயம். அவற்றைத் தவிர அந்தந்த நாடுகளில், அந்தந்த பாஷைகளில் பரிசு பெற்ற சுமார் நூறு சிறந்த கதைகளும் மொழி பெயர்க்கப்பட்டு, "கல்கி"யில் பிரசுரமாயின.
- மேற்படி போட்டி மிகவும் வெற்றிகரமாக நடந்ததால், இப்போது இரண்டாவது தடவையாக, அகில உலகச் சிறுகதைப் போட்டி நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.
- இம்முறையும் அமெரிக்காவில் உள்ள பிரபல நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன் பத்திரிகையின் மேற் பார்வையிலேயே அந்தப் போட்டி நடைபெறுகிறது.
- இந்தியா தேசத்தில் மேற்படி சிறுகதைப் போட்டியை நடத்தும் பொறுப்பைப் புது டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் உள்ள முக்கியமான பன்னிரண்டு பாஷைகளிலாவது, ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறுகதை எழுதலாம்.
- இந்தியாவின் முக்கிய பாஷைகளில் தமிழ் மொழி ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, தமிழ் எழுத்தாளர்கள் அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- இந்தியாவில் எழுதப்படும் சிறந்த எட்டுக் கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கும். அதில் முதல் பரிசு ரூ. 1500.
- அந்த எட்டுக் கதைகளிலிருந்து அகில உலகப் போட்டிக்கு முதல் நாலு கதைகள் அனுப்பப்படும்.
- இதில் கலந்து கொள்ளும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பாஷைக் கதைகளுக்குப் பரிசு அளிக்கும். பரிசு பெறும் சகல கதைகளும் போட்டியை நடத்தும் பத்திரிகைகளில் வெளிவரும்.
- கதைகள் பிரசுரமாகி முடிந்த பின், அந்தக் கதைகளில் எது சிறந்தது என்பதை, போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே வோட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.
- அந்தக் கதைக்கே அகில உலகப் போட்டியின் முதல் பரிசான ஐயாயிரம் டாலர் (ரூ. 23,750) கொடுக்கப்படும்.
- பஞ்சாயத்தார்களிடம் சமர்ப்பிக்கும் கதைகளுக்கு இலக்கங்களே கொடுக்கப்படுமாதலால், எழுத்தாளர்கள் தங்கள் பெயரையோ, விலாசத்தையோ அதில் குறிப்பிடக் கூடாது.
- ஜூலை மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.
- பரிசு பெறாத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் கையெழுத்துப் பிரதியுடன் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும். திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் செய்ய முடியாது.
- தமிழ்க் கதைகளை ஆசிரியர், "கல்கி", மேம்பாக்கம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- அனுப்பப்படும் சிறுகதைகள் அதிகபட்சம் நாலாயிரம் வார்த்தைகளுக்குமேல் இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் ஆயிரத்து இருநூற்றைம்பது வார்த்தைகள் உள்ளதாக இருக்க வேண்டும்.
- சிறுகதை அனுப்புவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கெனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம்.
- கதைகள் எவ்விஷயத்தை வேண்டுமாயினும் அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், லோபம், யுத்தம், துணிகரச் செய்கை, நிறப் போர், துரோகம், கலியாணம், மரணம் ஆகிய எந்த விஷயமாயினும் சரி; உணர்ச்சிப் பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம்—ஆகிய சிறு கதையின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.
- அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குப் பொறுக்கி எடுக்கப்படும் நாலு தமிழ்க் கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 125 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.
- முதலாவது அகில உலகச் சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர் இந்தியர் தான்.
- இம்முறை மற்ற நாட்டினரைப்போல் இந்தியரும் முதற் பரிசு பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அவ்விதம் பரிசு பெற்று, உலகப் புகழை அடைவது இந்திய எழுத்தாளர்களின் பெரு முயற்சியையே பொறுத்திருக்கிறது.
- தயவு செய்து உறையின்மேல் "**அகில உலகச் சிறுகதைப் போட்டி**" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- அகில இந்தியப் போட்டிக்காகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கும் நாலு கதைகளையும் அவற்றின் ஆசிரியர்கள் தாங்களாகவோ, அல்லது பிறரைக் கொண்டோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தர வேண்டும்.
- பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளைத் தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை "கல்கி"யில் பிரசுரிக்கப்படும். அவற்றிற்குரிய சன்மானமும் அளிக்கப்படும்.
- இந்தப் போட்டி சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களில் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி கூறும் தீர்ப்பே முடிவானது.

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு

பிரதி மாதாந்திர விஜயம்

நோயாளிகளின் நன்மையை உத்தேசித்து கீழ்க்கண்ட ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்ட தேதிகளில் காலை 9 முதல் 11 மணி வரையிலும் மாலை 3 முதல் 5 மணி வரையிலும் எமது டாக்டர் ஆலோசனை கூறுவதற்குத் தயாராக இருப்பார். மாறுதல்கள் இருப்பின் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

இடம்	தேதி	விலாசம் :
கரூர் (மாலை 3 முதல் 5 மணி வரை)	3	மெஸர்ஸ். சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
ஈரோடு (காலை 9 முதல் 11 மணி வரை)	4	மெஸர்ஸ். ஸ்ரீ கிருஷ்ணா & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
சேலம்	5	மெஸர்ஸ். தி சேலம் மெடிகல் சப்ளைஸ் & பார்மஸி லிமிடெட்
கோயமுத்தூர்	6	மெஸர்ஸ். ஈஸ்வர் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ், ராஜா தெரு
பாலக்காடு	7	மெஸர்ஸ். நாதம் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
தஞ்சாவூர்	9	ராஜா சத்திரம்
மன்னார்குடி	10	மெஸர்ஸ். மீனா கிளினிக், காந்தி ரோடு
திருவாரூர்	11	விசாரிக்குமிடம் : மெஸர்ஸ். சுப்பய்யா மெடிகல் ஹால் அல்லது மெஸர்ஸ். தி மெடிகல் எம்போரியம், விஜயபுரம்.
நாகப்பட்டினம்	12	மெஸர்ஸ். எஸ்.டி. சௌந்தரராஜ பிள்ளை & சன்ஸ், கெமிஸ்ட்ஸ்
மாயவரம் டவுன்	13	மெஸ்ஸர். ராமகிருஷ்ண வைத்தியசாலை, கிருஷ்ணராயர் சந்து
சிதம்பரம்	14	மெஸர்ஸ், நடராஜா டிஸ்பென்ஸரி
கடலூர் என். டி.	15	மெஸர்ஸ். கமலா & கம்பெனி, கெமிஸ்ட்ஸ், புதுப்பாளையம்
விழுப்புரம்	16	மெஸர்ஸ். சி. குபேந்திர செட்டி & சன்ஸ்
புதுக்கோட்டை	18	வஸந்தா லாட்ஜ்
காரைக்குடி	19	மெஸர்ஸ். ஏ. வி. சன்ஸ். டிராவலர்ஸ் ரூம்
மதுரை	21, 22	மெஸர்ஸ். டி.என்.சி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ், கெமிஸ்ட்ஸ், வடக்கு சித்திரை தெரு
திருநெல்வேலி	24, 25	தி சந்திரா விலாஸ், போர்டிங் & லாட்ஜிங், திருநெல்வேலி ஜங்ஷன்
வேலூர்	27	மெஸர்ஸ். வி. பி. சிவம் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ், லாங் பஜார்
காஞ்சிவரம்	28	86, சாலைத் தெரு,

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

சென்னை - திருச்சிராப்பள்ளி - கும்பகோணம்


தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும் நுரையினால்!
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
LIFEBUOY SOAP
லைப்பாய் சோப்
L. 230-50 TM



அபவாதம் நீங்கியது

புஷ்யன்

அன்று எனக்கு வந்த கடிதத்தைக் கண்டதும் பெரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டேன். கவரின் மேல் இருந்த மூத்து மூத்தான எழுத்துக்கள் அவை விஜயாவினுடையவை என்று பறைசாற்றின. அவள் எனக்கு என்ன எழுதியிருக்கப் போகிறாள், என் விலாசம் அவளுக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் பிரித்துப் படித்தேன். கடிதம் முழுதும் அவளுடைய சித்திர எழுத்துக்களால்தான் நிரம்பியிருந்தது. ஆனால் கடைசியில் அவளுடைய தகப்பனார் சந்திரசேகர அய்யர் தாம் கையெழுத்திட்டிருந்தார்.

அவர் எனக்கு எழுதியிருக்கிறார்! எப்படிப்பட்ட விஷயம்! என் மனத்தை, மனச் சாட்சியை வாட்டி வந்த வருத்தத்தைப் போக்கிச் சந்தோஷ சாகரத்தில் மூழ்க்கி விட்ட செய்தியை அக் கடிதம் தாங்கியிருந்தது.

ஆமாம், நீங்கள் எண்ணுவது போல் எனக்கு விஜயாவைக் கல்யாணம் செய்து கொடுப்பதாக எழுதியிருந்த தென்னமோ வாஸ்தவம்தான். ஆனால், அதனால் மட்டும் நான் சந்தோஷக் கடலில் அமிழ்ந்து நீந்த ஆரம்பித்து விடவில்லை. உண்மையில் நான் இது நாள்வரையில் விஜயா மணமாகாமல் எனக்காகக் காத்திருப்பாள், அல்லது காத்திருக்க விட்டிருப்பார்கள் என்று எண்ணவேயில்லை. அவளுக்கு விவாகமாகி அவள் தன் கணவனுடன் வாழ்ந்து கொண்டிருப்பாள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று அவள் எனக்குக் கிடைக்க இருக்கிறாள் என்று தெரிந்ததும் சந்தோஷம் அபரிமிதமாகி விட்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவளை எனக்குக் கிடைக்கச் செய்தது எது? எந்தக் காரணத்தால் அவளுடைய தகப்பனார் இத்தனை நாட்களுக்குப் பிறகு, மூன்று வருடங்களுக்குப் பின் என் விலாசத்தைக் கண்டு பிடித்து என்னைத் தம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி வேண்டுகிறார் என்ற விஷயம்தான் என்னை எல்லாவற்றையும்விட மகிழ்ச்சி கொள்ளச் செய்தது. அவர் எப்படிப்பட்ட பழியை, அபவாதத்தை என்மேல் சுமத்தினார், மூன்று வருடங்களுக்கு முன்! அதை எண்ணித்தான் நான் இது நாள் வரை உருகி வந்தேன். என் நண்பர்கள் எல்லோரும், "என்ன, நாராயணன்! இப்படி நாளுக்கு நாள் இளைத்து வருகிறாயே? கல்யாணமாகாத கவலை போலும்" என்று கேலி செய்து கொண்டு வந்தனர். ஆனால் என் உள்ளத்தில் என்ன இருந்தது, ஏன் நான் அப்படி உள்ளுக்குள்ளேயே மனம் வெதும்பி என் உடலை அழித்துக் கொண்டு வந்தேன் என்பது அவர்களுக்கு என்ன தெரியும்?

என் எல்லா மனக்கவலைகளையும் போக்கும் மருந்தாக இந்தக் கடிதம் அமைந்து விட்டது. இந்தக் கடிதம் கண்ட மாத்திரத்தில் நான் மூன்று வருடங்களுக்கு முன் எவ்வளவு உற்சாகத்துடன் இருந்தேனோ அவ்வளவு உற்சாக புருஷனாகி விட்டேன்.

என் பழைய நாட்களின் நினைவுகளெல்லாம் என் கண்முன் வந்து விட்டன. அப்படியே நாற்காலியில் சாய்ந்தவாறு அந்த நினைவுகளில் மூழ்கி விட்டேன்.

* * *

என்னுடைய மாமா சந்திரசேகர அய்யர் கும்பகோணத்தில் பிரபல வக்கீல். என் தகப்பனார், திருச்சி ஜில்லா கோர்ட்டில் குமாஸ்தாவாக இருந்தார். என் தகப்பனார் செலவாளி. பணத்தைச் செட்டாகச் செலவழிக்கத் தெரியாது. இருக்கும் வரை தாம், தூம் என்று செலவு செய்து விடுவார். அதுவுமல்லாமல் அவருக்கு அடிக்கடி வியாதி பீடித்துவிடும். அதனாலெல்லாம் வேறு பணம்

அதிகமாக வேண்டியிருந்தது. அதற்காகக் கடன் ஏராளமாயிற்று. அதை அடைக்கக் கொஞ்சம் கொஞ்சமாக என் தாயாரின் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாம் மறைய ஆரம்பித்தன. என் மாமாவுக்கு அடிக்கடி எழுதி என் தாயார் கொஞ்சம் பண உதவி பெறுவாள். மாமா சந்திரசேகரய்யர் பணம் செலவழிப்பதில் கொஞ்சம் யோசிப்பவர். என்றைக்கும் மூன்று தரம் கடிதம் எழுதிய பிறகு ஏதோ கொஞ்சம் உதவி செய்வார். அவருக்கு என் தகப்பனார் மீதும் அவருடைய வியாதிக்காகவும் இரக்கம் இருந்தாலும் மீதி விஷயங்களில் வெறுப்பு. செட்டாக இருக்கத் தெரியாதவர், என் தாயாரின் நகைகள், சீர் செனத்தி எல்லாவற்றையும் தொலைத்து விட்டவர் என்ற கோபம். அதனாலும் பணம் அதிகமாக உதவி செய்யத் தயங்குவார்.

கடைசியில் வீட்டுச் சொத்துக்களும், மாமாவின் உதவியும் எல்லாம் செலவழிந்தும் அவருடைய வியாதி தீராமல் ஒருநாள் திடீரென்று கண்ணை மூடிவிட்டார்.

அப்போது எனக்கு வயது பத்து. என் தாயார் என்னை அழைத்துக் கொண்டு மாமா வீட்டுக்குப் போய் விட்டாள். அங்கு நன்றாகத்தான் இருந்தோம் முதலில். ஆனால் என் மாமியின் துர்ப்போதனையின் காரணமாய் நாளடைவில் என் மாமாவுக்கும் எங்கள் பேரில் வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது. என் மாமா எவ்வளவு செட்டோ, அதற்கு மேல் மாமி. எச்சிற் கையால் காக்கையைக் கூட ஓட்ட மாட்டாள். அவளுக்கு நாங்கள் அவள் ஆதரவில் வந்துவிட்டது தண்டச் சோற்றை அள்ளிப் போடுகிறோமே என்று இருந்தது. ஆனால் என் தாயார் அந்த வீட்டுச் சமையல் உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டாள். இருந்தும் திருப்தி கிடையாது. கண்டபடி ஏசுவாள். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தாள் என் தாயார்.




எங்கள் இருவருக்கும் ஆதரவும், அன்பும் காண்பித்தது மாமாவின் பெண் விஜயாதான். அவளுக்கு வயது ஏழு. அவள் அத்தான், அத்தை என்று எங்களிடம் ஒட்டிக் கொண்டிருப்பாள். ஆனால் அது அவளுடைய அம்மாவுக்குப் பிடிக்குமா? அவள் விஜயாவை என்னுடன் சேரக்கூடாது, விளையாடக்கூடாது, அதிகம்பேசக் கூடாதென்று கட்டுத் திட்டம் இட்டாள். ஆனால் அவள் அவ்விதம் கட்டுத் திட்டம் செய்யச் செய்யத்தான் விஜயாவின் அன்பு பெருகிற்று. என்னுடனேயே விளையாடுவாள்; படிப்பாள். அக்கம் பக்கத்து நண்பர்களுடன் கூடப் போக மாட்டாள். இதெல்லாம் அவளுடைய தாயாருக்குப் பிடிக்கவில்லை. சதா திட்டிக் கொண்டும், என்னைக் காணும் போதெல்லாம் என் மேல் எரிந்து விழுந்து கொண்டும் இருப்பாள்.

நான் எஸ். எஸ். எல். சி. படித்துத் தேறி விட்டேன். என் அம்மாவுக்கு நான் காலேஜில் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்று ஆசை யுண்டாயிற்று. என்னிடம் அவர் தெரிவித்த போது நான், "எதற்கம்மா காலேஜ் படிப்பு? நமக்கெல்லாம் அது கிடைக்குமா? மாமா என்னைக் காலேஜில் சேர்ப்பாரா? இத்தனை நான் படிக்க வைத்ததே அதிகம். நிம்மதியாக ஏதோ ஒரு உத்தியோகத்தைச் சம்பாதித்து நாம் இவ்விடத்திலிருந்து விடுபடுவதை விட்டு இன்னும் மாமா, மாமியின் கடுஞ் சொற்களைக் கேட்டுக் கொண்டு இருக்க எப்படியம்மா உங்களுக்குத் தோன்றுகிறது? வேண்டாம் அம்மா, நான் நாளைக்கே உத்தியோகம் தேடப் போகிறேன்" என்றேன்.

ஆனாலும் அவளுக்குச் சபலம் விடவில்லை. மாமாவைக் கேட்டாள். ஆனால் அவர் ஒப்புக் கொள்வாரா? அவருக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? "காலேஜ், கீலேஜ் என்று படிக்க வைக்க இங்கு என்ன பணம் கொட்டியா கிடக்கிறது?" என்றார் மாமா.

அம்மா மனம் உடைந்து விட்டாள். எவ்வளவோ கெஞ்சினாள். ஆனால் மாமாவின் மனம் சற்றும் தளரவில்லை. "குடிக்கிறது கூழ்...ஆசை மட்டும் கலெக்டர் வேலை செய்யணும் என்று இருக்கிறதைப்

எது நல்லது?



பழைய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கீழ் கிராமக் குழந்தைகள் பெரும்பான்மை யோருக்கு ஏட்டுக் கல்வி எட்டாத கல்வியாக இருந்து வந்தது. புதிய கல்வித் திட்டத்தின்படி எல்லாக் குழந்தைகளும் கல்வி பயில வசதி ஏற்பட் டிருக்கிறது.

கொண்டு காத்திருக்கிறார்கள் கொடுப்பதற் காக? எனக்கு உத்தியோகம் கிடைக்காத கவலையும் அவளை வாட்டிக் கொஞ்சம் கொஞ்சமாக உயிரைப் போக்கி வந்தது. ஒரு நாள் அவள் நான் சம்பாதிப்பதைக் கண்ணால் பார்க்காமலேயே கண்ணை மூடி விட்டாள்.

எனக்கு இந்த உலகில் இனி யார் இருக்கிறார்கள்? ஒரே ஒருத்தி, தாய் என்று இருந்தாள். அவளும் போய் விட்டாள். நான் அனாதையாகி விட்டேன். அழுதேன், புரண்டேன், தேம்பினேன் சிறு குழந்தை போல். அந்தச் சமயத்தில்கூட மாமி, "அப்பப்பா, என்ன ஆகாத்தியம்? சின்னப் பிள்ளை போல்......" என்றாள். அந்த நிமிடமே அந்த வீட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று தோன்றிற்று. ஆம், இனி எனக்கு அந்த வீட்டில் என்ன உரிமை இருக்கிறது? என் தாயின் அந்திமக் கிரியைகள் எல்லாம் முடிந்ததும், வேலை கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் அந்த வீட்டை விட்டு வெளியே போய் விடுவதென்று மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

ஆனால் எல்லாம் முடிந்ததும் என் தீர்மானத்தின்படி நடக்க முடியவில்லை. என்னை அந்த வீட்டை விட்டுப் போக முடியாமல் ஓர் சக்தி என்னைப் பிடித்திழுத்தது. ஆமாம், அது விஜயாதான். அவளை விட்டு, அவளைக் காணாமல் இருக்க முடியாது என்று தோன்றிற்று. அவள் முன்னைவிட என்பேரில் அதிக அன்பு பூண்டிருந்தாள்.

என் தாயார் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் நான் ஒருநாள் சாயங்காலம் எங்கெங்கோ சுற்றியலைந்து விட்டுச் சோர்வுடன் வந்து கொண்டிருந்தேன். வழியில் கோவில் இருக்கவே பகவானைத் தரிசித்து விட்டு வரலாம் என்று உள்ளே புகுந்தேன். விஜயா சர்வாலங்கார பூஷிதையாய்க் கையில் புஷ்பம், வெற்றிலை பாக்கு, தேங்காய்த் தட்டுடன் கோவிலிருந்து வந்து கொண்டிருந்தாள். அன்று தை வெள்ளிக்கிழமை. அவளுடைய நெற்றியில் அம்மனின் குங்குமமும் அதற்கடியில் சிறு விபூதிப் பொட்டும் பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்துவன வாக விளங்கின. அவளுடைய அழகு பிரமாதமாகத் தோன்றியது. என் மனத்தில் இருந்த சோர்வெல்லாம் அவளைக் கண்டதும் பறந்தோடி விட்டது. என்னையும் அடக்க மாட்டாமல், "விஜயா" என்று ஆர்வத்துடன் கூவினேன்.

அவளுக்கும் என் குரல் ஒலி புதியதாகப் பட்டிருக்க வேண்டும். என்னை அதிசயத்துடன் பார்த்தாள். ஒரு கணம் "அத்தான்" என்றாள். அந்தக் குரல் தீங்குரலாய்ப்பட்டது.



மகுடபதி நாடகம்

*

திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் சென்ற ஜூன் மாதம் 20, 21-ம் தேதிகளில் மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் 'கல்கி' ஆசிரியரின் 'மகுடபதி' என்னும் கதையை நாடகமாக்கிச் சிறப்பாக நடித்தனர். முதல் நாள் தலைமை வகித்த நிதிமந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம் அவர்கள் நாடகத்தைப் பாராட்டிப் பேசுவதைப் படத்தில் காணலாம். எதிர்ப்புறத்தில் கதையை நாடகமாக அமைத்துக் கொடுத்த ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணசாமியையும் மற்றும் நாடகத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்களையும் காணலாம்.

அவ்வளவு அன்பையும், உருக்கத்தையும் உடைய இனிய குரலை நான் அதுவரை கேட்டதே இல்லை.

"இரு விஜயா, நொடியில் சுவாமியைத் தரிசித்து விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிக் கோவிலுள்ளே போய் ஆண்டவனைத் தரிசித்து விட்டு வந்தேன்.

வீட்டுக்குப் போகும் வழியில் மௌனமாகவே வந்தோம். ஆனால் எனக்கு ஆகாயத்தில் பறந்து கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

வீட்டு வாசலுக்கு வந்து விட்டோம். மாமாவின் வீடு பெரிய காம்பவுண்டுடன் கூடியது. நிறைய மரங்களும், புஷ்பச் செடிகளும் உள்ளது. மாமி பக்கத்து வீட்டு மாமியுடன் சினிமாவுக்குப் போயிருந்தாள். மாமா கிளப்புக்குப் போயிருந்தார். தினமுமே விஜயாவுடன் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தாலும் அன்று என்னவோ அவளுடன் தனியாக, அந்தரங்கமாகப் பேச வேண்டுமென்று கூறிற்று என் மனம். ஆகவே அவளிடம், "விஜயா!" என்றேன்.

"என்ன அத்தான்?"

"இரேன், கொஞ்ச நேரம் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம்" என்றேன்.

"சரி..." என்றாள் அவள்.

தோட்டத்தில் கல் மேடை ஒன்றில் உட்கார்ந்து கொண்டோம். பேச வேண்டுமென்று அவளைத் தனியே அழைத்துக் கொண்டு உட்கார வைத்து விட்டேனே தவிர என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று புரியாமல் தத்தளித்தேன்.

பிறகு, "விஜயா, எனக்கு இன்னும் வேலை ஒன்றும் கிடைக்காதது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. எத்தனை நாளைக்கு மாமாவுக்கும் பாரமாயிருக்க முடியும்? நான் பட்டணத்துக்குப் போயாவது வேலை தேடலாம் என்று நினைக்கிறேன். ஒரோரு சமயம்...ஆனால்...உன்னைப் பிரிய வேண்டுமென்றாலே கஷ்டமாயிருக்கிறது......" என்றேன். அப்போது என் குரல் தழதழத்தது.

"அத்தான் கவலைப்பட வேண்டாம். நாம் பிரியவே மாட்டோம். நீங்கள் வேலைக்கு இங்கே இருந்தே எழுதிப் போட்டுக் கொண்டிருங்கள். கண்டிப்பாய் வேலை கிடைக்கும். பட்டணத்திற்குப் போய் வேலை தேடுவதென்றால் லேசான காரியமா?" என்றாள்.

"விஜயா!"

"என்ன அத்தான்?"

"இது நிஜந்தானா? நீ இந்த ஏழைமேல்... ஆசை......"

விஜயா மௌனமாக இருந்தாள். பிறகு, "அத்தான், உங்களுக்குத் தெரியாதா என் உள்ளம். என் அப்பா, அம்மா எதிர்த்தாலும் நான் உங்களைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன். இது நிச்சயம்......" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

"விஜயா......இது நிஜம்தானா? அவ்வளவு சுலபமானதா?"

"அத்தான், சுலபம் என்பதென்ன? உங்களுக்கு எப்போது வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். வேலை கிடைத்ததும் எப்படியும் என் பெற்றோர் மனத்தை மாற்றி விடுவேன்......"

"விஜயா......" என்று அவள் கையைப் பற்றுவதற்கு நெருங்கினேன்.

"நேரமாய் விட்டது அத்தான்" என்று எழுந்து முன்னால் போய்விட்டாள். எனக்கு



அவர் திரும்பினார். "அடே பயலே...... உன்னை இலேசில் விடுவதில்லை. அதை மரியாதையாகக் கொடுத்து விடு. இல்லாவிட்டால் மரத்தில் கட்டி உதைக்கிற உதையில் உன் பிராணனே போய்விடும்" என்றார்.

அதற்குள் விஜயா, "அப்பா......இதென்ன கூத்து? அத்தானாவது திருடவாவது; இது வரை அப்படிச் செய்திருக்கிறாரா? அவரை அப்படிக் கூறிய உங்கள்......" என்று மேலும் கூறுவதற்குள் 'மாமா' பளார், என்று அறைந்தார் அவனுடைய கன்னத்தில். "போ உன்னை ரொம்ப நியாயம் கண்டவள்" என்று பலத்த குரலில் இரைந்தார்.

அவள் 'ஐயோ' என்று அலறித் துவண்டாள்.

"போடா, போ. என் வீட்டுப்படி மிதிக்காதே! திருட்டுப் பயலே" என்று கூவினார். கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்.

அப்போதும் நான் கெஞ்சினேன். "மாமா, நான் உங்கள் தங்கையின் மகன். திருடனில்லை. ஏழ்மையால் என்ன வேண்டுமென்றாலும் கூறலாம் என்று பழியைச் சுமத்தாதீர்கள். என்னை வீட்டை விட்டுத் துரத்த வேண்டுமென்றிருந்தால் 'சாப்பாடு போட முடியாது, வெளியே போ' என்று சொல்லுங்கள். அதற்காக எனக்குத் திருட்டுப் பட்டம் மட்டும் கட்டாதீர்கள். நான் போகிறேன். உங்கள் வீட்டுப் பக்கம்கூட வருவதில்லை. ஆனால் என் விஜயாவின் பேஸரியைத் திருடினேன் என்று மட்டும் சொல்லாதீர்கள்" என்றேன். கண்ணீர் விட்டுக் கதறினேன், புலம்பினேன்.

மாமாவின் மனம் சற்றும் மாறவில்லை. என்னைத் திருடனாகவே எண்ணி விட்டார். என் மனம் உடைந்து விட்டது. என்றாவது ஒரு நாள் உண்மை வெளியாகும் என்று ஆறுதலடைந்து கால்போன போக்கில் போனேன். கடைசியில் சென்னைக்குக் கால் நடையாகவே வந்து சேர்ந்தேன். ஒவ்வொரு கம்பெனியாக அலைந்து பிறகு ஏதோ ஒரு கம்பெனியில் உத்தியோகம் பெற்றேன்.

அன்று முதல் கடமையை உணர்ந்து உழைத்தேன். இரண்டு வருடங்களில் என் உழைப்பு அந்தக் கம்பெனியின் உதவி மானேஜராக என்னை உயர்த்தியது. ஆனாலும் மனத்துக்கு என்னவோ சிறிதும் சமாதானம் இல்லை. என் மாமா என்னைத் திருடனாக எண்ணியது என் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. அந்த அபவாதத்தை எப்படிப் போக்குவது என்று தெரியாமல் தத்தளித்தேன். இன்று நான் அந்த வைர பேஸரியின் விலையைச் சுலபமாகத் திருப்பிக் கொடுத்து விட முடியும். ஆனால் அதை நான் திருடி வந்தேன் என்ற அவருடைய தவறான எண்ணத்தை யல்லவா அது ஊர்ஜிதப் படுத்தும். கடைசியாக விஜயாவும் அதையே உண்மையென்று நம்பி விட்டால்......?

விஜயாவின் ஞாபகம் என்னை விட்டகலாமல் இருந்தது. ஒரோரு சமயம் அவளுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று தோன்றும். ஆனால் என்மேல் இருந்த அபவாதம் நீங்கும் வரை அவளை நான் நினைத்துப் பார்க்க முடியுமா?

ஆனால் இன்று வந்திருக்கும் இக் கடிதம் என் மாசைப் போக்கியது மல்லாமல், என் விஜயாவையும் அல்லவா என்னிடம் மீட்டுத் தந்திருக்கிறது. எல்லாம் எதிர்பாராதது!

'பொறுத்தார் பூமி யாள்வார்' என்று சொல்வார்கள். அதன் உண்மையை இன்று கண்டேன்! "பொறுத்திருப்போம், காலம் மாறும்" என்று மகாகவி பாரதியாரின் மணிமொழி உண்மையானதை இன்று என் வாழ்க்கையில் கண்டேன்.

*　　　*　　　*

கனவிலிருந்து விழித்தேன். மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்தேன்.

அன்புள்ள நாராயணனுக்கு,


ஆசீர்வாதம். உனக்கு என்னிடமிருந்து இக் கடிதம் வருவது ஆச்சரியமாயிருக்கும். நாராயணா, முதலில் என்னை மன்னித்துவிடு. உன்னை நான் எவ்வளவு கொடுமைப் படுத்தி யிருப்பேன். என் தங்கையையும் அவள் நிம்மதியாக இருக்க விடாமல் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டு அவள் கணவன் இறந்து ஆதரவற்ற நிலையில் இருப்பதைக் கண்டு இரக்கப்படுவதற்குப் பதில் கொடுமைகள் புரிந்தேன். பாவம், அவள் நீ நன்றாக வாழ்வதைக் காண வொட்டாமல் அற்பாயுளில் காலமாகும்படி செய்தேன். எல்லாவற்றையும் நீ சகித்துக் கொண்டாய். மகா உத்தமனாய் இருந்தாய். என் மாப்பிள்ளையாக வேண்டிய உன்னைத் திருடன் என்று கூறித் துரத்தினேன். ஏழைகள், கதியற்றவர்கள் திருடத்தான் செய்வார்கள் என்ற அற்ப புத்தி, உன்னைத் திருடன் என்று குற்றம் சாட்டியது. உனக்கும் விஜயாவுக்கும் இருந்த அன்பு எனக்கு முன்னமே தெரியும். இருந்தும் பண ஆசை, அகம்பாவம் எல்லாம் மூர்க்கத்தனமாய் நடத்தியது. ஆனால் இப்போதல்லவா உண்மை தெரிகிறது. வைர பேஸரி கெட்டுப்போன தென்னவோ உண்மைதான். ஆனால் அதை யார் திருடியது தெரியுமா? நீ அதைக் கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாது.

ஆமாம், அது ஒரு எலி. என்ன, புரியாமல் திகைக்கிறாயா? அன்று வெள்ளிக்கிழமை தினம். மறதியாய்ப் பேஸரியைக் கழட்டாமலே என்ணெய் தேய்த்துக் கொண்டவள் உடனே ஞாபகம் வந்து, கழற்றி அதை அலமாரியில் அப்படியே வைத்து விட்டாள். அலமாரியின் சுவரில் எலி வளை ஒன்றிருக்கிறது. அதிலிருந்து எண்ணெய் வாசனை பிடித்த எலி அதைக் கௌவிக் கொண்டு போய் விட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன் பெய்த பெரு மழையில் பின் கட்டுச் சுவர் இடிந்து விழுந்து விட்டது. அதைச் சரியாகக் கட்டுவதற்காகச் செங்கல்லை அப்புறப்படுத்திய போது அந்த வைர பேஸரி சுவரின் வளையில் பத்திரமாக இருந்தது.

இன்னொரு சமாசாரம். விஜயா நாங்கள் என்ன கண்டித்தும், உருட்டியும் மிரட்டியும் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறாள். வைர பேஸரி கிடைத்ததும் உன் இருப்பிடத்தை எப்படியோ கஷ்டப்பட்டுத் தெரிந்து இக் கடிதம் எழுதுகிறேன். நீ உடனே வந்து அவளுக்குப் புத்திமதி கூறி, கல்யாணத்துக்குச் சம்மதிக்கும்படி செய்ய வேண்டும். நீ சொன்னால்தான் கேட்பாள். மாப்பிள்ளை நீதான் என்று நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை.

சந்திரசேகர அய்யர்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10


நாளுக்கு நாள்
அதிக மிருதுவான,
எழிலோங்கும் சருமம்
ரெக்ஸோனாவிலுள்ள கேடில் இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்
கேடில் கலந்த ரெக்ஸோனா சோப்பை தினமும் உபயோ
கியுங்கள். அது உங்கள் சருமத்திற்கு நாளுக்கு நாள் புது
ஆரோக்கியமும் கவர்ச்சியும் தரும்.
Rexona
Rexona
ரெக்ஸோனா
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும்
எண்ணெய்களின் பிரத்யேகக் கலவையின்
ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
RP. 110-50 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. NO. M. 4392
Registered as a newspaper in Ceylon

